சுக நித்திரை இன்றிரவு..



..சக்தி அளிக்கிறது
நாளைக்கு!



காலை உழைப்புக்கு வேண்டிய உடலுரத்துக்கு இன்றிரவு நன்றாகத் தூங்க வேண்டும். படுக்கப் போகுமுன் குவளை "ஓவல்டின்" அருந்தினால், காலையில் சுறுசுறுப்புடன் எழுந்து வேலை செய்யலாம் "ஓவல்டினில்" புத்துயிரளிக்கும் சத்து மிகுந்த பார்லி, பால், கோக்கோ வைட்டமின்கள் அடங்கியிருக்கின்றன.

சாதாரண ஆகாரத்தில் இல்லாத போஷாக்கு "ஓவல்டின்" அளிக்கிறது. ஆரோக்கியத்துக்கும், திட சரீரத்துக்கும் தவறாமல் 'ஓவல்டின்' அருந்துங்கள். போலிகளை வாங்காதீர்

'OVALTINE'

'ஓவல்டின்' மறுநாளுக்கு பலம் தரும் பானம்



டிஸ்ட்ரிபியூட்டர்கள் :

கிரஹாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிமிடெட், தபால் பெட்டி நெ. 1305, மதராஸ், மற்றும் பம்பாய், கராச்சி, கல்கத்தாவிலும். தி இங்கிலிஷ் & ஸ்காட்டிஷ் ஜாயிண்ட் கோவாப்ரேடிவ் ஹோல்சேல் சொஸைட்டி லிமிடெட், கள்ளிக்கோட்டை (மலபார் கோஸ்டுக்கு)

OV.284

அமெரிக்கன் மாடல் ரிவால்வர்

லைசென்ஸ் வேண்டியதில்லை



உங்கள் உயிரையும், சொத்தையும், மானத்தையும், துஷ்டர்கள், விலங்குகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

வீட்டிலும், பிரயாணம் செய்கையிலும் இந்த அழகிய உறுதியான ரிவால்வர் உங்களுக்குச் சிறந்த, நம்பகமான நண்பனாக விளங்கும். ஒன்றன்பின் ஒன்றாக தானே 6 தரம் சுடுவதற்கு 6 ரவைகள் பொருந்திய இது, அசல் அமெரிக்கன் பிஸ்டல்களுக்குச் சமமானது. 15 அவுன்ஸ் கனமும், 9 அங்குல நீளமும் உள்ள இது நெருப்பைக் கக்கிக்கொண்டு பயங்கர சப்தத்துடன் வெடிக்கிறது. இன்றே இதில் ஒன்றுக்கு ஆர்டர் கொடுங்கள். குறைந்த விலையுள்ள இந்த மெய்க்காப்பாளன் இன்றி ஒரு கணமும் இருக்காதீர்கள்.

ரகம் நெ. 222 ரூ. 6/8
,, 333 ரூ. 7/8
,, 444 ரூ. 8/8

மேல்கொண்டு 4 டஜன் ரவைகள் விலை ரூ. 4/8. பிஸ்டல் உறை கொண்ட தோல் பெல்ட் ஒன்றின் விலை ரூ. 5/- துப்பாக்கி ஆயில் ஒரு பாட்டில் விலை ரூ. 1/- கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.


WILSON TRADING CORPORATION
P. B. 247, CAWNPORE (U. P.)

ரூ. 22-8-0 பெறுமானமுள்ள ஒரு கைக் கெடியாரமும் ஒரு பவுண்டன் பேனாவும் இ

உயர்தர கைக் கெடியாரங்கள்

எல்லா கெடியாரங்களும் உயர்ந்த ரகம். ஸ்விஸ் தயாரிப்பு. உறுதியுள்ள லிவர் மெக் னிஸம். நீடித்து உழைப்பதுடன் சரியாக மணி காட்டும். ஐந்து வருஷங்களுக்கு உத் வாதம். படத்தில் காட்டியிருப்பதைவிட மிகவும் அழகானவை. ஒவ்வொன் ப்ளாஸ்டிக் பட்டையுடன், வெல்வெட் பெட்டியில் அமைக்கப்பட்டுள்ள






நெ. 201 வட்ட வடிவம்

வட்டவடிவம் க்ரோமியம் 17/8/- உயர்ந்த ரகம் 18/8
3 ஜுவெல்கள் 20/8/- 5 ஜுவெல்கள் உ. ர. 22/8/-
7 ,, 28/- ரோல்ட்கோல்டு 38/-
15 ,, 35/- ,, ,, 58/-

நெ. 202 தட்டை வடிவம்

5 ஜுவெல்கள் 28/- உயர்ந்த ரகம்
5 ,, ரோல்ட்கோல்டு 10 வருஷ உத்தரவாதம்
7 ,, 35/- ரோல்ட்கோல்டு
15 ,, 50/- ,, ,,





நெ. 203 வளைந்த வடிவம்

5 ஜுவெல்கள் க்ரோமியம் 30/- உயர்ந்த ரகம் 32/-
5 ,, ரோல்ட்கோல்டு 10 வருஷ உத்தரவாதம் 40/-
7 ,, க்ரோமியம் 40/- ரோல்ட்கோல்டு 45/-
15 ,, ,, 52/- ,, ,, 60/-

நெ. 204 நீண்ட சதுரகோண வடிவம்

5 ஜுவெல்கள் க்ரோமியம் 34/- உயர்ந்த ரகம்
5 ,, ரோல்ட்கோல்டு 10 வருஷ உத்தரவாதம்
7 ,, க்ரோமியம் 42/- ரோல்ட்கோல்டு
15 ,, ,, 54/- ,, ,,

தபால் செலவு அணா 12 பிரத்தியேகம். ஒவ்வொரு கைக் கெடியார ஆர்டருக்கும் அமெரிக்கன் பேனா இனாமாக அளிக்கப்படும். சேர்ந்தாற்போல் மூன்று கைக் கெடியாரங்களுக்கு ஆர்டர் செய்தால் ரூ. 22-8-0 பெறுமானமுள்ள ஒரு கைக் கெடியாரம் இனாமாக அளிக்கப்படும். அல்லது விலையில் பன்னிரண்டரை சத விகிதம் தள்ளுபடி செய்யப்ப

STANDARD WATCH CO. - Post Box No. 11419 - CALCUTTA

டயபெப்ஸின்



ஆகாரம் சரிவர ஜீரணமாக டயஸ்டாஸ், பெப்ஸின் என்னும் இருவகைப் பொருள்கள் அத்யாவசியமானவை. இவைகள் இரண்டும் உயர்ந்த ரசாயன முறையில் சேர்ந்தது தான் டயபெப்ஸின். ஆகாரத்துக்குப் பின் ஒரு டீஸ்பூன் டயபெப்ஸின் உட்கொண்டால் ஜீரணச் செயல் தக்ஷணமே ஆரம்பித்து, பாக்கி ஜீரண வேலை வயிற்றுக்கு மிக எளிதாகிறது. உங்கள் ஆகாரத்தின் முழுப் போஷணையும் அடைய இதுவே சிறந்த மார்க்கம்.

யூனியன் டிரக், கல்கத்தா

ஏஜண்டுகள்: அப்பா அண்ட் கோ., மதராஸ் மற்றும் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

UNION DRUG. CALCUTTA

பட்டுத் துணி கெஜம் ரூ. 1-0-0

•



நீங்கள் எந்த இடத்திலாயினும் பட்டுத் துணியை கெஜம் 1-க்கு ரூ. 1-0-0 விதம் வாங்க முடியுமா? நாங்கள் கடை விலையைவிட மிக மலிவான விலைக்கு சப்ளை செய்ய ஒப்புக் கொள்வோம். துணி மிகச் சிறப்பாயிருக்கும். சகல உபயோகத்திற்கும் உகந்தது. வெள்ளை அமெரிக்கன் ஸில்க் பாரசூட் முழுத் துண்டுகள் 12 (காலிஸ் ஜாயிண்ட் இன்றி ஸில்க் ஸேல் உடன் முழு பாரசூட்டும் ரூ. 12 விதம் கிடைக்கும். பாக்கிங் இலவசம். தபாற் செலவு ரூ. 1-11-0 தனி. மூன்று முழு பாரசூட்டுகளின் அதாவது 36 (காலிஸ்) பீஸ்களின்) குறைக்கப்பட்ட விலை ரூ. 33. தபாற் செலவு ரூ. 3-15-0. முன்பெல்லாம் இதன் விலை ரொம்பவும் அதிகம். ஆனால் தற்போது ஸ்டாக்குகளைத் தீர்ப்பதற்காக மொத்த விலைப்படியே கொடுக்கத் தீர்மானித்துள்ளோம். தபாற் செலவு உள்பட மூன்று பாரசூட்டுகள் உங்கள் வீட்டில் வந்து சேர ரூ. 36-15-0 மட்டுமே செலவழிக்கிறீர்கள். குறைந்த அளவே ஸ்டாக் இருப்பதால் இன்றே ஆர்டர் செய்து பயனடையுங்கள். தாமதித்தால் ஸ்டாக் தீர்ந்து ஏமாற்றமடைய நேரிடும். அமெரிக்காவிலிருந்து இனி சப்ளை எதிர்பார்க்கப்படவில்லை.

•

AMERICAN TRADING COMPANY REGD. (K. W. M.)
Famous Dealers of Silk Cloth, JULLUNDUR CITY



குறைந்த நிர்வாகச் செலவில் இடைஞ்சலின்றி இலகுவாக வருஷக் கணக்கில் சதா உழைக்க பாரதி அச்சு இயந்திரத்திற்கு நிகர் வேறெதுவும் கிடையாது. பாரதி இயந்திரம் ஒவ்வொன்றும் இயந்திர நுணுக்கத்தில் அதி உன்னதமானது. விசேஷ பலமுள்ள வார்ப்பு இரும்பினால் செய்யப்பட்ட புஷ்கள், ராடுகள், ட்ரைவிங் ஷாப்டுகள், முதலியவை, வெகு நேர்த்தியாக உருவாக்கப் பட்டிருக்கின்றன. சுயமாகவே ஓட்டக்கூடிய இணைப்புகள் தேவையானபோது சப்ளை செய்யப்படும்.

டெமி பிளாட், அரை டெமி க்ரௌன், புல்ஸ்கேப் போலியோ ஆகிய சைஸ்களில் கிடைக்கும்.

BHARATI
Printing Machine

BHARATI

- மணிக்கு 2300 பிரதிகள் அச்சாகும்
- அப்பழுக்கற்ற மை பூச்சு அமைப்பு

தி இந்தியா மெஷினரி கோ., லிமிடெட்
29, ஸ்ட்ராண்ட் ரோடு :: கல்கத்தா

மானேஜிங் ஏஜண்டுகள் : தாஸ் பிரதர்ஸ்

போன் : கல்கத்தா - 3385 (3 லைன்கள்) தந்தி "MARVELLOUS"

AIR STEAMER & GENERAL AGENCIES LTD.

தூத்துக்குடி - கொழும்பு கப்பல்

போக்குவரத்து 9-2-49 முதல் ஆரம்பம்

•

கவர்னர் ஜெனரல் **சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்** அவர்களால் ஆரம்ப வைபவமும், கப்பலுக்கு **வ. உ. சிதம்பரம்** பெயரிடும் வைபவமும் தூத்துக்குடியில் வைத்து நடைபெறும்.

ஆரம்ப விழாவில் சென்னை பிரதமர் **ஸ்ரீ ஓ.பி. ராமசாமி ரெட்டியார்**, மராமத்து இலாக்கா மந்திரி **ஸ்ரீ பக்தவத்ஸலம்**, தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் **ஸ்ரீ காமராஜ்** ஆகியவர்களும் மற்றும் மந்திரிகளும் கலந்து கொள்வார்கள்.

தூத்துக்குடியிலிருந்து பிரதி செவ்வாய் வெள்ளிக்கிழமைகளிலும், கொழும்பிலிருந்து பிரதி திங்கள் வியாழக்கிழமைகளிலும் சர்வீஸ் ஏற்பாடு செய்திருக்கிறது.

பிரயாணிகளும் ஏற்றுமதி வியாபாரிகளும் முன்கூட்டியே கம்பெனியுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6, South Beach Road
TUTICORIN


BAHU & Co.,
Managing Agents

கல்கி பொருளடக்கம்

மலர் 9 இதழ் 28 | பிப்ரவரி 6 | சர்வதாரி ௵ தை 24

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

இறங்கி விடுங்கள்!



சர்க்கார் நிர்வாகம்
உற்பத்தி சக்தி
நீங்கள் இப்படி முரட்டுத்தனம் செய்தால் நான் எப்படி விமானத்தை ஓட்டுவது?

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதி | இதழ் 28

என்ன சேதி?

பாகிஸ்தானில் 91

காங்கிரஸ் தலைவர்களின் மாசற்ற தேச பக்தியினாலும், தியாகத்தினாலும் இந்தியா சுதந்திரம் அடைந்தது. இந்திய முஸ்லிம் தலைவர்களில் தேசபக்தர்கள் காங்கிரஸில் கலந்திருந்தார்கள். பாகிஸ்தான் தலைவர்களோ, ஏற்கெனவே வாழ்நாளெல்லாம் பிரிட்டிஷ் சர்க்காரோடு உறவு பூண்டு பட்டம் பதவி தேடுவதில் முனைந்திருந்தவர்கள். காங்கிரஸின் விடுதலைப் போராட்டத்துக்கு முட்டுக்கட்டை போடும் முறையையும் வகுப்புத் துவேஷ வெறியையும் சாதனங்களாகக் கொண்டு அவர்கள் பாகிஸ்தானை அடைந்தார்கள். இந்த முறைகளைக் கையாண்டதின் பலனை அதற்குள்ளேயே பாகிஸ்தானில் காண்கிறோம். பாகிஸ்தான் இயக்கத்துக்கே மூல ஸ்தானமாக இருந்து வந்த பிரதேசம் பஞ்சாப். அந்தப் பஞ்சாப் மாகாணம் இரண்டாகப் பிரிந்து, மேற்குப் பஞ்சாப் பாகிஸ்தானில் சேர்ந்திருக்கிறது. அந்த மாகாணத்தின் கவர்னராக இப்போது பதவி வகிப்பவர் முன்னம் அடக்குமுறை ஆட்சிக்குப் பெயர்போன ஸர் மூடி என்னும் வெள்ளைக்காரர். அங்கு இத்தனை நாளும் மந்திரிசபை நடத்தியவர்கள் பாகிஸ்தான் பிரசாரத்தின் முன்னணியில் நின்ற மாம்தாத் நவாப் முதலியவர்கள். இப்படிப்பட்ட முன்னணிப் பாகிஸ்தான் தலைவர்கள் அடங்கிய மந்திரி சபை சமீபத்தில் பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் உத்தரவினால் கலைக்கப்பட்டது. காரணம், அந்த மந்திரி சபையில் லஞ்ச ஊழல் மிதமிஞ்சிப் போய்விட்டது என்பதாகும். தீவிர முஸ்லிம் லீக் தலைவர்கள் அடங்கிய மந்திரி சபை கலைக்கப்பட்ட பிறகு, இப்போது மேற்குப் பஞ்சாப் மாகாணம் 91-வது பிரிவின்படி வெள்ளைக் கவர்னர் ஸர் மூடியின் யதேச்சாதிகார ஆட்சியில் இருந்து வருகிறது! யுத்தத்தின்போது காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜிநாமா செய்ததின் பயனாக இந்திய மாகாணங்கள் எந்த 91-பிரிவு ஆட்சியில் இருந்ததோ, அத்தகைய கவர்னர் யதேச்சாதிகார ஆட்சி இப்போது பாகிஸ்தான் கேந்திர ஸ்தானமாகிய மேற்குப் பஞ்சாபில் அமுலுக்கு வந்திருக்கிறது! இதிலிருந்து தன்னலமற்ற தியாகசீலர்களான காங்கிரஸ் தலைவர்களுக்கும் வகுப்புத் துவேஷ பாகிஸ்தான் தலைவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை இந்திய தேசம் முழுவதிலுமுள்ள இந்திய முஸ்லிம்கள் நன்கு உணரலாம் அல்லவா?

கைவிடோம்!


"மகாத்மா காந்தி நம்மை விட்டுப் பிரிந்தாரென்றாலும், அவர் எப்போதும் நம்மிடையே இருந்து வருகிறார். நம் எல்லோருடைய வாழ்க்கையையும் பிரகாசிக்கச் செய்த தீபம் சென்ற வருஷம் அணைந்ததுபோல் நமக்குத் தோன்றியது. ஆனால், அந்தத் தீபம் அணையவில்லை. அது முன்னரைக் காட்டிலும் இப்போது அதிகமான பிரகாசத்துடன் விளங்கி வருகிறது. காந்தி மகானின் உபதேசம் சதாகாலமும் நமது செவிகளில் ஒலித்து வருகிறது" என்று புனித தினமான சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று பண்டித ஜவாஹர்லால் நேரு கூறினார். புது டில்லியிலுள்ள காந்திஜியின் சமாதியைத் தரிசிப்பதற்காகப் பத்து லட்சம் ஜனங்கள் சென்றனர். காந்திஜி கடைசி முறை "ஹே ராம்" என்று கூறிய வண்ணம் கீழே விழுந்த இடத்தில் புஷ்பங்கள் மலைபோல் குவிந்து கிடந்தன. தேவ தானவ கந்தர்வர்கள் புஷ்பமாரி பெய்ததுபோல் தோன்றியது. இந்தியாவெங்கும், உலகமெங்கும் அன்று காந்தி மகானை நினைத்து பஜனைகளும் பூஜைகளும் பிரார்த்தனைகளும் பொதுக் கூட்டங்களும் நடந்தன. "காந்திஜியின் உடலைக் கை நழுவ விட்டுவிட்டோம். ஆனால், அவருடைய புனித கொள்கைகளை எக்காலத்திலும் கைவிடப் போவதில்லை" என்று நமது மாபெரும் தலைவர்கள் பிரதிக்ஞை செய்து கொண்டனர்.

"நமக்குச் சக்தியைக் கொடுத்த, சத்தியத்தை உபதேசித்த நமது அருமைத்


தலைவரை வணங்குவோம். நம் தாய் நாட்டின் திருப்பணிக்காக நம்மை இன்று மீண்டும் அர்ப்பணம் செய்து, நவ இந்தியாவை நிர்மாணிப்போம்'' என்று ஜவாஹர்லால்ஜி உள்ளம் உருகிக் கூறினார். ''நம் உள்ளத்தில் உள்ள கடவுள் அன்புதான். நமது எண்ணங்களும் வார்த்தைகளும் செய்கைகளும் அன்பில் திளைத்துக் கொண்டிருக்க வேண்டும். அன்பையும் பிறருக்கு உதவி செய்வதையும் அடிப்படையாகக் கொண்ட ஒவ்வொரு, செய்கையும் காந்திஜிக்குச் செய்யும் சிராத்தமாகும்'' என்றார் ராஜாஜி. ''ஏழைகளிடத்திலும் அவர்களுடைய வறுமையிலும் கஷ்டங்களிலும் கடவுளைக் கண்ட காந்திஜியின் அடிச்சுவடுகளைப் பின் பற்றுவோம்'' என்று சர்தார் பட்டேல் விம்மிக் கொண்டே கூறினார், காந்திஜியின் கொள்கைகளையும் காந்திஜியினால் கிடைத்த சுதந்திரத்தையும் எக்காலத்திலும் கைவிடோம் என்று பிரதிக்ஞை செய்துள்ள நமது இணையற்ற தலைவர்களைக் கைவிடோம் என்று இந்தியாவிலுள்ள முப்பது கோடி மக்களும் பிரதிக்ஞை செய்து கொள்ளவேண்டும்.

குறை தீர்ந்தது!

நம் ராஜாஜி கவர்னர் ஜெனரல் பதவியை ஏற்றுக்கொண்ட பின் இரண்டாவது தடவையாகத் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்கிறார் என்பதைக் கேட்கத் தமிழ் மக்கள் குதூகலம் அடைவார்கள். அதிலும் தமிழ் நாட்டில் ஒரு கப்பலை வெள்ளோட்டம் விடுவதற்காக வருகிறார் எனில் அவர்களுடைய குதூகலம் பன்மடங்கு அதிகமாகும். அது சாதாரணமான ஒரு கப்பல் அல்ல. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் முதன் முதலாக இந்தியக் கப்பலை ஓட்டி பிரிட்டிஷாரைத் திடுக்கிடச் செய்தவரும் தென்னாட்டுத் திலகருமான ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையின் பெயரைத் தாங்கப் போகும் பாக்கியம் பெற்ற கப்பல்! அந்தக் கப்பலின் நாமகரண வைபவத்தையும் வெள்ளோட்ட வைபவத்தையும் நடத்தி வைக்கவே ராஜாஜி தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்கிறார். அடுத்த புதன்கிழமை தூத்துக்குடியில் மேற்படி வைபவம் நடைபெறுகிறது. இந்தியத் தாயின் மணிக் கொடியுடன் கடலில் இறங்கப் போகும் ''வ. உ. சிதம்பரம் பிள்ளை'' கப்பலைக் கண்டு பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தி யடையும்; தமிழ் மகா ஜனங்களின் மனம் குளிரும்; கப்பலோட்டிச் சிறை சென்ற தியாகிக்கு உற்றதொரு ஞாபகச் சின்னம் இல்லையே என்ற குறையும் மறைந்து விடும்.



வேலை செய்வோம் வாருங்கள்!



இன்று உலகத்திலுள்ள நாடுகளின் மத்தியில் நமது இந்தியா தேசத்தின் கௌரவம் உயர்ந்து நிற்கிறது.

உலகத்தில் சம பாதியாகிய ஆசியாக் கண்டத்துக்கு இந்தியாவின் தலைமை ஊர்ஜிதமாகி யிருக்கிறது.

இந்தோனேஷியாவில் டச்சுக்காரரின் அதிக்கிரமத்தைக் கண்டிப்பதற்காகப் புதுடில்லியில் கூடிய பத்தொன்பது கீழ்நாடுகளின் மகாநாடு உலகத்தின் முன்னிலையில் இந்தியாவின் பெருமையைத் தூக்கியிருக்கிறது.

ஆசியாக் கண்டத்துக்கு மட்டுமேயன்றி உலகத்துக்கே வழிகாட்டித் தலைமை வகிக்கும் கௌரவம் இந்தியாவைத் தேடி வரக்கூடும் என்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன.

இத்தகைய உயர்வும் கௌரவமும் இந்தியா தேசத்துக்கு ஏற்பட்டிருப்பது அமர பதவியை அடைந்த காந்தியடிகளினாலேயும் ஜவாஹர்லால்ஜி, ராஜாஜி, சர்தார் வல்லபாய் முதலிய அரும் பெரும் தலைவர்கள் ராஜ்ய பாரத்தை வகித்து வருவதினால்தான்.

மேற்கூறிய ஒப்பற்ற தேசத் தலைவர்களுக்குப் பொதுமக்கள் எல்லா விதத்திலும் உதவி செய்து வர வேண்டும்.

உதவி செய்ய முடியா விட்டால் இடையூறு செய்யாமலாவது இருக்க வேண்டும்.

நாட்டில் எந்தத் துறையிலும் தற்சமயம் வேலை நிறுத்தம் நிகழ்வது தேச முன்னேற்றத்துக்குப் பெருந் தீங்கு விளைவிக்கும் என்று நம் தலைவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்லி வருகிறார்கள்.

எல்லோரும் தங்களுடைய பூரண சக்தியையும் பயன்படுத்தி வேலை செய்து வந்தால்தான் இந்தியா அடைந்திருக்கும் பூரண சுதந்திரத்தின் பூரண பயனையும் அடையலாம் என்று உபதேசித்து வருகிறார்கள்.

• • •

பிரிட்டிஷ் ஆட்சியின் காலத்தில் இந்தியாவில் பரவிய நவநாகரிக மோகங்களில் ஒன்று, கிரிக்கெட் விளையாட்டில் மோகம். சென்ற வாரத்தில் சென்னையில் சில தினங்கள் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி நடந்தது. அமெரிக்காவை யடுத்துள்ள வெஸ்ட் இண்டீஸ் தீவிலிருந்து வந்த கிரிக்கெட் 'கிலாடி'களும், இந்தியாவின் பிரசித்திபெற்ற கிரிக்கெட் விளையாடிகளும் போட்டியிட்டு ஆடினார்கள். நடுவில் ஒருநாள் அதாவது ஜனவரி 30உ காந்திமகானின் சிராத்த தினம் என்பதை முன்னிட்டு ஆட்டத்தை நிறுத்தி வைத்தார்கள். அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால், மறுநாள் திங்கட் கிழமை கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு சர்க்கார் விடுமுறை விடவேண்டும் என்று நம் பிரதம மந்திரி ரெட்டியாரிடம் யாரோ ஒரு பெரிய உத்தியோகஸ்தர் போய்ச் சொன்னாராம்.

அதற்குக் கனம் ரெட்டியார், ''அடிக்கடி விடுமுறை வேண்டும் என்று வருகிறீர்களே தவிர, 'விடுமுறை வேண்டாம்; வேலை செய்கிறோம்' என்று சொல்வதற்கு ஒரு தடவையாவது வந்திருக்கிறீர்களா? தேசத்துக்காக இந்தச் சமயம் வேலை செய்யாவிட்டால் வேறு எப்போது செய்வது? விடுமுறை கொடுக்க முடியாது!'' என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டாராம்.

கனம் ரெட்டியாரின் பதிலை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். தேசபக்தியும் சுதந்திரப் பற்றும் உள்ள இந்தியர்கள் எல்லாரும் ''விடுமுறை வேண்டாம்; வேலை செய்கிறோம்!'' என்று சொல்லி முன் வரவேண்டிய காலம் இது. அதற்குப் பதிலாக என்ன காண்கிறோம்? எதற்கெடுத்தாலும் விடுமுறை வேண்டுவோரைக் காண்கிறோம். எதற்கெடுத்தாலும் வேலைநிறுத்தம் செய்வோரைக் காண்கிறோம். வேலைநிறுத்தம் செய்யும்படி தூண்டுவோரையும் பார்க்கிறோம். இவர்களெல்லாரும் வேண்டுமென்று தேசத் துரோகம் செய்கிறார்கள் என்று யாரும் சொல்லவில்லை. அறியாமையினாலும் தீர்க்க திருஷ்டி யில்லாமையாலும் அப்படியெல்லாம் தவறான காரியம் செய்கிறார்கள் என்று நம் தேசத் தலைவர்கள் சொல்கிறார்கள்.

நமது சொந்த இந்திய சர்க்காரில் ரயில்வே உதவி மந்திரி உத்தியோகம் வகிக்கும் ஸ்ரீ கே. சந்தானம் சென்ற வாரத்தில் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்திருந்தார். தமிழ் நாட்டில் பல இடங்களுக்குச் சென்றிருந்தார். ஆயிரக் கணக்கான பொது மக்கள் அடங்கிய கூட்டங்களில் பேசினார். ரயில்வேக்களில் செய்திருக்கும் சீர்திருத்தங்களையும் செய்யப் போகும் சீர்திருத்தங்களையும் எடுத்துச் சொன்னார். ரயில்வே நிர்வாகத்தில் குற்றங் குறைகளைக் குறிப்பிட்டுச் சொன்னால் கவனித்து நிவர்த்தி செய்வதாக உறுதி கூறினார்.

ஆங்காங்கு ரயில்வேத் தொழிலாளர்களையும் சந்தித்துப் பேசினார். தேசத்தில் மற்ற இலாகா உத்தியோகஸ்தர்களையும் தொழிலாளிகளையும் விட ரயில்வே உத்தியோகஸ்தர்களும் தொழிலாளிகளும் அதிகச் சம்பளமும் வசதிகளும் பெறுவதைச் சுட்டிக் காட்டினார். ரயில்வே வருமானம் மொத்தம் 200 கோடி ரூபாயில் 150 கோடி ரூபாய் சம்பளமாகக் கொடுக்கப் படுகிறது என்று தெரியப்படுத்தினார். ரயில்வேக்கள் இந்திய மக்களின் பொதுச் சொத்து என்றும், இந்திய மக்களின் பொதுப் பணம் 800 கோடி ரயில்வேக்களில் இருக்கிறது என்றும் விளக்கிச் சொன்னார். ரயில்வேத் தொழிலாளருக்கு மேலும் சம்பளம் கூட்டிக்கொடுப்பது என்றால், ஒன்று அதிக வரிவிதிக்க வேண்டும் அல்லது அதிகமாகக் காகித நோட்டுகளை அச்சிட்டுக் கொடுத்துச் சீனாவைப்போல் சர்வ நாசத்தைத் தேடிக் கொள்ளவேண்டும் என்று சுருங்கச் சொல்லி விளங்கவைத்தார்.

எல்லாவற்றிலும் முக்கியமாக ஸ்ரீ கே. சந்தானம் சொன்னது என்னவென்றால்: "இந்தத் தலைமுறையைச் சேர்ந்த நாம் ஓயாமல் உழைத்து வேலை செய்யவேண்டும். வேலை செய்து வேலை செய்து உயிரை விடுவதற்கும் தயாராயிருக்க வேண்டும். அப்போதுதான் நம் பிற்கால சந்ததிகள் சந்தோஷமாக வாழ முடியும்" என்றார்.

ஸ்ரீ கே. சந்தானம் "சாவதற்குத் தயாராக உழைத்துப் பாடுபட வேண்டும்" என்று கூறியது வெறும் விந்நியாசமாகக் கூறிய காரியமல்ல.

புதுடில்லி நகரில் அரசாங்கப் பொறுப்பு வகிக்கும் நமது தலைவர்கள் உண்மையிலேயே உழைத்து உழைத்து உயிர் போனாலும் போகட்டும் என்றுதான் வேலை செய்து வருகிறார்கள். பண்டித ஜவாஹர்லால் அப்படி, சர்தார் வல்லபாய் அப்படி, — ஸ்ரீ கே. சந்தானம் அவர்களுமே அப்படித்தான். இதையெல்லாம் நிதரிசனமாகப் பார்த்துவிட்டே நாம் சொல்லுகிறோம்.

நம் உத்தமத் தலைவர்கள் தாங்கள் கடைப்பிடிக்காத காரியத்தை மற்றவர்களுக்கு உபதேசிக்கக் கூடியவர்கள் அல்ல. அவர்கள் பொது ஜனங்களையும் தொழிலாளிகளையும் பார்த்து, "போங்கள்! நீங்கள் போய் வேலை செய்யுங்கள்!" என்று சொல்லவில்லை. "வாருங்கள்! வேலை செய்வோர் வாருங்கள்!" என்றுதான் சொல்கிறார்கள்.

* * *

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு நடந்திருக்கும் வேலைநிறுத்தம் எதுவும் உருப்படவில்லை. வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு நன்மை எதுவும் ஏற்படவில்லை; தீமை உண்டாகியிருக்கிறது. நாட்டுக்கும் பொது மக்களுக்கும் தீமை உண்டாகியிருக்கிறது.

என். ஜி. ஓ.க்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். பலன் ஒன்றும் விளையவில்லை. முன்னே என். ஜி. ஓ. சங்கத்துக்கு இருந்த வலிமை வேலை நிறுத்தத்தினால் நஷ்டமாகி விட்டது. இப்போது அடக்க ஒடுக்கத்துடனே என். ஜி. ஓ. உத்தியோகஸ்தர்கள் வேலை செய்து வருகிறார்கள்.

கோயமுத்தூர் ஆலைத் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்கள் அடைந்த லாபம் ஏதாவது உண்டா? ஒன்றும் இல்லை. முதலாளிகள்தான் நன்மையும் லாபமும் அடைந்திருந்தார்கள். ஆலை இரண்டு மாதம் பூட்டிக் கிடந்தபோது ஆலை முதலாளிகளிடம் கையிருப்பிலிருந்த பருத்தியின் விலை ஒன்றுக்கு இரண்டு மடங்கு ஏறிவிட்டது. ஆகையால் ஆலையில் வேலை நடவாமலும் தொழிலாளிகளுக்குச் சம்பளம் கொடுக்காமலும் முதலாளிகள் கோடிக் கணக்கில் லாபம் சம்பாதித்து விட்டார்கள்.

தொழிலாளிகள் அடைந்த நன்மை என்ன? ஒன்றுமில்லை. ஏற்கனவே தொழிற் சங்கங்களுக்கு இருந்த சக்தியெல்லாம் சிதறி நஷ்டமாகி விட்டது.

* * *

சமீபத்தில் சென்னைமா நகரில் சர்க்கார் பஸ் தொழிலாளரின் வேலை நிறுத்தம் நடந்தது. இதைப் போல் அர்த்தமற்ற, பயனற்ற, முழுதும் தீமையான வேலை நிறுத்தத்தைத் தொழிலாளர் இயக்கத்தின் சரித்திரத்திலேயே காண முடியாது.

ற்கெனவே, சர்க்கார் பஸ் நிர்வா
தில் உள்ள ஊழல்களுக் கெல்லாம்
ணம் சர்க்கார் அதிகாரிகளின் அசட்
தனந்தான் என்று பொதுமக்கள்
ளிக் குறை கூறி வந்தார்கள்.

இப்போது அந்த அபிப்பிராயம் மாறி
டது. "ஊழல்களுக் கெல்லாம்
ரணம் பஸ் தொழிலாளரின் நியாய
ற நடத்தைதான்" என்று எண்
த் தொடங்கியிருக்கிறார்கள்.

தொழிலாளர்கள் அடைந்த நன்மை
ாவது உண்டா? ஒன்றுமேயில்லை.
மையும் நஷ்டமுந்தான் ஏழைத்
ாழிலாளர்களுக் குக் கிட்டியது.

* * *

ஏற்கெனவே பிரிட்டிஷ் ஆதிக்யத்
க்கு உட்பட்ட இந்தியாவில், எந்தத்
ாழிலாளிகள் எதற்காக வேலைநிறுத்
செய்தாலும் அது சர்க்காருக்குத்
ாலை கொடுப்பதாயிருந்தது. அத
ல் நியாய அநியாயங்களைப் பாரா
ம் பொது மக்கள் வேலை நிறுத்தங்
ள ஆதரித்தார்கள்; வேலை நிறுத்தக்
ார்களை உற்சாகப் படுத்தினார்கள்;
வர்களுக்கு உதவியும் செய்தார்கள்.

ஆனால் அரும்பாடு பட்டுச் சுதந்திரம்
டைந்திருக்கும் இந்தியாவில் எந்த
மான வேலை நிறுத்தத்தையும்
ாது மக்கள் ஆதரிக்க மாட்டார்கள்.

பொது மக்கள் ஆதரியாத எந்த
லை நிறுத்தமும் வெற்றி அடைய
டியாது; நிச்சயமாகத் தோல்வியே
டையும். தொழிலாளிகள் வீணை
ட்டத்துக்கு உள்ளாவார்கள். தேசத்துக்கும் பொதுவான நஷ்டம் உண்டாக்கியதுதான் மிச்சமாகும்.

பார்க்கப்போனால், எல்லாவிதத் தொழிலாளிகளும் பொது மக்களிலே சேர்ந்தவர்கள்தான். அவர்களுடைய பெண்டு பிள்ளைகளும் அப்படித்தான்.

ஆகையால் வேலைநிறுத்தம் செய்வோர் தேசத்துக்கு மட்டும் தீங்கு செய்கிறார்களில்லை; தங்களுக்கும் தீங்கு செய்து கொள்கிறார்கள்; தங்களுடைய பெண்டு பிள்ளைகளுக்கும் தீங்கு செய்கிறார்கள்.

* * *

கொஞ்ச காலமாக ரயில்வேத் தொழிலாளர் வேலைநிறுத்தம் பற்றிப் பேசப்பட்டு வருகிறது.

ரயில்வேத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு எந்தவிதமான நியாயமும் இப்போது கிடையாது.

ரயில்வேத் தொழிலாளர் இப்போது வாங்கும் சம்பளத்தின் அளவு வேறு எந்த இலாகாத் தொழிலாளரும் வாங்குவதில்லை. அவ்வளவு சம்பளம் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்குக் கிடைப்பதில்லை; என். ஜி. ஓ. உத்தியோகஸ்தர்களுக்குக் கிடைப்பதில்லை.

இதனாலெல்லாம் ரயில்வேத் தொழிலாளருக்கு இப்போது கொடுக்கப்படும் சம்பளம் போதும் என்று நாம் சொல்லவில்லை. பேஷாக இன்னும் அதிகம் கொடுக்க வேண்டியதுதான். நூறு ரூபாய்க்குக் குறைவான வருமானம் இந்திய நாட்டில் யாருக்குமே இருக்கக் கூடாது. ரயில்வேத் தொழிலாளருக்கு மட்டுமல்ல; நாட்டில் உள்ள எல்லா

எகிப்து பிரதிநிதியின் பரவசம்



புதுடில்லியில் கூடிய அகில ஆசிய தேசங்களின் மகாநாட்டுக்கு எகிப்து சர்க்காரின் பிரதிநிதியாக மேன்மை தங்கிய இன்மேல் கமால் பே என்பவர் வந்திருந்தார். அவர் மேற்படி மகாநாட்டின் இறுதியில், பிரதிநிதிகளின் சார்பாக இந்திய சர்க்காருக்கு நன்றி செலுத்தும்போது கூறியதாவது:—

"இந்தியாவின் கவர்னர் ஜெனரல் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் எளிய வாழ்க்கை ஆத்ம பரவசத்தை உண்டாக்குகிறது. அவ்வளவு பெரிய மாளிகையில் அவர் எளிய உடை தரித்து உலாவுவதைக் கண்டு பிரமித்துப் போனேன். ஆசியா உலகத்துக்கு அளித்திருக்கும் உன்னதமான இலட்சியங்களுக்கு ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் சிறந்த சின்னமாக விளங்குகிறார். அத்தகையவர் இந்த மகத்தான இந்திய நாட்டின் அரசாங்கத் தலைமைப் பீடத்தில் வீற்றிருப்பது காந்தி மகாத்மா போதித்த கொள்கைகளின் வெற்றிக்கு அறிகுறியாகும். பண்டித நேருவும் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரும் உயர்ந்த செயலுக்கும் சிந்தனைக்கும் பிரதிநிதியாக விளங்குகிறார்கள். இப்படிப்பட்ட பெரியோர் இருவர் இந்தியா தேசத்துக்குத் தலைமை வகித்து ஆசியாவை வருங்கால மகோந்நதத்துக்கு அழைத்துப் போகும் காட்சி அற்புதமானது."

வகைத் தொழிலாளருக்கும் கிராமங்களில் வாழும் குடியானவர்களுக்கும் சேர்த்தே சொல்லுகிறோம்.

எல்லாருக்கும் வருமானம் அவ்வளவு உயரவேண்டுமானால், நாட்டின் செல்வ நிலை உயரவேண்டும்; நாட்டில் பொருள் உற்பத்தி அதிகமாக வேண்டும்; சர்க்காரின் வருமானம் பெருகவேண்டும்.

வேலைநிறுத்தம், முக்கியமாக ரயில் வேலை நிறுத்தம், மேற்கூறிய காரியங்களுக்கு விரோதமாகும். நாட்டின் பொருள் உற்பத்தியைத் தடுப்பதாகும்; நாட்டின் செல்வ நிலையைப் பாதிப்பதாகும்; சுதந்திர இந்திய சர்க்காரின் வருமானத்தைக் குறைப்பதாகும்.

ஆகையால் வேலைநிறுத்தம் செய்யும் ரயில்வேத் தொழிலாளர் சுதந்திர இந்தியாவுக்குத் துரோகம் செய்கிறவர்களாவார்கள்; தங்களுடைய சொந்தப் பெண்டாட்டி பிள்ளைகளின் சாபத்துக்குப் பாத்திரமாவார்கள்.

• • •

இந்திய ரயில்வேக்கள் இந்தியப் பொதுமக்கள் முப்பத்து நாலு கோடிப் பேரின் பொதுச் சொத்து. தேசமக்களுக்குப் பொது உடைமையாக்கப்பட்ட முதலாவது பெரிய தொழில். தேச மக்களின் பொதுப்பணம் 800 கோடி ரூபாய் அதில் முடங்கிக் கிடக்கிறது. அப்பேர்ப்பட்ட தொழிலுக்குப் பாதகம் விளைந்தால், சோஷலிசம் — பொது உடைமை என்னும் கொள்கைக்கே பெரும் பாதகம் ஏற்படும்.

பிற்பாடு, தொழில்களைப் பொது உடைமையாக்கும் திட்டத்துக்கு ஆதரவு கிடைப்பது துர்லபம். தனிப்பட்டவர்கள் தொழில்களை நடத்துவது தான் நல்ல முறை என்ற கட்சிக்குப் பலம் ஏற்படும். ஆகையால் ரயில்வே வேலை நிறுத்தம் தொழிலாளர் இயக்கத்துக்கே பெருங் கேடு செய்வதாகும்.

இப்போதைய நிலையில் ரயில் வேலை நிறுத்தம் ஏற்பட்டால், பொதுஜன ஆதரவு அதற்கு நிச்சயம் இராது. பொதுஜன ஆதரவு பெற்ற இந்திய சர்க்கார் ரயில் வேலை நிறுத்தத்தை எப்படியும் சமாளித்து விடுவார்கள்.

புதிய தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். பழைய தொழிலாளிகளில் பாதிப் பேருக்குமேல் வேலையை இழக்குமாறு நேரிடும். அதனால் அவர்களுடைய குடும்பத்தார் அடையும் கஷ்டங்களுக்கெல்லாம் வேலை நிறுத்தம் செய்தவர்களே பொறுப்பாளியாவார்கள்.

தென்னிந்திய ரயில்வேயில் ஒரு வருஷத்துக்கு முன்னால் வேலைநிறுத்தம் நடந்தது. அது படுதோல்வி அடைந்தது. அந்தப் பாடத்தைத் தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளிகள் மறந்திருக்க மாட்டார்கள். ஆகையால் மறுபடியும் வீண் கஷ்டத்துக்குத் தங்களை ஆளாக்கிக் கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

தொழிலாளிகள் அதிகச் சம்பளக் கோரிக்கையைத் தாராளமாய்ச் சமர்ப்பிக்கட்டும்; கிளர்ச்சியும் செய்யட்டும். ஆனால் எவ்வளவு கொடுக்கலாம், எப்போது கொடுக்கலாம் என்பதைச் சுதந்திர இந்திய சர்க்காருக்கு விட்டுவிடட்டும். நாட்டின் பொருளாதார நிலைமையையும் பொதுமக்களின் பொதுநலத்தையும் முன்னிட்டு இந்திய சர்க்கார் உசிதமான காரியத்தை உசிதமான சமயத்தில் அவசியம் செய்வார்கள். ஏழை பங்காளர்களான இந்தியத் தலைவர்கள் ஏழைத் தொழிலாளிகளுக்கு ஒரு நாளும் விரோதம் செய்யமாட்டார்கள் என்று உறுதி கூறுகிறோம்.

ரயில்வேத் தொழிலாளிகள் தாங்களும் இந்தியப் பொது மக்களில் சேர்ந்தவர்கள்தான் என்றும், தங்களுடைய தாய்நாடும் இந்தியாதான் என்றும் நினைவு வைத்துக்கொள்ளட்டும்.

வடநாட்டிலே யார் என்ன செய்தாலும் தென்னாட்டு ரயில்வேத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் என்னும் தேசத் துரோகத்தையும் ஆத்மத் துரோகத்தையும் செய்யவே கூடாது.

• • •

“விடுமுறை வேண்டாம்; வேலை செய்யத்தான் செய்வோம்” என்று சொல்லுகிற மனப்பான்மை தற்சமயம் இந்திய நாட்டில் ஏற்பட வேண்டும். “கட்டாயம் வேலை செய்வோம்; வேலை செய்துதான் தீருவோம்; செத்தாலும் வேலை செய்து கொண்டே சாவோம்” என்று சொல்லக்கூடிய தேச பக்த தீரர்கள் சுதந்திர இந்தியாவில் எங்கெங்கும் தோன்ற வேண்டும்.

அப்போதுதான் இந்தியர் தாங்கள் அடைந்த சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். உலகத்தின் முன்னிலையில் இந்தியா அடைந்திருக்கும் கௌரவத்தை நிலைநாட்டிக் கொள்ள முடியும். கூடிய சீக்கிரத்தில் உலகத்துக்கே தலைமை வகித்து வழிகாட்டும் மகோந்நத ஸ்தானத்தை இந்தியா தேசம் அடைய முடியும்.

குருவும் சீடரும்



ஆந்திர மாதாவின் அருந் தவப் புதல்வர்கள் இருவர் இந்த வாரக் "கல்கி" இதழ் அட்டையை அலங்கரிக்கிறார்கள். ஒருவர், இந்த வருஷத்துக் காங்கிரஸ் அக்கிராசனர் பட்டாபி சீதாராமய்யா; இன்னொருவர் காங்கிரஸ் மகாசபையின் புதிய பொதுக் காரியதரிசி ஸ்ரீ களா வெங்கட்ராவ்.

தேசிய உணர்ச்சியும் சமூக சீர்திருத்த உணர்ச்சியும் ஆந்திர நாட்டில் வெகு காலத்துக்கு முன்பே உண்டாயின. ஸ்ரீ வீரேசலிங்கம் பந்துலு சமூக சீர்திருத்தத் தொண்டு புரிவதற்கு வழி காட்டினார். மசூலிப்பட்டணத்துத் தேசிய கலாசாலை, கல்விச் சீர்திருத்த முயற்சிக்கு எடுத்துக் காட்டாயிருந்தது.

பல வருஷங்களுக்கு முன்பே டாக்டர் பட்டாபியைக் காங்கிரஸ் தலைமைக்குத் தேர்ந்தெடுக்கும்படி காந்தி மகாத்மா நாட்டுக்குச் சிபார்சு செய்தார். அந்த வருஷத்தில் அவருடைய சிபார்சு நிறைவேறவில்லை. காந்தி மகான் ஆத்மத்தியாகம் செய்த புனிதமான வருஷத்தில் அவருடைய திருவாக்கு நிறைவேறியிருக்கிறது.

ஸ்ரீ களா வெங்கட்ராவ் 1921-ம் ஆண்டில் ஒத்துழையாமை இயக்கத்தைச் சேர்ந்து கலாசாலையைப் பகிஷ்கரித்தவர். அன்று முதல் தாய் நாட்டின் சேவைக்கே தம் வாழ்வை அர்ப்பணம் செய்தவர். டாக்டர் பட்டாபியின் பிரதம சீடர்களில் ஒருவர்.

1921-ம் வருஷத்தில் காந்தி மகாத்மா ஆரம்பித்த ஒத்துழையாமை இயக்கம் ஆந்திர நாட்டில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கியது. படித்தவர்களும் பாமரர்களும் ஆயிரம் பதினாயிரம் என்ற கணக்கில் காந்தி மகாத்மாவைப் பின்பற்றித் தியாகத் தீயில் குதிப்பதற்கு முன்வந்தனர்.

தேசோத்தாரக நாகேசுவரராவ், தேசபக்த கொண்ட வெங்கடப்பய்யா, ஆந்திர கேசரி டி. பிரகாசம், டாக்டர் பட்டாபி சீதாராமய்யா, ஸ்ரீ புலுசு சாம்பமூர்த்தி முதலிய ஆந்திரப் புதல்வர்கள் பலர் சுதந்திரப் போராட்டத்தின் முன்னணியில் நின்றார்கள்; ஒப்பற்ற தியாகங்களைச் செய்தார்கள்; அதிசய வீரச் செயல்களைப் புரிந்தார்கள்.

ஆந்திர தேசபக்தர்களுக்குள்ளே கூரிய அறிவும், வாக்கு வன்மையும், விவாதத் திறமையும், எழுதும் ஆற்றலும் படைத்தவர் டாக்டர் பட்டாபி சீதாராமய்யா. 1921-ம் ஆண்டு முதல் காந்தி மகாத்மாவை ஏகாக்கிர சித்தியுடன் பின்பற்றி வந்தவர். மகாத்மாவின் சித்தாந்தங்களுக் கெல்லாம் அரிய வியாக்யானங்கள் செய்தவர்.

பாரதத் தாய்க்கு டாக்டர் பட்டாபி செய்திருக்கும் பல சேவைகளுக்குள்ளே தலைசிறந்த சேவை, காங்கிரஸ் மகாசபையின் சரித்திரத்தைச் சாங்கோபாங்கமாக அவர் எழுதியிருப்பதாகும். ஒவ்வொன்றும் ஆயிரம் பக்கங்கள் கொண்ட இரண்டு பெரிய புத்தகங்களாக டாக்டர் பட்டாபி எழுதிய காங்கிரஸ் வரலாறு வெளியாகியிருக்கிறது.

சென்னை மாகாண அரசாங்கத்தில் சில வருஷ மந்திரியாகப் பதவி வகித்து ஸ்ரீ களா வெங்கட்ராவ் செய்த சேவையை அனைவரும் அறிவர். காங்கிரஸ் மகாசபையின் வேலைத் திட்டங்களில் ஒன்றான ஜமீன்தாரி முறை ஒழிப்பை இந்தியாவிலேயே முதல் முதலாகக் காரியத்தில் நடத்திக் காட்டினார்.


மந்திரி உத்தியோகத்தை ஒரு பதவி என்று கருதாமல் தேசப்பணியாகக் கருதிச் செய்து வந்தவர் ஸ்ரீ களா வெங்கட்ராவ் என்பது சமீபத்தில் ஐயமற நிரூபணமாயிற்று. மந்திரி வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டுக் காங்கிரஸ் காரியதரிசி வேலையை ஒப்புக்கொண்டதன் மூலம் ஸ்ரீ களா வெங்கட்ராவ் காங்கிரஸ் மகாசபையின் பெருமையை உலகமறிய நிலைநாட்டியிருக்கிறார்.

காங்கிரஸ் மகாசபையின் புதிய தலைவருக்கும் காரியதரிசிக்கும் நாடு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த தேச பக்தர்கள் இருவரும் ஆந்திர அபிமானம் கொண்டவர்கள். ஆந்திர மாகாணப் பிரிவினையைத் தீவிரமாக ஆதரிப்பவர்கள். சென்னை நகரம் தனிப்பட்ட மாகாணம் ஆக வேண்டும் என்று சொல்லுகிறவர்கள்.

ஆந்திரப் புதல்வர்களின் ஆந்திர அபிமானத்தைக் குறித்து நாம் புகார் சொல்வதற்கில்லை. அது இயற்கையென்றும், பாராட்டுவதற்குரியது என்றும் கருதுகிறோம்.

தமிழ்நாட்டில் அரசியல் தலைமை வகிப்பவர்களுக்கு அதே தீவிரமான தமிழ் அபிமானம் இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம்.



சென்ற மாதம் புதுடில்லியில் இந்தோனேஷியப் பிரச்னையை விவாதிப்பதற்காகப் பத்தொன்பது ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் மகாநாடு கூடிய ஹைதராபாத் மாளிகை.

★

மாளிகையின் உள்ளே ஆசிய நாட்டுப் பிரதிநிதிகள் கூடி இந்தோனேஷியப் பிரச்னையைப் பற்றி விவாதிக்கும் காட்சி.







1. மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு நேருஜி அளித்த விருந்தில் கலந்துகொண்ட ஏமன் பிரதிநிதிகளுடன் கவர்னர் ஜெனரல் ராஜாஜி சம்பாஷிக்கிறார்.



(2) கொரியா நாட்டுப் பிரதிநிதி மிஸ் ஹு, ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி, ஸ்ரீ கே. பி. எஸ். மேனன்.
(3) ஆசியநாட்டுப் பிரதிநிதிகளின் மத்தியில் பண்டித ஜவாஹர்லால் நேரு.

கங்காதரா! மாண்டாயோ?

["கரகோஷம்" எழுதியது]

ஒரு சலவைத் தொழிலாளியின் மனையாள் "கங்காதரா! மாண்டாயோ?" என்று சொல்லிப் பிலாக்கணம் வைத்து அழுது கொண்டிருந்தாள். பிலாக்கணச் சத்தத்தைக் கேட்ட அக்கம்பக்கத்து மனிதர்கள் சலவைத் தொழிலாளியின் வீட்டுக்கு வந்து, "ஐயோ! கங்காதரா! மாண்டாயோ!" என்று அழுது துக்கம் கொண்டாடினார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் ஊரே திரண்டு விட்டது. ஸ்திரீகள் கட்டிக்கொண்டு அழுதார்கள். கொஞ்ச நேரம் கழித்து அழுகைச் சத்தம் சற்று ஓய்ந்ததும் "கங்காதரன் என்பது யார்? அவர் எதனால் மாண்டார்?" என்று ஒருவர் இன்னொருவரிடம் விசாரித்தார். "எனக்குத் தெரியாது. அழுகைச் சத்தம் கேட்டதும் வந்தேன்!" என்று பதில் சொன்னார் பக்கத்திலிருந்தவர். இப்படி ஒருவருக்கு ஒருவர் விசாரித்து ஒன்றும் தெரியாமல் போகவே கடைசியில் கங்காதரனைப் பறிகொடுத்த சலவைத் தொழிலாளியின் மனைவியிடமே கேட்டார்கள். அவள் சொன்ன பதிலைக் கேட்டதும் கூட்டமாக வந்து அழுது துக்கப்பட்டவர்களுக்கெல்லாம் ஒரே அவமானமாகப் போய்விட்டது. கங்காதரன் என்பது அந்த வீட்டில் பொதி சுமந்து வந்த ஆண் கழுதையின் பெயர் என்று தெரிய வந்தது!

மேற்படி கங்காதரன் கதைக்கு எந்த விதத்திலும் குறைச்சல் இல்லாமல் சென்ற வாரத்தில் ஐந்து தினங்கள் சென்னைமா நகரில் ஒரு அதிசயம் நடந்து வந்தது. சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையை அடுத்த சேப்பாக்கத்திலே ஒரு விஸ்தாரமான மைதானம் இருக்கிறது. அந்த மைதானத்தின் மத்தியில் எதிர், எதிரே மூன்று குச்சிகளை நட்டு வைத்திருக்கிறார்கள். குச்சிகள் நட்டிருக்கும் இரண்டு இடங்களிலும் இரண்டு வாட்ட சாட்டமான ஆசாமிகள் தடுப்பைக் கையில் வைத்துக்கொண்டு நிற்கிறார்கள். அவர்களைச் சுற்றிப் பதினொரு பேர் மைதானத்தில் பரவி நிற்கிறார்கள்.

பரவி நிற்கும் பதினொரு பேரில் ஒருவர் சிறு சிவப்புப் பந்து ஒன்றை எடுத்து மேற்படி மூன்று குச்சிகளில் ஒன்றை நோக்கி வேகமாக வீசி எறிகிறார். அங்கு நின்றுகொண்டிருக்கும் தடுப்புக்காரர் குச்சிகளில் பட்டுவிடாமல் பந்தைத் தடுக்கிறார். தடுத்த பந்து சில சமயங்களில் மைதானத்தின் எல்லைக் கோட்டைத் தாண்டி ஓடுகிறது. அப்பொழுது மைதானத்தில் கூடியிருக்கும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வெறி பிடித்தவர்களைப் போல கூச்சல் போட்டுக்கொண்டு கையைத் தட்டுகிறார்கள்.

சில சமயங்களில் தடுப்புக்காரரால் தடுக்கப்படும் பந்தைத் தரையில் படாமல் பதினொரு பேரில் ஒருவர் பிடித்து விடுகிறார். உடனே பந்தைத் தடுத்து அடித்த தடுப்புக்காரர் மைதானத்தை விட்டு வெளியேறுகிறார். அந்தச் சமயத்திலும் காலரியில் உட்கார்ந்திருப்பவர்களும் நாற்காலியில் உட்கார்ந்திருப்பவர்களும் கைதட்டி ஆர்ப்பரிக்கிறார்கள்.

இப்படிக் கை தட்டுகிறவர்கள் ஏதோ ஆட்டத்தின் நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டு கை தட்டுகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. மைதானத்துக்குள் போலீஸ்காரர்கள் பிரவேசிக்கும்போதும் அந்த மாபெருங் கூட்டத்தினர் கை தட்டிக் கரகோஷம் செய்கிறார்கள்!

• • •

கிரிக்கெட் விளையாட்டைப் பார்ப்பதற்காகவென்று சுமார் முப்பதினாயிரம் புத்திசாலிகள் அந்தச் சேப்பாக்கம் மைதானத்திலே கூடினார்கள். அந்த முப்பதினாயிரம் புத்திசாலிகளோடு முப்பதினாயிரத்து ஒன்றாவது புத்திசாலியாக அடியேனும் அந்தச் சேப்பாக்கம் மைதானத்துக்குப் போய் வந்த சேதியைப் பகருகிறேன் கேளுங்கள் :—

நாங்கள் ஐந்து பேர் அதி காலையில் கொட்டும் கடும் பனியையும் லட்சியம் செய்யாமல் ஐந்து மணிக்கே எழுந்திருந்து பஸ் ஸ்டாண்டில் வந்து காத்திருந்தோம். சுமார் இரண்டு மணி நேரத்துக்கு மேலே 'க்யூ' வரிசையில் நின்று பஸ்ஸைப் பிடித்துச் சேப்பாக்கம் மைதானத்துக்குச் சென்றோம். பஸ் கிடைக்காதவர்களில் பலர் சோற்று மூட்டையையும் தூக்கிக்கொண்டு கால் நடையாகவே மைதானத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே கிரிக்கெட் பந்தயம் பார்ப்பதற்காக டிக்கெட்டு வாங்குவதற்கு நின்று கொண்டிருந்த 'க்யூ' வரிசையில் மணிக்கணக்காகக் காத்திருந்து டிக்கெட்டை வாங்கினோம். பிறகு கிரிக்கெட் மைதானத்துக்குள் நுழைவதற்காக நீளமாக நின்று கொண்டிருந்த 'க்யூ' வரிசையில் நீண்டநேரம் காத்

திருந்த பிறகு, விளையாட்டு மைதானத்துக்குள் பிரவேசித்தோம்.

நாங்கள் ரூ. 7—8—0 டிக்கெட் வாங்கிக் கொண்டு சென்றதால் தூங்குமூஞ்சி மரத்தின் நிழல் கொஞ்சம் படும் இடத்தில் போட்டிருந்த நாற்காலியில் உட்கார முடிந்தது. உட்கார்ந்து ஒருதரம் மைதானத்தைச் சுற்றிப் பார்வையைத் திருப்பினேன். பன்னிரண்டணாவிலிருந்து பத்து ரூபாய் வரை பணத்தைக் கொடுத்து விட்டு வேகாத வெய்யிலிலே நாற்காலியிலும் காலரியிலுமாக ஆயிரக்கணக்கானவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஒரு சில நூறு பேர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் வெய்யிலிலே வாடி வதங்கிக் கொண்டிருந்தார்கள். அப்படி வாடி வதங்கியவர்களில் குழந்தைகளும் பெண்களும் வாலிபர்களும் வயோதிகர்களும் காணப்பட்டார்கள்.

அந்த முப்பதினாயிரம் ஜனங்களில் கிரிக்கெட் விளையாட்டின் நுணுக்கம் தெரிந்த நிபுணர்கள் சிலர் உண்டு என்று அறிந்தேன். ஆனால் அவர்களும் காலரியில் உட்கார்ந்து கொட்டாவி விட்டுக்கொண்டும் 'த்சென' 'த்சென' என்று சப்புக் கொட்டிக்கொண்டும் வேதனைப் பட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். விளையாட்டின் மத்தியில் சில உற்சாகிகள் கை தட்டும்போது உடம்பில் உள்ள சோம்பேறித்தனம் அதிகமாகா திருக்கும் பொருட்டு எல்லாரும் சேர்ந்து கை தட்டினார்கள்.

ஒரு தடவை காலரியில் இருப்பவர்களுக்கும் தரையில் உட்கார்ந்திருப்பவர்களுக்கும் தகராறு ஏற்பட்டு விட்டது. இதில் ஒருவருக்குக் காயம் ஏற்பட்டு விடவே அவரை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு போனார்கள். காலரியின் இன்னொரு பக்கத்தில் வெய்யில் தாங்காமல் ஒருவர் மயக்கம் போட்டு விழுந்து விட்டார். இதை யெல்லாம் பார்க்கச் சகிக்காமல் மைதானத்தை விட்டு வெளியில் கிளம்பி வந்தேன். என்னைப் போலவே வெளிவந்த சுமார் பத்துப் பதினைந்து பேர் கிரிக்கெட்டைப் பற்றி வாதப்பிரதிவாதங்கள் செய்து கொண்டிருந்தனர்.

“கிரிக்கெட்டு மாட்ச்சுக்கு வரவில்லை என்றால் நாலு பேர் கேலி செய்யப் போகிறார்களே என்பதற்காக வந்து தொலைத்தேன்!” என்றார் ஒருவர்.

“மதுரையிலிருந்து என் நண்பர் ஒருவர் வந்திருக்கிறார்; அவருக்காக நான் வந்தேன்!” என்றார் இன்னொருவர்.

“சொல்ல வெட்கமாக இருக்கிறது! இவ்வளவு ஆயிரம் பேர் வருகிறார்களே, ஏதாவது விசேஷம் இல்லாமலா போகும் என்று நான் வந்தேன்!” என்று அசடு வழியச் சொன்னார் ஒரு புஷ்கோட் ஆசாமி.

இந்தச் சமயத்தில் மத்தியான—சாப்பாட்டுக்காக விளையாட்டில் இடைவேளை விட்டுக் கூட்டம் கலைந்தது. நானும் அந்தக் கூட்டத்தோடு சேர்ந்து புறப்பட்டேன். பஸ்ஸுக்காகக் காத்திருக்க வேண்டாம் என்று கால் நடையாகவே புறப்பட்டேன். எனக்கு முன்னால் சென்றவர்களில் ஒருவர் “ஏன் ஐயா! இந்த ஆட்டத்தின் ஸ்கோர் நம்பரை சாயங்காலப் பத்திரிகையில் படித்துத் தெரிந்து கொள்ளலாமே? பணம் போனால் போகிறது! மத்தியானம் ஆட்டத்துக்கு வர வேண்டாம்” என்று கெஞ்சினார்.

“சுத்தப் பட்டிக்காடு மாதிரி பேசுகிறாயே? கிரிக்கெட் என்பது 'ராயல் கேம்' அல்லவா? அதைப் பார்க்காத ஜன்மம் ஒரு ஜன்மமா?” என்று பதில் சொன்னார் அவர் நண்பர்.

“ஆமாம்! இது 'ராயல் கேம்'தான்! ராஜாக்கள் விளையாடி ராஜகுமாரர்கள் பார்க்க வேண்டிய விளையாட்டு. நமக்கெல்லாம் கட்டி வராது. நீ வேணுமானால் மத்தியானம் பார்த்துவிட்டு வா! நான் வீட்டுக்குப் போகிறேன்” என்று சொல்லி விட்டு, விடுவிடு என்று நடந்து போய் விட்டார் முதல் மனிதர்.

“அவர் சொல்லுவது சரிதான், ஸார்! இந்த ஆட்டத்தைப் பற்றி இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த ஜெனரல் வேவல் என்ன சொல்லி யிருக்கிறார், தெரியுமா? 'அருமையான காலத்தையும் அற்புதமான மனித சக்தியையும் நாசம் செய்வது கிரிக்கெட் விளையாட்டு!' என்று சொல்லி யிருக்கிறார்” என்றார் ஒரு ஜிப்பாக்கார ஆசாமி.

“அது மட்டுமா? பெர்னார்ட்ஷா என்ன சொல்லி யிருக்கிறார், தெரியுமா? 'பதினொரு தடித் தாண்டவராயன்கள் பந்தை எறிந்து பிடித்துக்கொண்டிருப்பது, இந்த வேடிக்கையைப் பதினாயிரம் சோம்பேறிகள் பார்த்துக் கொண்டிருப்பது' என்று வெறுத்து வாங்கி யிருக்கிறார்!” என்றார் இன்னொருவர்.

“இந்தப் பத்திரிகைக்காரர்கள் கிரிக்கெட்டைப் பற்றிப் பிரமாதமாக விளம்பரப்படுத்தி ஜனங்களைக் கெடுத்து விட்டார்கள். குதிரைப் பந்தயத்துக்கும் இதற்கும் வித்தியாசம் இருப்பதாகவே எனக்குத் தெரியவில்லை. அன்னிய ஆட்சியினால் நமக்கு ஏற்பட்ட பல கெடுதல்களில் இதுவும் ஒன்று” என்று ஒரு தேசபக்தர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே எல்லாருமாகக் காப்பி ஹோட்டலுக்குள் நுழைந்து விட்டார்கள்.

இப்படியாக, கிரிக்கெட் பார்த்து விட்டு வெளிக்கிளம்பும் கிரிக்கெட் ரஸிகர்கள் மின்சார ரயிலிலும் பஸ்ஸிலும் டிராமிலும் போகும்போது, "இந்த ஆட்டம் பைத்தியக்காரத்தனம், வெறும் சோம்பேறித்தனம், நமது நாட்டுக்கு உதவாதது" என்றெல்லாம் பேசிக் கொண்டு போகிறார்கள். இருந்தாலும் முப்பதினாயிரம் பேர் பணம் கொடுத்து விட்டுச் சேப்பாக்கம் விளையாட்டு மைதானத்தில் கூடுகிறார்களே என்றால், "கங்காதரா! மாண்டாயோ?" என்ற கதையைத்தான் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது.

* * *

கிரிக்கெட் விளையாட்டு முடிந்த மறுநாள் மயிலாப்பூர் டிராமில் போய்க்கொண்டிருந்தேன். அருகில் உட்கார்ந்திருந்த ஒருவர் என் கையில் இருந்த காலைப் பத்திரிகையை வாங்கிப் பார்த்து விட்டுக் கோபாவேசமாகப் பேச ஆரம்பித்தார்!

"பார்த்தீர்களா, ஸார்! 'ஸ்போர்ட்ஸ்' செய்திகளுக்கு என்று ஒரு முழுப் பக்கத்தை வீணாக்கி இருக்கிறார்கள். லண்டனில் உள்ள பிரபலப் பத்திரிகையான 'டெயிலி எக்ஸ்பிரஸ்' பொது ஜனங்களை ஒரு அபிப்பிராயம் கேட்டிருந்தது. என்ன தெரியுமா? 'பத்திரிகைகளில் ஸ்போர்ட்ஸைப் பற்றிய செய்திகளை நிறுத்திவிடலாமா?' என்றுதான். உடனே அந்தப் பத்திரிகை ஆபீஸுக்கு ஆயிரக் கணக்கான கடிதங்கள் வந்து குவிந்தன. நூற்றுக்கு அறுபது பேருக்கு மேல் 'விளையாட்டுகளைப் பற்றிய செய்திகளைப் பிரசுரிக்க வேண்டாம்' என்று எழுதி அபிப்பிராயம் தெரிவித்திருந்தார்களாம். விளையாட்டைப் பிரமாதப்படுத்தும் மேல் நாடுகளிலேயே பத்திரிகைகளில் ஸ்போர்ட்ஸுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று இருக்கும்போது நமது நாட்டுப் பத்திரிகைகள் ஸ்போர்ட்ஸைப் பற்றிப் பிரசுரிப்பதைப் பார்த்தால் எனக்கு......" என்று அவர் சொல்லி முடிப்பதற்குள், டிராம் வண்டியில் கம்பியைப் பிடித்துக்கொண்டு நின்று கொண்டிருந்த ஒருவர், "நீங்கள் சொல்லுவது சரிதான்! புது டில்லியிலிருந்து பறந்து வந்து இரவு பகல் ஓய்ச்சல் ஒழிச்சல் இல்லாமல் தமிழ்நாடு பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்தார் நமது ரயில்வே மந்திரி ஸ்ரீ சந்தானம். ரயில்வே அபிவிருத்தி பற்றியும் ரயில்வே ஸ்ட்ரைக் பற்றியும் ஊர் ஊராகப் பேசியிருக்கிறார். தேசிய வாழ்வுக்கே முக்கியமான விஷயம். ஆனால் அவருடைய பேச்சுகளைப் பற்றிப் பத்திரிகைகளில் பூதக் கண்ணாடி வைத்துக்கொண்டு தேடினால் எங்கேயோ பத்துப் பன்னிரண்டு வரிகள் அகப்படுகின்றன. ஸ்ரீ சந்தானம் அவர்களின் படத்தை எந்தப் பத்திரிகையும் பிரசுரித்ததாகத் தெரியவில்லை. ஆனால் கிரிக்கெட் ஆட்டத்தைப் படம் பிடித்துப் பத்து நாட்களாகப் பத்திரிகை பூராவும் பிரசுரித்து வருகிறார்கள். ஒரு படத்துக்கும் இன்னொரு படத்துக்கும் எந்த விதமான வித்தியாசமும் தெரியவில்லை. தடியைப் பிடித்துக்கொண்டு ஒரு ஆசாமி நிற்கிறார். காலைத் தூக்கிக் கொண்டும் கையை ஓங்கிக் கொண்டும் சில பேர் நிற்கிறார்கள். திருப்பித் திருப்பி இதே கதைதான். இதற்குத் தினம் ஒரு பக்கம் நிறையப் படங்கள். ரொம்பவும் அக்கிரமம், ஐயா!" என்று கர்ஜித்தார்.



சாப்பிடுபவர்:—என்ன, சுவாமி! காப்பியிலே பாலே இல்லையே! ஒரே கருப்பாயிருக்கிறதே!

ஹோட்டல்முதலாளி:—உங்களுக்குத் தெரியாதா, ஸார்? இன்றைக்கு அகில இந்திய பசுக்கள் வேலை நிறுத்தம் ஆரம்பமாகியிருக்கிறதே!

சாப்பிடுபவர்:—அப்படியா சங்கதி? ஒரு வேளை பசுக்களெல்லாம் கருப்புச் சட்டை இயக்கத்திலே சேர்ந்து விட்டதாக்கும் என்றல்லவா நான் பயந்துபோனேன்!

"இதெல்லாம் பத்திரிகை சுதந்திரம், ஸார்! நீங்களும் நானும் யார் கேட்பதற்கு?" என்றார் ஒரு பெரிய மனிதர்.

பத்திரிகைகளைப் பற்றிக் குறைவாகப் பேசுவதைக் கேட்கச் சகியாமல் டிராமை விட்டு இறங்கினேன்.

"ஸார்! இருங்கள்! உங்கள் பத்திரிகையை வாங்கிக் கொள்ளாமல் போகிறீர்களே!" என்று சொல்லிக்கொண்டே என்னிடமிருந்து வாங்கிய காலைப் பத்திரிகையைத் திருப்பிக் கொடுத்தார் அந்த மனிதர். அதில் கிரிக்கெட் விளையாட்டுப் படங்கள் பிரசுரமாகியிருந்த பக்கம் மட்டும் கிழிக்கப்பட்டிருந்தது!

இரண்டணாவில் உலகப் பிரயாணம்!

☆ சபரி ☆

சென்ற வாரத்தில் சென்னையில் நிகழ்ந்த சர்க்கார் பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தத்தினால் சென்னை நகரம் அல்லோல கல்லோலப்பட்டது. அச்சமயம் வேலை நிறுத்தம் சம்பந்தமாகப் பல ரஸமான நிகழ்ச்சிகளைப் பற்றிய வதந்திகளும் கதைகளும் கற்பனைகளும் தோன்றி நகரெங்கும் உலாவின. அவற்றில் சில வருமாறு:—

பஸ் டிரைவர் கேசவலு நாயக்கர் ஸ்டிரைக் செய்து விட்டு மாலை ஆறு மணிக்கு வீட்டுக்குப் போனார். அப்போது அவருடைய மனைவி கோமளம் நன்றாக அலங்கரித்துக் கொண்டு வெளியில் புறப்படுவதற்குத் தயாராக இருந்தாள். கணவனைப் பார்த்ததும், "ஏது, இன்று ஆறு மணிக்கே வந்து விட்டீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"அது இருக்கட்டும். நீ இப்போது எங்கே புறப்படுகிறாய்?" என்று கேட்டார் கேசவலு நாயக்கர்.

"நானும் பக்கத்து வீட்டு லலிதாவும் சுதேசிக் கண் காட்சிக்குப் போகிறோம்."

"போக முடியாது. இன்றைக்கு பஸ் ஸ்டிரைக். நாங்கள் ஸ்டிரைக் செய்து விட்டோம். ஒரு பஸ்கூட ஓடாது!"

"நன்றாயிருக்கிறது, உங்கள் ஸ்டிரைகும் நீங்களும்! கண்காட்சி முடிவதற்கு இன்னும் நாலைந்து நாள்தானே இருக்கிறது? நான் எப்போது பார்ப்பதாம்?" என்று முகத்தைச் சிணுக்கினாள் கோமளம்.

அன்று இரவு அவள் சமையலுக்கு 'ஸ்டிரைக்' செய்து விடுவாளோ என்று பயந்தார் கேசவலு நாயக்கர்.

• • •

நான் ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கண்டக்டரிடம் கொடுத்து மயிலாப்பூருக்கு ஒரு டிக்கட் கேட்டேன். கண்டக்டர் டிக்கட்டைக் கொடுத்து விட்டு, தம்முடைய தோல்பையில் கையை விட்டு ஓரணாவாகவும் இரண்டணாவாகவும் சில்லறை எடுத்துக் கொடுத்தார். எண்ணிப் பார்த்தேன். ஐந்து ரூபாயும் ஒரு அணாவும் இருந்தது. நான் சிரித்துக் கொண்டே, "என்ன ஐயா, பள்ளிக்கூடத்தில் படிக்கிறீரோ?" என்று தமாஷாகக் கேட்டேன்.

"ஏன் அப்படிக் கேட்கிறீர்?" என்று கேட்டார் அந்தக் கண்டக்டர்.

'பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குத் தானே கணக்கு சரியாக வராது? நான் ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்தேன். நீர் இரண்டணா டிக்கட்டைக் கொடுத்து விட்டு, ஐந்து ரூபாயும் ஒரு அணாவும் கொடுக்கிறீர்!" என்றேன்.

கண்டக்டர் சிரித்து விட்டு "நீங்கள் சொன்னது சரிதான், ஸார்! நான் ஈவ்னிங் காலேஜில் படிக்கிறேன்!" என்றார்.

• • •

இரண்டணாவைக் கொடுத்து விட்டு எங்கு வேண்டுமானாலும் போகலாம் என்பது பற்றிப் பல தமாஷ்கள் எழுந்தன.

ஒரு பிரயாணி இரண்டணாவை எடுத்துக் கொடுத்து விட்டு, "பாரிஸுக்கு ஒரு டிக்கட் கொடு, அப்பா!" என்றார்.

"பாரிஸுக்கு இரண்டணாவில் போக விடலாமா? அப்படியானால் எனக்கு பெர்லினுக்கு ஒரு டிக்கட் கொடு!" என்றார் மற்றொரு பிரயாணி.

"எனக்கு லண்டனுக்கு ஒரு டிக்கட் கொடு!" என்றார் இரண்டணாவை நீட்டிக் கொண்டே இன்னொருவர்.

"இரண்டணாவில் உலகத்தையே சுற்றி விட்டு வந்து விடலாம் போலிருக்கிறதே!" என்றார் மற்றொருவர்.

"நம்ம டெபுடி டிரான்ஸ்போர்ட் கமிஷனர் மாத்தூன் சொன்னதை மறந்து விட்டீர்களா, ஸார்? சென்னை நகரத்தில் சர்க்கார் பஸ்கள் ஒரு நாளைக்கு ஓடும் மொத்த மைல்களைக் கணக்கிட்டுப் பார்த்தால், பூமியின் சுற்றளவுக்கு அதிகமாகவே வந்துவிடுகிறது என்று அவர் சொன்னாரே! ஆகையால் சர்க்கார் பஸ்ஸில் ஏறினால் உலகத்தையே சுற்றிவிட்டது போலத்தான்!" என்றார் வேறொருவர்.

• • •

இனிமேல் புதிதாக வேலைக்கு நியமிக்கப்படும் கண்டக்டர்களுக்கு மோட்டார் ஓட்டும் பயிற்சி கட்டாயமாகக் கொடுக்கப்படும் என்பதாக ஒரு பிரஸ்தாபம் இருக்கிறது. பஸ் தொழிலாளர்கள் திடீரென்று 'ஸ்டிரைக்' செய்துவிட்டால் கண்டக்டர்களை வைத்துச் சமாளிக்க வேண்டுமே என்பதற்காகச் சர்க்கார் இப்படி யோசனை செய்கிறார்களாம்.

இதைவிட இன்னொரு பேஷான யோசனையைச் சென்னை சர்க்கார் கவனிக்கட்டும். இனிமேல் சர்க்கார் பஸ்களில் பிரயாணம் செய்பவர் ஒவ்வொருவருக்கும் அவசியம் கார் ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும் என்று போக்குவரத்து மந்திரி னம் கோபால் ரெட்டி ஒரு சட்டம் பிறப்பிக்கட்டும். பஸ் தொழிலாளர்கள் திடீர் ஸ்டிரைக்' செய்து விட்டால் கான்ஸ்டபிள்ளைத் தேடாமல் பிரயாணிகளே ஓட்டிக் கொண்டு போகலாம் அல்லவா?

• • •

அமிஞ்சிக்கரையிலிருந்து ஜார்ஜ் டௌன் போவதற்காக பஸ் ஸ்டாண்டுக்குப் போனேன். அப்போது தலையை மறைத்து நன்றாக மூடிக் கொண்டு, கையில் ஒரு பாட்டிலையும் வைத்துக் கொண்டு, மற்றொருவரும் அங்கே பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். அவர் பஸ்ஸை ரொம்ப ஆவலாக எதிர்பார்த்தார். பாவம், டாக்டரைப் பார்ப்பதற்காக அவசரப்படுகிறார் போலும் என்று நினைத்தேன்.

சற்று நேரம் கழித்து, அவர் என் பக்கம் திரும்பி, "ஸார், பஸ் வருவதற்கு ரொம்ப நேரமாகுமோ?" என்று கேட்டார்.

"எனக்குத் தெரியாது, இப்போது ஸ்டிரைக் சமயம். ஆகையால் பஸ் எப்போது வருமென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது" என்றேன் நான்.

"என்னுடைய குழந்தைக்குச் ஜுரம். டாக்டரைப் பார்த்து மருந்து வாங்கி வர வேண்டும். இந்தப் பாழாய்ப்போன பஸ் எப்போது வந்து தொலையப் போகிறதோ?" என்று தவித்தார் அவர்.

நான் அவருக்காக அனுதாபப் பட்டேன்.

பதினைந்து நிமிஷம் கழித்து பஸ் வந்தது. நானும் அவரும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தோம். அவர் தலையை இன்னும் நன்றாக மூடிக் கொண்டார்.

பஸ் புறப்பட ஆரம்பித்தது. திடீரென்று ஒரு மூலையிலிருந்து, "யார் அது, அங்க முத்துவா?" என்று ஒரு குரல் வந்தது. எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்தப் பேர்வழி மெதுவாக "ஆமாம், அண்ணே!" என்றார்.

"என்னப்பா, நீயே ஸ்டிரைக் செய்து விட்டு, அப்புறம் நீயே இந்த பஸ்ஸில் ஏறிப் போகிறியே? ஹஹ்ஹஹா!" என்று சிரிக்கத் தொடங்கிவிட்டார் அவர்.

அலை ஓசை

கல்கி

பதினேழாம் அத்தியாயம்

யமுனை தடுத்தது!

சீதாவை ஏற்றிக்கொண்ட மோட்டார் புதுடில்லியிலிருந்து ஷாஜஹான் புரத்தை நோக்கி அதிவிரைவாகச் சென்றது. வெள்ளி வீதி வழியாகப் போய், ஜும்மா மசூதியைத் தாண்டி, செங்கோட்டையை வலப் புறத்தில் விட்டு, ரயில்வே தண்டவாளத்தைக் கடந்து, மேலும் அப்பால் சென்று யமுனைப் பாலத்தை நெருங்கிற்று.

தன்னைப் பின் தொடர்ந்து சூரியா வருகிறான் என்ற எண்ணத்தினால் சீதா தைரியமாயிருந்தாள். எப்படியும் சூரியாவின் கார் இந்தக் காரைப் பிடித்துவிடும் என்று நம்பியிருந்தாள். ஆனால் யமுனைப் பாலத்தைக் கார் நெருங்கியதும் அவளுடைய மனதில் 'திக்' என்றது. அது மிகவும் குறுகலான பாலம். ஒரு வரிசைக் கார்தான் அதில் போகலாம். இரண்டு பக்கத்திலிருந்தும் வரும் வண்டிகள் ஒரே சமயத்தில் அந்தப் பாலத்தில் போக முடியாது. பாலத்தின் இரு முனைகளிலும் போலீஸ்காரர்கள் நிற்பார்கள். ஒரு பக்கத்துக் கார்களை விடும்போது, மற்றொரு முனையில் உள்ள போலீஸார்கள் அங்கு வரும் கார்களையெல்லாம் தடுத்து நிறுத்தி வைப்பார்கள். பிறகு இந்த முனையிலிருந்து கார்களை விடும்போது அந்த முனையில் வரும் வண்டிகளை நிறுத்தி வைப்பார்கள். இது சீதாவுக்கு நினைவு வந்தது. தான் ஏறியுள்ள வண்டியைப் பாலத்தில் விட்டுவிட்டு, பின்னால் வருகிற சூரியாவின் காரை நிறுத்திவிட்டால் என்ன செய்கிறது என்று துணுக்கமடைந்தாள். சூரியாவின் வண்டியோ பின்னால் இரண்டு பர்லாங்கு தூரத்தில் வந்து கொண்டிருந்தது.

சீதா பயந்த வண்ணமே ஆயிற்று. அவள் ஏறியிருந்த வண்டி பாலத்தில் சென்றதும், பின்னால் வருகிற வண்டிகள் நிற்க வேண்டும் என்று போலீஸ்காரன் கையைக் காட்டிவிட்டான். சீதாவின் வண்டி பாலத்தைக் கடந்தவுடனே அந்த முனையில் காத்திருந்த வண்டிகள் விடப்படுவதைச் சீதா கவனித்தாள். உடனே ஒரு பெரும் பீதி சீதாவைப் பற்றிக் கொண்டது. அவளுடைய வயிற்றிலிருந்து குடல் மேலே கிளம்பி மார்பை அடைத்தது போலவும், மார்பிலிருந்து நெஞ்சு கிளம்பித் தொண்டையை அடைத்தது போலவும் இருந்தது. தலைக்குள்ளே வெடிகுண்டு வெடித்து நாலா புறமும் சிதறிச் சென்றது போலத் தோன்றியது. தன்னையறியாத ஆக்ரோஷத்துடன் 'வீல்' என்று ஒரு தீர்க்கமான கூச்சல் போட்டுக் கொண்டு சீதா ஓடுகிற காரிலிருந்து வெளியே குதிக்க முயன்றாள். பக்கத்திலிருந்த மனிதன் அவளுடைய முகத்தைப் பார்த்து ஓங்கி ஒரு அறை கொடுத்தான். உடனே சீதாவின் கூச்சலும் நின்றது; காரிலிருந்து குதிக்கும் முயற்சியும் நின்றது. வண்டிக்குள் நிச்சப்தம் குடிகொண்டது. எதிர்ப்புறமாகப் போய்க்கொண்டிருந்த வண்டிகளிலிருந்து சிலர் இந்த வண்டியிலிருந்து ஏதோ கூச்சல் வந்ததைக் கவனித்துக் காரை உற்றுப் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் ஒன்றும் கண்டு பிடிக்க முடியவில்லை. கண்டு பிடிக்க முடியாதபடி சீதாவை ஏற்றிக் கொண்டிருந்த மோட்டார் வண்டி அதி வேகமாகச் சென்றது.

அந்த முரட்டு மனிதன் முகத்தில் கொடுத்த அறை சீதாவுக்குத் தன் சுய புத்தியைத் திருப்பிக் கொடுத்தது. ஒரு நொடியில் அவள் மனம் அமைதி அடைந்தது. தன்னுடைய நிலைமையைப் பற்றிச் சீதா நிதானமாக யோசிக்கத் தொடங்கினாள்.

சாயங்காலம் சூரியா தனக்கு எச்சரிக்கை செய்ததையும் அதைப் பற்றித் தான் அலட்சியமாய்ப் பேசியது பற்றியும் ஞாபகப் படுத்திக் கொண்டாள். இப்போது தனக்கு உண்மையிலேயே அத்தகைய ஆபத்து வந்து விட்டது. ஒருபக்கம் வியப்பும் ஒருபக்கம் பீதியும் அவளுடைய மனதைக் கலக்கின. யார் தன்னைக் கொண்டு போகிறார்கள்? எதற்காகக் கொண்டு போகிறார்கள்? வட இந்தியாவில் அவ்வப்போது நடக்கும் நர சோரங்களைப் பற்றியும் பெண் விற்பனையைப் பற்றியும் அவள் கேள்விப்பட்டிருந்த வரலாறுகள் அலையலையாக நினைவுக்கு வந்தன. எங்கேயாவது கொண்டு போய்த் தன்னை விற்றுவிடுவார்களோ என்று எண்ணியபோது அவளுடைய உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் நடுங்கியது.

அல்லது ஒரு வேளை யாராவது ஒரு துர்த்தனான மகாராஜா அல்லது நவாபின் அந்தப்புரத்தில் கொண்டு போய்த் தன்னைச் சேர்த்து விடுவார்களோ? இந்த மாதிரி சம்பவங்களைப் பற்றியும் அவள் கேட்டிருந்தாள்; கதைகளிலும் பத்திரிகைகளிலும் படித்திருந்தாள். தன் விஷயத்தில் அப்படியெல்லாம் நடக்கக் கூடுமென்று எதிர்பார்க்கவில்லை. ஆனால் இப்போது...?

ஒரு விஷயம் நிச்சயம். வெறும் கூச்சல் போடுவதினாலோ, பலாத்காரத்தினாலோ இந்த யமகிங்கரர்களிடமிருந்து தப்பித்துச் செல்ல முடியாது. ஏதாவது தந்திரம் செய்து தப்பித்தால்தான் உண்டு. அல்லது கடவுளின் திருவருளால் தப்பிக்க வேண்டும். சீதா அவள் தரிசித்திருந்த கோயில் தெய்வங்களை எல்லாம் ஒவ்வொன்றாக நினைத்து வேண்டிக் கொண்டாள். தரிசியாத தெய்வங்களுக்கும் பிரார்த்தனை செய்தாள்.

ஆனால் தெய்வங்கள் துணை செய்தாலும் ஏதாவது தப்புவதற்கு மார்க்கத்தை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடும். அவ்வளவுதானே? அந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ளத் தயாராயிருக்க வேண்டும் அல்லவா? தான் படித்திருந்த நாவல்களில் இம்மாதிரி அபாயத்துக் குள்ளான பெண்கள் என்னென்ன விதமான தந்திரங்களைக் கையாண்டு தப்பினார்கள் என்று யோசித்துப் பார்த்தாள். ஞாபகத்துக்கு வந்தது ஒன்றும் தன் விஷயத்தில் காரியத்துக்கு உதவும் என்று தோன்றவில்லை. தெய்வாதீனமான உதவிகளும் சந்தர்ப்பங்களும் கிடைத்ததினாலேயே அவர்கள் தப்பியிருக்கிறார்கள். தனக்கோ, வந்த உதவியையும் தெய்வம் குறுக்கே நின்று தடுத்து விட்டது! ஆகா! யமுனா நதியே! கண்ணன் விளையாடிய புண்ணிய யமுனா நதியே! உனக்கு நான் என்ன அபசாரம் செய்தேன்? ஏன் என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டாய்? சூரியாவைத் தடுத்து நிறுத்தி விட்டாயே? எத்தகைய பயங்கரமான படுகுழியில் விழப் போகிறேனோ தெரியவில்லையே?

ஆனால் அதற்குள்ளாக ஏன் நிராசை அடைய வேண்டும்? சூரியா எப்படியும் தொடர்ந்து வராமல் இருந்து விடுவானா? கொஞ்சம் தாமதமாகியிருக்கும். அவ்வளவுதானே? அதற்காகத் தன்னைப் பின் தொடர்வதை விட்டுவிடுவானா? ஒரு நாளும் மாட்டான். வந்துகொண்டுதானிருப்பான்.

ஆகையால் இந்தக் காரை எங்கேயாவது தாமதப்படுத்தினால் நல்லது. அது ஒன்றுதான் வழி. எப்படிக் காரைத் தாமதப்படுத்துவது? ஆம்; எங்கேயாவது ஊர் கண்ட இடத்தில் தாகமாயிருக்கிறது என்று சொல்லலாம். அப்புறம் பசிக்கிறது என்று சொல்லலாம். எப்படியாவது கெஞ்சிக்கூத்தாடி நிறுத்தச் சொல்லலாம். அதற்கு இந்த மனிதர்களோடு நல்லதனமாகப் பேசி முன்னாடியே சிநேகம் செய்து கொள்ள வேண்டும்.

இப்படிச் சீதா தீர்மானித்து எப்படிப் பேச்சுத் தொடங்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த போது, அந்த மனிதனே பேசினான். "மகளே! நீ கூச்சல் போடாமலும் தொந்தரவு கொடுக்காமலும் இருந்தால் உனக்கு ஒரு கஷ்டமும் ஏற்படாது. நன்மைதான் ஏற்படும். உன்னை அடிக்க வேண்டி நேர்ந்ததற்காக ரொம்பவும் வருத்தப் படுகிறேன்!" என்றான்.

அந்த மனிதன் நடுப் பிராயத்தைக் கடந்த முதிய மனிதன் என்பதைச் சீதா கவனித்திருந்தாள். அவனுடைய குரலும் பேச்சின் பாணியும் உண்மையாகவே அவன் அன்புடனும் அநு



தாபத்துடனும் பேசுகிறான் என்று தெரியப்படுத்தின.

ஆகையால் சீதா மனதைத் திடப்படுத்திக் கொண்டு, "நீங்கள் யார்? என்னை எங்கே அழைத்துக் கொண்டு போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"அப்படிக் கேள், சொல்கிறேன்! உன்னை உன் மாதாஜியிடம் அழைத்துப் போகிறோம்" என்று அந்த மனிதன் சொன்னான்.

சீதாவுக்குக் குபீர் என்று சிரிப்பு பீறிக்கொண்டு வந்தது. அவளுடைய மாதாஜி இறந்து எத்தனையோ வருஷம் ஆயிற்று. அகண்ட காவேரிக் கரையில் அன்னையின் உடம்பு எரிந்து சாம்பலாகி எவ்வளவோ காலம் ஆயிற்று. அதற்குப் பிறகு சென்ற காலம் ஒரு யுகம்போலத் தோன்றியது. இப்போது இந்த வடக்கத்தியான் "உன்னை உன் தாயாரிடம் அழைத்துப் போகிறேன்" என்கிறான். இது என்ன பைத்தியக்காரத்தனம்?

ஒருவேளை கனவு காண்கிறோமோ? அல்லது தனக்கு மரணமே சம்பவித்து விட்டதா? மரணத்துக்குப் பிறகு நடக்கும் சம்பவமா இது?

இவர்கள்தான யமதூதர்களா? உண்மையிலேயே மறு உலகத்தில் உள்ள தன் தாயாரிடம் தன்னை அழைத்துச் செல்கிறார்களா?..

அப்படி இருக்க முடியாது. மறு உலகப் பிரயாணம் மோட்டாரில் நடைபெறும் என்று கேட்டதே இல்லையே! இந்த மனிதர்களும் ஆவி வடிவத்தினராகத் தோன்றவில்லையே?

சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளச் சீதா தன்னைத்தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டாள். கிள்ளிய இடத்தில் வலித்தது. தான் உயிரோடும் உடலோடும் இருப்பதும் நிச்சயம்.

ஆனாலும் இந்த மனிதன் இப்படிச் சொல்லுவதின் அர்த்தம் என்ன? மறுபடியும் நினைத்துக் கொண்டு சீதா சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்? சும்மா இரு! இல்லாவிட்டால் தெரியுமா?" என்று அந்த மனிதன் கையை ஓங்கினான்.

சீதாவின் சிரிப்பு அடங்கியது.

சற்று நேரம் காருக்குள் நிசப்தம் குடிகொண்டிருந்தது. வண்டி போகும் சத்தம் மட்டும் கேட்டது. சுற்றுப்புறம் எங்கும் ஒரே பொட்டை வெளி.

அந்த மனிதன் சொன்னதைத் தான் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையோ என்ற சந்தேகம் சீதாவுக்கு உதித்தது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு, "என்னை எங்கே அழைத்துப் போகிறீர்கள்?" என்று அந்த மனிதனைப் பார்த்து மறுபடி கேட்டாள்.

"அதுதான் சொன்னேனே? உன் தாயாரிடம் அழைத்துப் போகிறோம். உன் சகோதரரும் உன்னைப் பார்க்க ஆவலாயிருக்கிறார்!" என்று அம் மனிதன் சொன்னான்.

சீதாவின் திகைப்பு அதிகமாயிற்று. சகோதரன்! தன்னுடைய சகோதரன்!—சீதாவுக்கு முன்னால் பிறந்த ஆண் குழந்தையைப் பற்றி அவளு



டைய தாயார் சில சமயம் கூறிய துண்டு. ஆனால் பிறந்து மூன்று மாதத் திற்குள் அந்தக் குழந்தை செத்துப் போயிற்று. அதைக் குறித்து அடிக் கடி அவன் தாயார் புலம்புவாள். 'அவன் முகத்திலே பால் வடிந்தது. ராஜகளை சொட்டியது. சிரித்தால் ரோஜா மொட்டு மலருவதைப் போல இருக்கும். அவன் உயிரோடிருந்திருந் தால் எனக்கு ஒரு கவலையும் இல்லை. டன் தகப்பனார் இந்த மாதிரி இருப் பதைப் பற்றிக் கவலைப்படவே மாட் டேன். எனக்கும் உனக்கும் கொடுத்து வைக்கவில்லை!'' என்று ராஜம்மாள் அடிக்கடி புலம்பியது சீதாவுக்கு ஞாப கம் வந்தது. ஆனால் அந்தக் குழந்தை தான் பிறப்பதற்கு இரண்டு வருஷம் முன்பே செத்துப் போயிற்று. வேறு சகோதரன் தனக்குக் கிடையாது. ஆகா! உண்மையிலேயே ஒரு சகோ தரன் மட்டும் தனக்கு இருந்திருந் தால்? ...... இத்தகைய கஷ்டங்கள் எல்லாம் நேர்ந்திருக்குமா?

இந்த மனிதன் தன்னைப் பார்க்க யாரோ சகோதரன் காத்துக் கொண் டிருப்பதாக உளறுகிறான்! எதற்காக இம்மாதிரி அப்பட்டமான பொய் அவன் சொல்ல வேண்டும்?......

சீதாவின் எண்ணப் போக்கில் திடீ ரென்று ஒரு தடை ஏற்பட்டது. ஏதோ ஒரு சிறு மின்னல் போன்ற எண்ணம், —ஆச்சரியமான சந்தேகம்,—சாத்திய மென்று நம்புவதற்கு முடியாத அபி லாசை,—தோன்றியது. ஆனால் ஏன் உண்மையாயிருக்க முடியாது? இந்த மனிதன் எதற்காக இப்படிப்பட்ட பொய்யைக் கற்பனை செய்து சொல்ல வேண்டும்?—தன்னுடைய பிறப்பைக் குறித்து ஏதோ ஒரு மர்மம் இருக்க வேண்டும் என்று சில சமயம் தான் பகற் கனவு கண்டது உண்மையா யிருக்குமோ?— ''கல்யாணத்தை நிறுத்தி விடவும்'' என்று தன் தகப்ப னார் தந்தி அடித்ததின் காரணத்தை அவர் சொல்லவே இல்லை. அதைப் பற்றித் தனக்கு ஏற்பட்ட சந்தேகங் களில் ஏதேனும் உண்மை இருக் குமோ?—சீச்சீ! என்ன அசட்டுத் தனம்! ஓயாமல் கற்பனைக் கதைகளும் மர்மம் நிறைந்த நாவல்களும் படித்த தின் பலன் இந்தப் பிரமை யெல்லாம் என்று பல தடவை அவற்றை ஒதுக்

இத் தள்ளியிருக்கிறோமே? மறுபடியும் அந்தப் பிரமைகளுக்கு ஏன் இடங் கொடுக்க வேண்டும்?

ஆனால், இப்போது தன் வாழ்க்கையில் நடக்கும் சம்பவம் கற்பனைக் கதைகளை யெல்லாம் மிஞ்சியதாயிருக்கிறதே! துப்பறியும் நாவல்களில் வரும் மர்மத்தைக் காட்டிலும் பெரிய மர்மமாயிருக்கிறதே! உண்மையில் இந்த மனிதர்கள் யார்? எதற்காகத் தன்னைக் கொண்டு போகிறார்கள்? போகுமிடத்தில் தன்னுடைய கதி என்ன ஆகப் போகிறது?......

கொஞ்ச தூரத்தில் தீப வரிசைகள் தெரிந்தன. ஏதோ ஒரு பட்டணத்தை நெருங்குகிறோம் என்பதற்கு அறிகுறியான சந்தடி கேட்டதுடன் மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டு வந்தது.

ஒருவேளை சூரியா பின் தொடர்ந்து வருவதாயிருந்தால் அவனுக்கு இந்தக் காரைப் பிடிக்க அவகாசம் ஏற்படுவதற்கு யுக்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் மறுபடியும் சீதாவின் மனதில் உதித்தது.

"எனக்கு வயிற்றைப் பசிக்கிறது. தாகம் எடுக்கிறது. சாப்பிடுவதற்காவது குடிப்பதற்காவது ஏதாவது கிடைக்குமா?" என்று சீதா கேட்டாள். காரைத் தாமதப் படுத்த வேண்டும் என்றுதான்.

"ஆகட்டும்; பார்க்கலாம்" என்றான் அந்த மனிதன். சீதாவுடன் இது வரையில் ஹிந்தியில் பேசி வந்தவன் காரில் முன் பகுதியில் இருந்தவர்களிடம் வேறொரு பாஷையில் ஏதோ பேசினான். அந்த பாஷை பஞ்சாபியாகவோ அல்லது மார்வாரியாகவோ இருக்க வேண்டும். சீதாவுக்கு நன்றாகத் தெரியவில்லை.

ஏதோ ஒரு பட்டணத்தின் குறுகலான வீதிகளின் வழியாகச் சென்றது. கடைத் தெருவில் ஒரு ஹோட்டலுக்கு எதிரில் நின்றது. அந்த ஹோட்டல் வாசலில் பூரிகள், லட்டுகள், மற்றும் தித்திப்புப் பண்டங்கள் விற்பதற்கு வைத்திருந்தன. அந்தப் பண்டங்களின் மீது ஆயிரங் கோடி ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. அடுப்பில் சட்டுவத்தில் கொதித்துக் கொண்டிருந்த பழைய நெய்யின் மணம் சாக்கடை நாற்றத்தோடு கலந்து வந்து மூக்கைத் தாக்கியது.

வாய் அகன்ற பெரியதொரு பித்தளைச் சட்டுவத்தில் கெட்டியான பால் காய்ந்து கொண்டிருந்தது.

காரிலிருந்து ஒருவன் இறங்கி அந்தக் கடையண்டை போனான்.

சீதாவுக்கு ஒரு கணம் அங்கே கூச்சல் போட்டு ரகளை செய்யலாமா என்று தோன்றியது. உடனே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டாள். தெருவிலே போய்க் கொண்டிருந்த மனிதர்களைப் பார்த்ததும் "இங்கே கூச்சல் போடுவது ஒரு ஆபத்திலிருந்து இன்னொரு ஆபத்தில் தாண்டிக் குதிப்பதாகும்" என்று அவளுக்குத் தோன்றியது. அதுமட்டுந்தானா காரணம்? அவளுடைய உள்ளத்தின் அந்தரங்கத்தில் "இந்தப் பிரயாணத்தின் முடிவுதான் என்ன?" என்று தெரிந்து கொள்ளும் ஆவல் குடிகொண்டிருந்ததும் ஒரு காரணமாயிருக்கலாம். மனித உள்ளத்தின் விசித்திரங்களைப் பூரணமாகக் கண்டறிந்தவர்கள் யார்?

இறங்கிய மனிதன் பூரியும் மிட்டாயும் பொட்டணம் கட்டி எடுத்துக் கொண்டு, ஒரு பெரிய மண் சட்டியில் கொதிக்கின்ற பாலும் வாங்கிக் கொண்டு காரில் வந்து ஏறினான்.

வண்டியைத் தாமதப் படுத்தலாம் என்கிற சீதாவின் நோக்கம் அவ்வளவாக நிறைவேறவில்லை. ஏனெனில் ஐந்து நிமிஷத்துக்கு மேல் அந்த இடத்தில் வண்டி நிற்கவில்லை.

அந்தப் பட்டணத்தைக் கடந்து கொஞ்ச தூரம் போனதும் மறுபடியும் சாலையின் இருபுறமும் ஒரே பொட்டைத் திடலாகக் காட்சி யளித்தது. குட்டை குட்டையான கருவேல மரங்களையும் குத்துக் குத்தான புரசஞ் செடிகளையும் தவிர வேறு எதுவும் காணப்படவில்லை.

கொஞ்ச தூரம் அந்தச் சாலையில் சென்ற பிறகு கார் மறுபடியும் நின்றது. சீதாவைப் பார்த்து அந்த மனிதன் "பூரியும் மிட்டாயும் சாப்பிடுகிறாயா?" என்று கேட்டான்.

பூரி - மிட்டாயின் பேரில் மொய்த்திருந்த ஈக்களின் ஞாபகம் வரவே சீதா, "வேண்டாம்!" என்றாள்.

"பசிக்கிறது என்று சொன்னாயே?" என்று அந்த மனிதன் கேட்டான்.

"பூரி மிட்டாய் பிடிக்காது. அரிசிச் ாதம்தான் எனக்குப் பிடிக்கும்" ன்று சொன்னுள் சீதா.

"ஆகா! இந்தப் பெண்ணின் பேச்சைப் பார்! அரிசிச் சாதம் வேண்டுமாம்!" என்று சொல்லி அந்த னிதன் சிரித்தான்.

பிறகு, "கொஞ்சம் பாலாவது ாப்பிடு!" என்முன்.

அதையும் வேண்டாம் என்று சொல்லுவது சந்தேகத்துக்கு இட ாகும் என்று சீதா எண்ணி, "சரி; ாப்பிடுகிறேன்!" என்முன்.

மண் சட்டியிலிருந்து டம்ளரில் பாலை ஊற்றிச் சீதாவிடம் கொடுத்தார்கள். பால் கமகம வென்று ஏலக்காய், குங்கு ப்பூ முதலியவற்றின் மணம் வீசிக் கொண்டிருந்தது. சாப்பிடுவதற்கு மிக வும் ருசியாகவும் இருந்தது.

சீதா பால் சாப்பிட்டவுடன் கார் மறுபடியும் கிளம்பிற்று. சிறிது நேரத் துக் கெல்லாம் சீதாவுக்குக் கண்ணைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்தது. இது தூக்கந்தானு? அல்லது மயக் மா? — ஒரு வேளை பாலில் எதை யாவது கலந்து கொடுத்திருப்பார்களா? சீதா உடம்பு சுரமாய்க் கிடந்தபோது வ்வொரு நாள் மருந்து சாப்பிட்ட பிறகு இப்படித்தான் மயக்கமும் தூக்கமும் கலந்து வந்தது என்பது ஞாபகம் வந்தது. "ஐயோ! மயக்க மருந்து எதற்காகக் கொடுத்தார்கள்? தன்னைக் கொன்று விடுவார்களோ? கொன்று அந்த வனாந்தரத்தில் எறிந்து விடுவார்களோ? ஐயோ! இந்த கதிக்கா ஆளாகப் போகிறேன்? என் அருமைக் கண்மணியைப் பார்க்காமல் போகிறேனே? ஆகா! அவருக்கு நன்ருய் வேண்டும்! நான் கொலை யுண்டு செத்துப் போனதை யறிந்து அவர் சந்தோஷப்படட்டும்!

ஒரு கணம் கூச்சல் போடலாமா என்று சீதா நினைத்தாள். ஆனுல் கூச்சல் போடவும் முடியவில்லை. அப் படிக் கண்ணைச் சுழற்றியது; தலை சுற்றியது; உடம்பு சோர்ந்தது.

சாலையில் மறுபடியும் வண்டி நின் றது போலத் தோன்றியது. எதிரில் வந்த ஒரு வண்டி பக்கத்தில் நின்றது. ஏதோ தெரியாத பாஷையில் பேசிக் கொண்டார்கள். கிணற்றுக்குள் ளிருந்து பேசுவது போலக் கேட்டது. புதிதாக வந்த காரிலிருந்து ஒரு மூதாட்டி இறங்கி வந்து சீதா இருந்த வண்டியில் அவள் பக்கத்தில் ஏறிக் கொண்டதுபோ லிருந்தது. அப்புறம் சீதா அடியோடு நினைவை இழந்து நித்திரையில் ஆழ்ந்தாள்.

பதினெட்டாம் அத்தியாயம்

மண்டை உடைந்தது!

வைஸ்ராயின் நிர்வாக சபை அங்கத்தினர் கொடுத்த ஜாஜ்வல்ய மான இரவு விருந்து முடிவடைந்தது. விருந்தாளிகள் அவரவர்களுடைய கார் கிடைத்துப் புறப்படுவதற்கு அரை மணி நேரம் ஆயிற்று. வழக்கம்போல் ராகவனுடைய காரில் மாஜி திவா னும் அவருடைய புத்திரிகளும் ஏறிக் கொண்டார்கள். வண்டி போய்க் கொண்டிருந்தபோது தாமாவும் பாமா வும் விருந்தில் பார்த்தவைகளையும் கேட்டவைகளையும் பற்றிச் சளசள வென்று பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனுல் வழக்கம்போல ராகவன் அந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்ளாமல் மௌனமாயிருந்தான். மாஜி திவா னுடைய பங்களா வாசலில் வண்டி நின்றதும் அவரும் அவருடைய புதல்வி களும் காரிலிருந்து இறங்கினுர்கள். ராகவன் இறங்கவில்லை.

"மிஸ்டர் ராகவன்! நீங்கள் வர வில்லையா? ஒரு ஆட்டம் போட லாமே?" என்று தாமா கேட்டாள்.

"இல்லை; இன்றைக்கு வீட்டுக்குச் சீக்கிரமாகப் போக வேண்டும்" என்முன் ராகவன்.

அப்போது பாமா தாமாவிடம் ஏதோ இரகசியமாகச் சொல்ல, இரு வரும் கலகலவென்று சிரித்தார்கள்.

ராகவன் வண்டியிலிருந்து இறங்கிப் பங்களா முகப்பு வரையில் அவர்க ளுடன் சென்று, அங்கே நின்முன்.

"நீங்கள் எதற்காகச் சிரித்தீர்கள் என்று எனக்குத் தெரியும்!" என்முன்.

"பின்னே, தெரியாமல் இருக்குமா? விருந்தில் தாரிணியைப் பார்த்துப் பேசியதில் மதி மயங்கிப் போயிருக்கிறீர்கள் என்று சொன்னேன். அது உண்மைதானே?" என்று சொல்லித் தாமா மறுபடியும் சிரித்தான்.

"அதில் ஒரு பாதிதான் உண்மை. தாரிணியைப் புரட்சிக்காரி என்று நீங்கள் சொல்லிக் கொண்டிருந்தீர்களே? அது எவ்வளவு பெரிய தவறு என்று தெரிந்து கொண்டீர்களா?" என்று ராகவன் கேட்டான்.

"மிஸ்டர் ராகவன்! அது எப்படித் தவறு என்று சொல்கிறீர்கள்?"

"புரட்சிக்காரியாயிருந்தால் இன்றைய விருந்துக்கு வந்திருக்க முடியுமா? விருந்து கொடுத்த நிர்வாக சபை அங்கத்தினரும் அவருடைய மனைவியும் தாரிணியிடம் எவ்வளவு சிநேகமாக நடந்து கொண்டார்கள், பார்க்கவில்லையா? இன்னும் என்ன அத்தாட்சி வேண்டும்?"

"ஓ! ராகவன்! சில காரியங்களில் நீங்கள் இன்னும் பச்சைக் குழந்தையாக இருக்கிறீர்கள்! தாரிணி புரட்சிக்காரியாயிருந்தால் அவள் இன்றைய விருந்துக்கு வந்திருக்க முடியாதா? அது அவள் எவ்வளவு சாமர்த்தியசாலி என்பதைக் காட்டுகிறது!" என்றாள் பாமா.

"நம்முடைய சி. ஐ. டி. போலீஸார் எவ்வளவு சாமர்த்தியசாலிகள் என்பதையும் காட்டுகிறது!" என்றான் ராகவன் ஏளனமாக.

"அதுவும் உண்மை. சி. ஐ. டி. போலீஸார் வேண்டுமென்றுதான் அவளை விட்டு வைத்திருக்கிறார்கள். டில்லியில் புரட்சிக் கூட்டம் தங்கும் இரகசிய இடம் ஒன்று இருக்கிறது. அதைக் கண்டுபிடிப்பதற்காக அவளைச் சும்மா விட்டு வைத்திருக்கிறார்கள்!" என்றான் தாமா.

"அப்படியா? நம்ப முடியாத விஷயமாயிருக்கிறதே!" என்றான் ராகவன்.

"நீங்கள் நம்ப முடியாத விஷயங்கள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. அது போகட்டும். இன்றைக்கு வீட்டுக்குப் போவதற்கு அவசரம் என்ன?"

"இரண்டு நாளாகச் சீதாவுக்கு உடம்பு அதிகமாயிருக்கிறது. அதாவது அவளுடைய மனோ நிலை மேலும் கெட்டிருக்கிறது. அதனால்தான் சீக்கிரம் வீடு போகிறேன். ஒரு மாதம் லீவு எடுத்துக் கொண்டு அவளைச் சென்னையில் கொண்டுபோய் விட்டு விட்டு வரலாம் என்று இருக்கிறேன்."

"ஓஹோ! இப்போது தெரிகிறது. நீங்களும் சீதாவும் மட்டும் போகிறீர்களா? தாரிணியும் கூட வருகிறாளா?"

"தாரிணி என்னுடன் வரவில்லை. அவள் பம்பாய்க்குப் போகிறாள்."

"நீங்கள் சீதாவை மதராஸில் கொண்டு போய் விட்டுவிட்டுப் பம்பாய்க்குப் போகிறீர்களாக்கும்!"

"உங்களுக்கு எப்படித் தெரிந்தது? கிட்ட இருந்து கேட்டது போலச் சொல்லுகிறீர்களே?" என்றான் ராகவன் அதிசயத்துடன்.

"பாம்பின் கால் பாம்புக்குத் தெரியும் என்ற பழமொழி தெரியாதா?" என்றாள் பாமா.

இந்தச் சமயத்தில் பங்களாவுக்குள்ளே டெலிபோன் மணி அடித்தது. ஏற்கனவே பங்களாவுக்குள் சென்றிருந்த ஸ்ரீ ஆதிவராகாச்சாரியார் டெலிபோனை எடுத்து "யார்?" என்று கேட்டுவிட்டு "மிஸ்டர் ராகவனுக்கு டெலிபோன்" என்றார்.

ராகவன் உள்ளே போய் டெலிபோனை வாங்கிச் செய்தியைக் கேட்டான். அவனுடைய முகத்தில் கவலையும் பயமும் குடிகொண்டன.

"என்ன? என்ன?" என்று தாமாவும் பாமாவும் கேட்டார்கள்.

"சீதா சாயங்காலம் வெளியில் உலாவச் சென்றவள் இன்னும் திரும்பி வரவில்லையாம்! வேலைக்காரன் சொல்கிறான்!" என்றான் ராகவன்.

"சீக்கிரம் போய்ப் பாருங்கள். சாயங்காலம் எட்டு மணி சுமாருக்கு ஜந்தர் மந்தர் பக்கத்தில் ஏதோ கலாட்டா என்றும் துப்பாக்கிச் சத்தம் கேட்டது என்றும் விருந்தில் பேசிக் கொண்டார்கள்!" என்றான் தாமா.

"சீதாவுக்கும் துப்பாக்கிச் சத்தத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?" என்று ராகவன் கேட்டான்.

"இந்தக் காலத்தில் எப்போது என்ன நடக்கும் என்று சொல்வதற்கில்லை. எல்லாவற்றுக்கும் உடனே போய்ப் பாருங்கள். ஏதாவது உதவி தேவையிருந்தால் எங்களுக்கு டெலி

போன் பண்ணத் தயங்க வேண்டாம்!" என்றான் பாமா.

"ஆமாம், அப்பா! சீக்கிரம் போய்ப் பார்! அவசியமாயிருந்தால் டெலிபோன் பண்ணு!" என்றார் மாஜி திவான் ஆதிவராகாச்சாரியார்.

* * *

சௌந்தர ராகவன் வீடு போய்ச் சேர்ந்த பிறகு புதிய விவரம் எதுவும் தெரிந்துகொள்ள முடியவில்லை. சாயங்காலம் வழக்கம்போல் உலாவச் சென்ற அம்மாள் திரும்பி வீட்டுக்கு வரவில்லை என்று மட்டும் வேலைக்காரர்கள் சொன்னார்கள்.

"யாராவது சிநேகிதர்கள் வீட்டில் இருப்பதாக டெலிபோன் ஏதாவது வந்ததா?" என்று ராகவன் கவலையுடன் கேட்டான்.

"சிநேகிதர்கள் வீட்டிலிருந்து டெலிபோன் வரவில்லை. ஆனால் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து நாலு தடவை கூப்பிட்டார்கள்!" என்று சமையற்காரப் பையன் சொன்னான்.

ராகவன் சிறிது திடுக்கிட்டு, "போலீஸ் ஸ்டேஷனிலிருந்து என்ன செய்தி வந்தது?" என்று கேட்டான்.

"ஒன்றும் இல்லை. 'எஜமான் வீட்டுக்கு வந்து விட்டாரா?' என்று கேட்டார்கள். அவ்வளவுதான்!" என்றான் சமையற்காரப் பையன்.

பிறகு ராகவன் போலீஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோன் செய்தான். அவனுக்குத் தெரிந்த சிநேகிதரான போலீஸ் உத்தியோகஸ்தர் பேசினார்.

"யார், மிஸ்டர் ராகவனா? உங்களை ஒன்பது மணியிலிருந்து கூப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். விருந்துக்குப் போய் இப்போதுதான் திரும்பினீர்கள் போலிருக்கிறது! இங்கே உடனே புறப்பட்டு வந்தால் நல்லது!" என்றார்.

"என்ன விசேஷம்?" என்று ராகவன் கேட்டான்.

"விசேஷத்தை நேரில்தான் சொல்ல வேண்டும். உடனே புறப்பட்டு வாருங்கள்!" என்று சொன்னார் போலீஸ் அதிகாரி.

"இங்கே எனக்கு ஒரு தொந்தரவு நேர்ந்திருக்கிறது. என்னுடைய மனைவி சீதா சாயங்காலம் உலாவச் சென்றவள் இன்னும் திரும்பி வரவில்லை. தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை!"

"ஓஹோ! அப்படியா சமாசாரம்? நீங்கள் உடனே புறப்பட்டு வரவேண்டியது இன்னும் முக்கியமாகிறது!" என்றார் போலீஸ் அதிகாரி.

* * *

சௌந்தர ராகவன் போலீஸ் ஸ்டேஷனை அடைந்ததும் இன்ஸ்பெக்டர் முதலில் சீதாவைப் பற்றி அவனிடமிருந்து தகவல் கேட்டுக் கொண்டார்.

வேலைக்காரர்கள் சொன்னதைக் கூறிவிட்டு, "உங்களிடம் ஏதாவது தகவல் கிடைத்திருக்கிறதா?" என்று ராகவன் கேட்டான்.

"கிடைத்திருக்கிறது; ஆனால் உபயோகமான தகவல் இல்லை!" என்றார் இன்ஸ்பெக்டர்.

பிறகு, ஒரு கைத்துப்பாக்கியை எடுத்து மேஜைமேல் வைத்து, "இது யாருடையது, தெரியுமா?" என்றார்.

ராகவன் அதைப் பார்த்துத் திடுக்கிட்டான். பிறகு தயக்கத்துடன், "எனக்குத் தெரியாதே?" என்றான்.

"ராகவன்! என்னிடமே மறைக்கப் பார்க்கிறீரா! அழகாயிருக்கிறது!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"இல்லை; ஆமாம்; மன்னிக்க வேண்டும். முதலில் பார்த்தபோது தெரியவில்லை. என்னுடையதுதான். எப்படிக் கிடைத்தது?" என்று உளறித் தடுமாறினான் ராகவன்.

"நீங்கள் தகவல் கொடுத்திருந்தீர்கள் அல்லவா? அந்தப் புரட்சிக்கார ஆளிடந்தான் இருந்தது. அவனுக்கு எப்படிக் கிடைத்திருக்கும்? யார் கொடுத்திருப்பார்கள்?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"சத்தியமாக எனக்குத் தெரியாது!" என்றான் ராகவன்.

பிறகு அவனை இன்ஸ்பெக்டர் போலீஸ் ஸ்டேஷன் 'லாக்-அப்' அறைக்குள் அழைத்துச் சென்றார். அங்கே சூரியா தலையிலும் தோளிலும் கட்டுக்களுடன் உணர்வின்றிப் படுத்திருப்பதை ராகவன் கண்டான்.

"இவனைக் கைது செய்வது சுலபமான காரியமாயில்லை. நாலு போலீஸ் ஜவான்களைத் திமிறிக்கொண்டு தப்பிக்கப் பார்த்தான். அதன் பலனாக இவன் மண்டையிலும் தோளிலும் நல்ல அடி! மண்டை பிளந்தே விட்டது!" என்றார் இன்ஸ்பெக்டர்.

கண்காட்சியில் கலை நிகழ்ச்சி

★ ★ ★

தேசபக்த தீரர் ஸ்ரீ சத்தியமூர்த்தி தமது வாணாளில் ஆரம்பித்து வைத்த அரிய திருப்பணிகளில் மாகாண காங்கிரஸ் கமிட்டியாரால் நடத்தப்படும் சுதேசிப் பொருள் கண்காட்சி விழா ஒன்று. இடையில் யுத்த காலத்தில் சுதேசிப் பொருட் காட்சி நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. சென்ற வருஷத்தில் மீண்டும் தொடங்கப்பட்டது. இந்த வருஷத்தில் முன் எப்போதும் இல்லாத சிறப்புக்களுடன் கண் காட்சி விழா நடந்தது. சில தினங்களில் சுமார் ஐம்பதினாயிரம் ஜனங்கள் சுதேசிப் பொருட்காட்சியை வந்து பார்த்துவிட்டுப் போனார்கள்.

கண்காட்சி விழாவுக்கு இந்த வருஷம் முக்கியத்துவம் அளித்த பகுதிகளில் மின்சார இலாகாப் பகுதி ஒன்றாகும். இந்தப் பகுதியில் மின்சார சக்தியினால் நடக்கும் அற்புத வேலைகளையெல்லாம் தெளிவு படுத்திக் காட்டியிருந்தார்கள். மின்சார சக்தியின் அற்புதங்களைப் பார்ப்பதற்கு ஜனங்கள் வெகு நீளமான க்யூ வரிசையில் நின்றார்கள். மக்களின் அறிவை விசாலிக்கச் செய்வதற்குச் சிறந்த சாதனமாக மின்சாரப் பகுதி விளங்கிற்று. இதற்காகச் சர்க்கார் எவ்வளவு பணம் செலவழித்திருந்தாலும் தகும் என்று திட்டமாகச் சொல்லலாம்.

கண் காட்சிக்குப் பெரும் ஜனக்கூட்டம் தினந்தோறும் வரும்படி செய்த காரணங்களில் தினம் தினம் மாலை நேரங்களில் நடந்த ஆடல் பாடல் நிகழ்ச்சிகளைக் குறிப்பிட வேண்டும். அந்த நிகழ்ச்சிகளுக்குள் உயர்தரமாகவும் நூதனமாகவும் அமைந்தது "ஸ்ரீ ராமய்யாப் பிள்ளை வாரம்" என்று ஏற்படுத்தியதாகும். அந்த வாரத்தில் ஒவ்வொரு நாளும் பரத கலை ஆசிரியர் வழுவூர் ஸ்ரீ ராமய்யாப் பிள்ளையிடம் சிட்சை கற்றுக் கொண்ட குழந்தைகளின் பரத நாட்டியக் கச்சேரிகள் நடைபெற்றன. தற்சமயம் தமிழ் நாட்டில் உள்ள பரத நாட்டிய ஆசிரியர்களில் ஸ்ரீ ராமய்யாப் பிள்ளை இணையற்ற பிரபலமும் செல்வாக்கும் பெற்று விளங்குகிறார். தற்காலத்துத் தமிழ் மக்களின் மனதைக் கவரக்கூடிய விஷயங்களை பரத நாட்டியத்தில் பழைய கலைச் சிறப்புக் குன்றாமல் அமைத்துப் புகழ் பெற்றிருக்கிறார். முக்கியமாக, பாரதியார் பாடல்களுக்குத் தகுந்த நாட்டியத்தை அமைத்த பெருமை ஸ்ரீ ராமய்யாப் பிள்ளையைச் சேரும். அவருடைய பெயரால் நடந்த கலை வாரத்தில் ஒரு நாள் ஸ்ரீ ராமய்யாப் பிள்ளைக்கு "நாட்டிய கலா கேசரி" என்ற பட்டம் அளித்து, பழைய சம்பிரதாயப்படி பீதாம்பர சால்வையும், புது வழக்கப்படி அணி அலங்கார கேடயமும் பரிசு கொடுத்துக் கௌரவித்தார்கள். டாக்டர் சுப்பராயன் தலைமையில் நடந்த இந்த வைபவத்தில் ரஸிகசிரேஷ்டரான பிரதம நீதிபதி ஸ்ரீ ராஜமன்னார் "நாட்டிய கலா கேசரி" என்னும் பட்டம் பொறித்த கேடயத்தை ஸ்ரீ ராமய்யாப் பிள்ளைக்கு வழங்குவதைக் கீழே காணலாம்.

ஸ்ரீ ராமய்யாப் பிள்ளையிடம் பரத நாட்டியக் கலை பயின்ற சிஷ்யைகளில் புகழ் பெற்ற குமாரி ஹேமா மாலினி மேற்படி வைபவ தினத்தில் பரத நாட்டியம் ஆடிச் சபையில் கூடியிருந்த ஆயிரக் கணக்கான ரஸிகர்களை மகிழ்வித்தார்.



சுதந்திர மாளிகை

ஜெயமணி

3. குடியரசுத் தலைவர் : உப தலைவர் : மந்திரி சபை

இந்தியா பூரண சுதந்திரக் குடியரசாக விளங்கவேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையில் இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

சமஸ்தானங்களின் பிரதிநிதிகளும் முஸ்லிம் லீக் பிரதிநிதிகளும் இந்திய அரசியல் நிர்ணய சபையின் ஒன்றிரண்டு கூட்டங்களுக்குப் பின் அதில் கலந்து கொள்ள முற்பட்டார்கள். பிறகு இந்தியாவும் பிரிக்கப்பட்டதால் முட்டுக்கட்டைகள் மறைந்து இந்திய அரசியல் மகா சாஸனம் உருவாகத் துவங்கியது.

தலைவர்: இப்போது நிறைவேறியுள்ள இந்தியா அரசியல் திட்ட ஷரத்துக்களின்படி ஐந்து வருஷங்களுக்கு ஒரு தடவை இந்தியக் குடியரசுத் தலைவர் (பிரஸிடெண்டு) தேர்ந்தெடுக்கப் படுவார். இந்தியா பார்லிமெண்டு, இந்தியா ராஜாங்க சபை—இந்த இரண்டு சபைகளிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களும், மாகாண சட்ட சபைகளிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுமே இந்தியாவின் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். ஒரு மாகாணத்தில் இரண்டு சபைகள் இருக்குமாயின், கீழ்ச் சபையிலுள்ள அங்கத்தினர்களுக்கு மாத்திரம்தான் பிரஸிடெண்டு தேர்தலில் வோட்டுக் கொடுக்க உரிமையுண்டு.

இந்திய அரசியல் திட்டத்தையும் சட்டத்தையும் அனுசரித்து பிரஸிடெண்டுக்குப் பூரண நிர்வாக அதிகாரம் உண்டு. அவரே இந்தியாவின் பிரதம சேனாதிபதியாகவும் இருப்பார்.

பிரஸிடெண்டு தமது பதவியை ராஜிநாமா செய்ய விரும்பினால், அவர் தம்முடைய ராஜிநாமாக் கடிதத்தை இந்தியா பார்லிமெண்டு தலைவரிடமும் ராஜாங்க சபைத் தலைவரிடமும் சமர்ப்பிக்க வேண்டும்.

பிரஸிடெண்டு அரசியல் திட்ட விதிக்கு முரணாக நடந்து கொள்வாராயின், அவரைப் பதவியிலிருந்து விலக்க இந்தியா பார்லிமெண்டுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

முதலில் அவர்மீது குற்றச்சாட்டு அடங்கிய தீர்மானத்தைப் பார்லிமெண்டில் கொண்டுவர உத்தேசித்திருப்பதாகக் குறைந்த பட்சம் அச்சபையிலுள்ள காலில் ஒரு மடங்கு அங்கத்தினர்களாவது கையெழுத்திட்டு அறிவிக்க வேண்டும். சபையிலுள்ள மொத்த அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு மடங்கு தொகையினராவது அந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும். அத்தகைய தீர்மானம் பார்லிமெண்டில் நிறைவேறினால் ராஜாங்க சபையும், ராஜாங்க சபையில் நிறைவேறினால் பார்லிமெண்டும் மேற்படி குற்றச்சாட்டுகளை விசாரிக்க வேண்டும். அத்தகைய விசாரணையின்போது பிரஸிடெண்டு ஆஜராகித் தமது கட்சியை எடுத்துக் கூறலாம். அவ்வாறு விசாரித்த சபையின் அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு மடங்கு பேர் அதை உறுதி செய்து தீர்மானம் நிறைவேற்றுவார்களாயின், அன்றைய தினத்திலிருந்து பிரஸிடெண்டு விலக்கப்படுவார்.

ஒரு முறை இந்தியக் குடியரசின் பிரஸிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் மீண்டும் ஒரே தடவைதான் அந்தப் பதவிக்காகத் தேர்தலுக்கு நிற்கலாம்.

பிரஸிடெண்டு பதவிக்கு நிற்போர் இந்தியாவின் பிரஜையாக இருக்க வேண்டும். முப்பத்தைந்து வயது பூர்த்தியானவராக இருக்கவேண்டும். பார்லிமெண்டு தேர்தலுக்கு நிற்பதற்குரிய யோக்யதாம்சங்கள் உள்ளவராக இருக்கவேண்டும். இந்திய சர்க்காரிலோ, மாகாண சர்க்காரிலோ, அல்லது மேற்படி சர்க்காரகளின் அதிகாரத்துக்கு உட்பட்ட வேறிடத்திலோ ஊதியம் பெற்று எத்தகைய உத்தியோகமும் வகிப்பவராக இருக்கக்கூடாது. அவர் பார்லிமெண்டு, சட்ட சபைகளிலும் அங்கத்தினராக இருக்கக்கூடாது. அங்கத்தினராக இருந்தாலும் பிரஸிடெண்டு பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டபின், மேற்படி அங்கத்தினர் பதவியிலிருந்து விலகிவிட்டதாகவே கருதப்படுவார். கவர்னர்கள், இந்திய சர்க்கார், மாகாண சர்க்கார் மந்திரிகள் முதலியோர் பிரஸிடெண்டு பதவிக்காகத் தேர்தலுக்கு நிற்கலாம்.

பிரஸிடெண்டுக்கு உத்தியோக தோரணையில் தனி ஜாகை வசதி அளிக்கப்படும்.

தற்காலிகமாக பிரஸிடெண்டின் மாதச் சம்பளம் ரூ. 5500. இதைத் தவிர அலவன்ஸ் தொகையும் கொடுக்கப்படும். பிரஸிடெண்டின் சம்பளத்தையும் அலவன்ஸ் தொகையையும் நிர்ணயிக்கப் பார்லிமெண்டுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. பிரஸிடெண்டுக்கு அளிக்கப்படும் சம்பளம், அலவன்ஸ் தொகைகள் அவருடைய பதவி காலத்தில் குறைக்கப்படமாட்டாது.

பிரஸிடெண்டு தமது பதவியை ஏற்குமுன் இந்தியா பிரதம நீதிபதியின் முன்னிலையில் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

பிரஸிடெண்டின் பதவிக் காலம் முடிவதற்குள், அப்பதவிக்கு மீண்டும் தேர்தல் நடைபெற்று முடிந்துவிட வேண்டும்.

மரணம், ராஜினாமா, பதவியிலிருந்து விலக்கப்படுதல் போன்ற காரணங்களால் பிரஸிடெண்டு பதவி காலியானால், உடனேயோ அல்லது அதிலிருந்து ஆறு மாதங்களுக்கு மேற்படாமலோ தேர்தல் நடைபெற வேண்டும். அந்தத் தேர்தலில் வெற்றி பெறுவோரின் பதவிக் காலமும் ஐந்து வருஷம்தான்.

குற்றவாளிகளை மன்னிக்கவோ, இராணுவக் கோர்ட்டு உட்பட எந்தக் கோர்ட்டால் விதிக்கப்பட்டதாயினும் மரண தண்டனை உட்பட எந்தத் தண்டனையையும் குறைக்கவோ, ரத்து செய்யவோ அல்லது நிறுத்தி வைக்கவோ பிரஸிடெண்டுக்கு அதிகாரம் உண்டு.

இந்திய சர்க்கார் நிர்வாக சம்பந்தமான சகல நடவடிக்கைகளும் பிரஸிடெண்டின் பெயரால்தான் நடைபெற வேண்டும்.

உப தலைவர்: ராஜாங்க சபையின் தலைவரே இந்தியக் குடியரசின் உப தலைவராக (வைஸ் பிரஸிடெண்டு) இருப்பார். அவரும் ஊதியம் கிடைக்கும் வேறெந்தப் பதவியையும் வகிக்கக் கூடாது.

பிரஸிடெண்டு வேறு இடத்துக்குச் சென்றிருந்தாலோ அல்லது நோய் வாய்ப்பட்டிருந்தாலோ மீண்டும் அவர் வந்து பதவியை ஏற்கும் வரையில், உபதலைவரே தலைவர் பதவியில் இருந்து வருவார். மரணம், ராஜினாமா, பதவியிலிருந்து விலக்

கல்கத்தாவில் பாரதியார்



கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் டிசம்பர் 24, 25, 26உ களில் கல்கத்தா தமிழர்கள் பாரதி ஜயந்தி கொண்டாடினார்கள். மேற்கு வங்காள கவர்னர் டாக்டர் கட்ஜு விழாவை ஆரம்பித்து வைத்தார். ஸ்ரீமதி செல்லம்மா பாரதி அவர்களும் ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி அவர்களும் விழாவுக்கு விஜயம் செய்து கலந்து கொண்டார்கள்.

மேற்படி விழாவில் பரத நாட்டியம் அபிநயம் செய்து கவர்னரையும் சபையோரையும் மகிழ்வித்த குமாரி சாந்தாமணியின் நடனத் தோற்றத்தை மேலே காணலாம்.

கப்பந்தல் போன்ற காரணங்களால் பிரஸி டெண்டு பதவி காலியாகும் பட்சத்தில், மறுபடியும் புதிய பிரஸிடெண்டைத் தேர்ந்தெடுக்கும் வரையில் உபதலைவரே அந்தப் பதவியை வகிப்பார். தலைவர் பதவியை வகிக்கும்போது தலைவருக்கு உள்ள சகல அதிகாரங்களும், பொறுப்புகளும், விலக்குகளும் உபதலைவருக்கு உண்டு.

இந்தியா பார்லிமெண்டு, ராஜாங்க சபை அங்கத்தினர்கள் அடங்கிய கூட்டத்தில் உப தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார். அப்போது இரகசியமாக வோட்டுக் கொடுக்கும் முறையே அனுஷ்டிக்கப்படும்.

தேர்தலுக்கு நிற்கத் தலைவரைப் போலவே உபதலைவருக்கும் குறிப்பிட்ட யோக்கியதாம்சங்கள் இருக்க வேண்டும். தலைவரைப் போலவே காலியாகும் உப தலைவர் பதவிக்கும் வேறொருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

உபதலைவரின் பதவிக் காலம் ஐந்து வருஷமாகும். அவர் ராஜிநாமா செய்ய எண்ணினால், தமது ராஜிநாமாக் கடிதத்தைத் தலைவரிடம் அதாவது பிரஸிடெண்டினிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

உப தலைவருக்குத் திறமையில்லாவிட்டாலும் அல்லது அவர்மீது நம்பிக்கையில்லாவிட்டாலும் ராஜாங்க சபை அவ்வாறு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் உப தலைவரைப் பதவியிலிருந்து விலக்கி விடலாம். அவ்விஷயமாக ராஜாங்க சபை பார்லிமெண்டின் அங்கீகாரத்தையும் பெற வேண்டும். அத்தகைய தீர்மானம் கொண்டு வருவோர் பதினாலு நாட்களுக்கு முன்பே நோட்டீஸ் கொடுக்கவேண்டியதும் அவசியமாகும்.

உப தலைவரின் பதவிக் காலம் முடிந்துவிட்டாலும், வேறொருவர் அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் அவர் அப் பதவியில் இருந்துவரலாம்.

இவற்றைத் தவிரப் பிரஸிடெண்டின் கடமைகள் பற்றி விதிகளை வகுக்கப் பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு.

இந்த அரசியல் திட்ட வாசகங்களுக்கு முரணின்றி, தலைவர் அல்லது உப தலைவரின் தேர்தல் விஷயமாக ஒழுங்கு விதிகளை வகுக்கவும் பார்லிமெண்டுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

மந்திரி சபை: இந்தியக் குடியரசின் பிரஸிடெண்டுக்கு நிர்வாக விஷயமாக ஆலோசனை கூற ஒரு மந்திரி சபை அமைக்கப்படும். பிரஸிடெண்டுக்கு மந்திரிகள் என்ன ஆலோசனைகள் கூறினர் என்பதை விசாரிக்க எந்தக் கோர்ட்டுக்கும் அதிகாரம் இல்லை.

பிரதம மந்திரியையும், அவருடைய ஆலோசனையின் மீது மற்ற மந்திரிகளையும் பிரஸிடெண்டு நியமிப்பார்.

பார்லிமெண்டு, பிரஸிடெண்டு இவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கும் வரையில்தான் பிரதம மந்திரி பதவியில் இருக்க முடியும். அதாவது சட்ட சபையின் நம்பிக்கையை இழந்தாலோ அல்லது நிர்வாக ஊழல் காரணமாகவோ பிரதம மந்திரியைப் பதவியிலிருந்து அகற்ற பிரஸிடெண்டுக்கு அதிகாரம் உண்டு.

மந்திரி சபையினர் பார்லிமெண்டுக்குப் பொறுப்பாளிகளாக இருக்க வேண்டும்.

மந்திரிகள் பதவியை ஏற்குமுன், இந்தியா அரசியல் திட்டத்தின் கீழ் நன்னம்பிக்கையுடன், அந்தரங்க சுத்தியுடன், மனச்சாட்சிக்கு விரோதமின்றி, விருப்போ வெறுப்போ பீதியோ இல்லாமல் பாரபட்சமின்றி தமது கடமைகளைச் செய்வதாகவும், சர்க்கார் நிர்வாக சம்பந்தமான இரகசியங்களை வெளியிடுவதில்லையென்றும் பிரஸிடெண்டிடம் விசுவாஸப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பார்லிமெண்டில் அங்கத்தினராக இராத ஒருவரை மந்திரியாக நியமிக்க பிரஸிடெண்டுக்கு அதிகாரம் உண்டு. எனினும் மந்திரி பதவியை ஏற்ற ஆறு மாத காலத்துக்குள் அவர் பார்லிமெண்டு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்படாவிடில், அவருடைய மந்திரி பதவி காலாவதியாகி விடும்.

சர்க்கார் நிர்வாக விஷயமாகவும் சட்ட சம்பந்தமாகவும் இந்தியா மந்திரி சபையில் நிறைவேறும் சகல தீர்மானங்களையும் பிரஸிடெண்டுக்கு அறிவிக்க வேண்டியது பிரதம மந்திரியின் கடமையாகும். குறிப்பிட்ட விஷயத்தை மந்திரி சபையில் ஆலோசித்து முடிவு செய்யும்படி கூற பிரஸிடெண்டுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. பிரஸிடெண்டு கோரும் தகவல்களைப் பிரதம மந்திரி அவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

பிரதம மந்திரிக்கும் மற்ற மந்திரிகளுக்கும் இப்போது கொடுக்கப்பட்டு வரும் சம்பளம், இந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வந்த பின்னரும் கொடுக்கப்படும். எனினும் அவர்களுடைய சம்பளத்தை அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப் பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு.

நாளை வருவது

இன்றே

உலகப் பெயர்பெற்ற இந்த வியாபாரக் குறி டன்லப் ஸ்தாபனத்தின் நேர்மைக்கு ஓர் அறிகுறி. இது எங்கு காணப்பட்டாலும், வியாபாரப்பொருள்களின் மீதானாலும் சரி, விளம்பரங்களிலானாலும் சரி, அப்பொருள் அல்லது அவ்விளம்பரத்தின் நாணயத்தை அறிவுறுத்துகிறது. டன்லப் முதன் முதலாக நடைமுறையில் உபயோகிக்கக்கூடிய காற்றடைத்த டயர்களைத் தயாரித்தார்கள். இன்றும் பல வருஷ அனுபவத்தின் பயனாக நாளைவருவதை இன்றே செய்துகாட்டுகிறார்கள்.



டன்லப்

DX-333 TM.

இடியிலே மின்னல்



சிவகாமு.

அப்பா! எதற்குத்தான் இந்தச் சூறைக்காற்று இப்படிச் சாரலை வாரி வீசி அடிக்க வேண்டுமோ? இந்த மழை ஒரு பக்ஷம் மத்தியானத்திலிருந்து நய்ச்சல் ஒழிவு இல்லாமல் கொட்டுகிறது! பொழுது எப்படிப் போகும்? மணி எழுக்கே சாப்பாடு தயாராகிவிட்டது. படுத்தால் தூக்கம் எங்கே வருகிறது? வெளியிலே அப்படி இப்படித் திரும்பினால் மின்னல் கண்ணைப் பறிக்கிறது; 'திமர், திமர்' என்று நெஞ்சம் அதிரும்படி இடி இடிக்கிறது!

இந்தச் சூறாவளியிலே, கொட்டும் மழையிலே, கண்ணைப் பறித்து மறைந்து விளையாடும் மின்னல் வெட்டிலே, காது செவிடுபட வெடிக்கும் இடி முழக்கத்திலே, சிறிதும் சலனமில்லாமல் அந்த உச்சிப் பிள்ளையார் மலைதான் எவ்வளவு கம்பீரமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறது! அந்த மலையைக் காணும்பொழுதெல்லாம் எனக்கு ஏன் என் கணவருடைய ஞாபகம் வரவேண்டும்? இதோ, இயற்கையின் இத்தனை வெறியாட்டத்திலும் அவர் எவ்வளவு அமைதியுடன் தூங்குகிறார், பாருங்கள்!

• • •

போன வருஷத்துக்கு முந்தின வருஷம்; இதே புரட்டாசி மாதம்தான். ஒரு வாரம் விடாமல் நல்ல மழை; வயல்களெல்லாம் ஓரே வெள்ளக் காடு; அன்னை பொன்னி கரை பிரண்டும் பொங்க நுங்கும் நுரையுமாகச் சுழலிட்டுக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தாள். மணிக்கு மணி ஊரில் ஒவ்வொரு தெருவாக அழையா விருந்தாளியாக நுழைந்து கொண்டிருந்தாள்.

இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் நெஞ்சம் 'பகீர்' என்கிறது. அன்று நான் அநுபவித்த தனிமையும் பயமும் சொல்லத் தரமல்ல. வீட்டில் அம்மாவும் அத்தையும் என் இரு பக்கத்திலும் படுத்துக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் இதோ, இவர் படுத்து உறங்கும் இடம் அன்று காலியா யிருந்தது!

இத்தனை எண்ணங்களின் நடுவிலும் சுடர்விட்டு ஜொலிக்கும் அருவ நக்ஷத்திரம்போல என் பாட்டியின் உருவமும் ஆசீர்வாதங்களும்தான் முதலில் என் ஞாபகத்துக்கு வருகின்றன. பாவம், எப்படி எப்படி யெல்லாம் அவள் என் அறியாப் பருவத்தில் என் ஆசைக் கனவுகளைக் கிளப்பித் தூபம் போட்டாள், தெரியுமா? என் அழகையும் என் கை வேலையையும் எனக்கே சந்தேகம் வரும்படியாகப் புகழ்வாளே! நிலா வெளிச்சத்திலே சாதத்தைப் பிசைந்து கையில் போடும் பொழுது அவள் என் உள்ளம் குளிரச் சொன்ன சொற்கள் எட்டிலடங்குமா, எழுத்தில் அடங்குமா? அடிக்கொரு தடவை வாய் ஓயாமல், "சங்கு, நீ கவலைப் படாதேடா! மைதிலி தோம்புப் பாவாடையும் மேலாக்கு மாக நின்றாலே வரும் பிள்ளையாண்டான் இன்னொரு பெண்ணைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டான்!—நான் சொல்கிறேன், பார்! என் கண்ணை ஒரு கலெக்டரோ என்ஜினீரோ வந்துதான் கொத்திக் கொண்டு போகப் போகிறான்!" என் கட்டிக் கரும்பு பதினெட்டு முழப் புடவையைக் கட்டிக்கொண்டு அம்மி மிதித்து அக்கினியை வலம் வரும்போது நான் பார்க்கக் கொடுத்து வைத்திருக்கிறேனோ, இல்லையோ!" என்று என் தகப்பனாரிடம் சொல்லுவாள். அந்தச் சமயத்தில் என் தலை கழுத்திலா நின்றது!

பாட்டி சொன்னது அப்படியே பலித்தது. ஒரு நாள் மத்தியானம் திடீ

ன்று ஒரு பிள்ளையாண்டான் எங்கள் ட்டுக்கு வந்தான்.

“ரங்கசாமி ஐயங்கார் வீடு இது ானே?” என்று கேட்டான்.

நான் எழுந்துபோய், “ஆம்” என்றேன்.

“அவர் இருக்கிறாரா?”

“இல்லை, ஆபீசுக்குப் போயிருக்கிறார். ங்கள் யார்? என்ன விசேஷம்!”

“நான் ஒரு விஷயமாக அவரைப் ர்த்துப் பேசவேண்டும்” என்று சால்லிவிட்டு அவன் திண்ணையில் உட் ர்ந்தான்.

சிறிது நேரம் கழித்து, “கொஞ்சம் ண்ணீர் வேண்டும்” என்றான்.

அம்மா, யாரோ என்னவோ என்று ன்னிடம் ஒரு வெள்ளி டம்ளர் நிறையக் ாப்பியைக் கொடுத்தனுப்பினாள். நான் தைக் கொண்டுபோய் அவன் முன்னால் வைத்தேன்.

“அடடா! நான் தண்ணீர் அல்லவா கட்டேன்!” என்று சிரித்துக் கொண்டே சான்னான்.

“வேணுமானால் அதுவும் கொண்டு வரு றேன்!” என்று திரும்பினேன்.

“வேண்டாம், வேண்டாம்!” என்று சால்லிவிட்டு, அவன் காப்பியைக் குடித் ான்.

அப்பா வந்ததும், “ராஜகோபாலய்யங் ார் அனுப்பினார்!” என்றான் அவன். அப் ாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. “மன் ிக்க வேண்டும்; வாசலிலேயே இருந்து ட்டீர்களே! உள்ளே வாருங்கள்!” என்று சார உபசாரத்துடன் அவனைக் கூட்டிக் காண்டு வந்து கூடத்தில் உட்கார வைத் ார். பூமியில் கால் பாவாமல் சமையற் ட்டுக்கு ஓடிவந்து, “வந்த மனிதரை ப்படியா வாசலிலேயே உட்காரவைப்பது? ரியாதை ரொம்ப நன்றாக இருக்கிறது! வர்தான் நம்ம மைதிலியைப் பார்க்க வந் ருக்கும் மாப்பிள்ளை!” என்றார் என் ாயாரிடம்.

“அட ராமா! எனக்கென்ன தெரியும்?” ன்றாள் அம்மா.

அப்பாவும் அவரும் பத்து நிமிஷம் பேசி ருப்பார்களோ என்னவோ, அப்பா ள்ளே வந்து, “பிள்ளையாண்டானுக்குப் பண் பிடித்துவிட்டதாம்!” என்றார் ம்மாவிடம். அதைக் கேட்ட அம்மாவுக்கு ரே சந்தோஷம்!


முகூர்த்தத்துக்குத் தேதி வைத்துக் கொண்டு, அன்று இரவே அவருடன் என் தகப்பனார் கிளம்பினார். போவதற்கு முன் என்னை ஒரு வார்த்தை கேட்டுவிட்டுத்தான் போனார். கன்னங்கபடு இல்லாத அந்த சுந்தரவதனன்மீது குறை கூற என்ன இருக்கிறது?

ஊரிலிருந்து திரும்பிவந்த அப்பா, பத்து வயதுப் பால்யப் பிராயம் அடைந்துவிட்டவரைப்போலத் துள்ளிக் குதித்தார். மாப்பிள்ளையின் குணத்தைப் பற்றியும், அவனுடைய ஆஸ்திபாஸ்தியைப் பற்றியும் புகழ்ந்தார், புகழ்ந்தார் அப்படிப் புகழ்ந்தார்! “ஸ்ரீமதி மைதிலி கள்ளிப்பட்டி ஜமீன்தார் அம்மா!” என்று கேலி செய்துகொண்டே, “மைதிலி! உன் கிராமத்து வீட்டுக் கொல்லையிலே தென்னை மரம், மாமரம், புளிய மரம் எல்லாம் இருக்கிறது. பெரிய பட்டறைக் கேணி. நாலைந்து ஆட்கள் வேலை செய்தவண்ணம் இருக்கிறார்கள்!” என்று கலியாணமாவதற்கு முன்பே எனக்கு அந்தச் செல்வத்தை உரிமையாக்கிவிட்டார்!

ஆகக்கூடி எப்படியோ கலியாணம் நடந்தது. ஆனால் எந்த ஜீவன் என்னுடைய நல்வாழ்வுக்காகத் தவம் இருந்து ஆசீர்வாதம் செய்ததோ, அந்த ஜீவன் மட்டும் நான் கங்கணமும், கூறைப் புடவையுமாக நிற்பதைப் பார்க்காமலே கண்ணை மூடிவிட்டது!

2

கலியாணமான ஆறாவது மாதம் என்னை என் கணவருடன் புக்ககம் அனுப்பி வைத்தார்கள். அப்பாவுக்கு லீவு கிடைக்காததாலும் அம்மாவுக்கு வரச் சந்தர்ப்பப்படாததாலும் அவரே வந்து என்னைக் கூட்டிக் கொண்டு போகும்படி ஆயிற்று. கள்ளிப்பட்டிக் கிராமத்துக்குப் போகக் கூடுவாஞ்சேரி ஸ்டேஷனில் இறங்கினோம். கிராமத்திலிருந்து வீட்டு வண்டி வந்திருந்தது; பெரிய





உட்கார்ந்திருப்பவர் (1):—என்ன அய்யங்கார்வாள்! வழக்கமாகத் திருமண் இட்டுண்டு வருவேள். இன்னைக்கு வெறும் நெத்தியோட வந்துட்டேளே!

உட்கார்ந்திருப்பவர் (2):—அட, போங்காணும்! அவர்தான் இன்னைக்குக் காசு வைத்து விளையாடப் போறதில்லையே!

இரட்டை மாட்டு வண்டி. அவர் பக்கத்திலிருந்ததிலும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே போனதிலும் நேரம் கழிந்ததே தெரியவில்லை.

இந்தப் புது மயக்கத்தில் என் மனம் ஆழ்ந்து இருந்தாலும், பாதை முழுதும் ஒரே காடு முரடாக இருந்ததும், பாதை என்று ஒன்றுமே வரையறையின்றி இருந்ததும் என் கண்களுக்குப் புலப்படாமலில்லை. ஒரு ஈ, காக்கையோ நிழல்தரு மரமோ ஒன்றும் அங்கு தென்படவில்லை. இந்த விஷயங்கள் என் மனத்தை உறுத்திக்கொண்டே இருந்தன.

"இன்னும் எத்தனை தூரம் இருக்கும்?" என்று கேட்டேன்.

"நாலைந்து மைல் இருக்கும். ஏன், உடம்பை வலிக்கிறதா?" என்று கேட்டார்.

"இல்லை" என்று சொல்லிவிட்டு, நான் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டேன்.

காலை ஏழு மணிக்கு வண்டியில் ஏறி உட்கார்ந்த நாங்கள், மத்தியானம் இரண்டு மணிக்கு ஒருவழியாகக் கள்ளிப் பட்டிக் கிராமத்துக்கு வந்து சேர்ந்தோம்.

"இதோ, வீடு வந்து விட்டதம்மா!" என்று வண்டிக்காரன் சொன்னபொழுது, வண்டி ஒரு தெருவில் நுழைந்து கொண்டிருந்தது. இரண்டு பக்கங்களிலும் இடிந்து விழுந்த குட்டிச்சுவர்கள், காயம் பட்டுக் காய்ந்த இடத்தில் ஏற்படும் தழும்பைப் போலத் திட்டுத் திட்டாக நின்றன. வண்டியிலிருந்து இறங்கியதும் தெருவை மேலும் கீழுமாகப் பார்த்தேன். நாலைந்து கூரை வீடுகள் தெரு என்ற பெயரைக் காத்து நின்றன.

என் கணவர் முன்னால் போக நான் அவரைப் பின் தொடர்ந்தேன். வீட்டை முதல் தடவை பார்த்ததுமே அது எனக்கு மனிதர்கள் வாசம் செய்யும் இடமாகத் தோன்றவில்லை.

கிராமத்துக்கு வந்த நாலு நாட்கள் வரை அவர் வீட்டை விட்டு நகரவில்லை. பிறகு பழையபடி வேலைக்குப் போக ஆரம்பித்து விட்டார். அவருக்கு நாள் முழுவதும் வயல்களிலும் தோட்டங்களிலும் வேலை இருந்துகொண்டே இருந்தது. வீட்டுக்கு வந்தாலும் அதைப் பற்றியே கவலை, பேச்சு எல்லாம். 'அந்த வயலுக்குக் களை பிடுங்க வேண்டும், இந்த வயலுக்கு எரு போட வேண்டும்' என்று இதே சிந்தனைதான். அவருக்கு நிலபுலன்களின் மீது இருந்த அக்கறையும் அபிமானமும் குடியிருந்த வீட்டின்பேரில் இல்லை என்பது வீடு இருந்த பரிதாபமான நிலைமையைப் பார்த்ததும் தெளிவாகத் தெரிந்தது.

இதுதான் இப்படி யென்றால் பசி வேளைக்கு ஆகாரமென்பது கிடையாது. அவர் காலையில் படுக்கையை விட்டு எழுந்து போனால் பத்து மணிக்கு வந்துதான் காப்பி என்று ஒன்றைச் சாப்பிடுவார். பிறகு வயலுக்குப் போனால் திரும்பிவர இரண்டு மணியாகும். அப்பொழுதெல்லாம் தாயார் என்னைப் படுக்கையிலிருந்து எழுப்பி, பரிவுடன் சுடச் சுடக் காப்பி கொடுத்ததையும், 'நேரமாயிடுத்துடி! உனக்குப் பசிக்கப்போறது! வந்து ஒரு வாய் சாப்பிட்டுட்டு மறு காரியம் பார்!' என்று உபசரித்ததையும் எண்ணி எண்ணிப் பெருமூச்சு விடுவேன்.

ஒரே சத்தமும் கூச்சலுமாக இருந்த திருச்சி நகர வாசத்திலிருந்து ஏதோ வனாந்தரத்திலிருக்கும் ஆசிரமத்துக்கு வந்து விட்டது போன்ற பீதி எனக்கு ஏற்பட்டது. நான் முழுவதும் 'ஹோ' என்ற காற்றில் மரங்கள் அசைவதால் உண்டாகும் இரைச்சலைக் கேட்க எனக்குப்

பயமா யிருந்தது. விளக்கு வைத்ததோ இல்லையோ, அநேகமாக எல்லோருடைய வீட்டிலும் சாப்பாடு முடிந்து, படுத்தும் விடுவார்கள். தெருவுக்கு வெகு சமீபத்தில் வயல்களிருந்ததால் தவளைகளின் சத்தமும், வெடிப்புச் சுவர்களிலிருந்து காதைத் துளைக்கும் சுவர்க் கோழிகளின் ரீங்காரமும் என்னை இரவில் கண்ணை மூட விடுவதே இல்லை.

ஆனால் வீடு மட்டும் நன்றாக இருந்திருந்தால் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளலாம் போலத் தோன்றிற்று. ஆகவே நான் வந்ததும் வாராததுமாக, 'வீட்டை ரிப்பேர் செய்யுங்கள்' என்று அவரை நச்சரிக்கத் தொடங்கினேன்.

3

திடீரென்று ஒரு நாள் இரவு நல்ல மழை பிடித்துக்கொண்டது. வீட்டில் ஒரு இடம் பாக்கி இல்லாமல் ஒழுக்கு கண்டு தண்ணீர் தெப்பமாக நின்றது. எனக்கு வந்த கோபத்துக்கும் எரிச்சலுக்கும் ஒரு அளவே இல்லை.

"இதோ பாருங்கள், இந்த வீட்டில் நான் எப்படிக் குடித்தனம் செய்வது என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கத்தினேன்.

"என்ன செய்வது? வீட்டைப் பழுது பார்த்தாக வேண்டும்; பொழுது இல்லை. முதலில் மாட்டுக் கொட்டகையைப் பழுது பார்த்தாக வேண்டுமே! இப்படி மழையில் நனைந்தால் மாடுகள் என்ன ஆவது?" என்று அவர் வருந்தினார்!

அடுத்த நாள் கொஞ்சம் வெய்யில் காய்ந்ததும் உடனே மாட்டுக் கொட்டகையை 'ரிப்பேர்' செய்துவிட்டு மறு காரியம் பார்த்தார்.

"ஆமாம், உங்களுக்கு நான் மாடுகளை விடக் கேவலமாகி விட்டேனா? நானும் படித்துப் படித்துச் சொல்லுகிறேன், இந்த வீட்டில் கொட்டும் மழையில் நான் எப்படி இருப்பது?" என்று இரைந்தேன்.

அவர் சிறிதாவது கோபிக்க வேண்டுமே, கிடையாது. சாவதானமாக, "வேலை வரட்டும்" என்று சொல்லிவிட்டுப் படுக்கப் போனார்.

"இந்த ரேழியில், இந்தப் புழுக்கத்தில் எப்படிப் படுத்துக்கொள்வது?" என்று கேட்டேன்.

"மைதிலி, ஏன் கத்துகிறாய்? நான் வேண்டுமானால் திண்ணையில் படுத்துக் கொள்கிறேன். நீ தாராளமாக இங்கே படுத்துக்கொள்" என்று சொல்லிவிட்டுத் திண்ணைக்குப் போய்விட்டார்.

இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் வியப்பாயிருக்கிறது. இதோ, ஒரு துளி மழை நீர் கூடச் சொட்டாத இந்தப் படுக்கை யறையில் கூட எனக்குத் தூக்கம் வராமல் பழைய சம்பவங்களை யெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆனால் அன்றிரவு ஒழுக்கு கண்டு சாரலும் வீசிக்கொண்டிருந்த அந்தத் திண்ணையிலே படுத்துக்கொண்ட பத்து நிமிஷத்துக்கெல்லாம் அவர் விடும் குறட்டைச் சத்தம் என் காதைத் துளைத்தது!

இப்படியாக அந்த ஊரின் மீதும், அதைவிட அந்த வீட்டின் மீதும் எனக்கிருந்த மனக் கசப்பு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போயிற்று. இதற்கு மத்தியில் என் தகப்பனார் காலமானார். அதற்காகப் பிறந்தகத்துக்குப் போனதில் இரண்டு மாதங்கள் தங்கும்படி நேர்ந்தது. அப்பொழுது வாரத்துக்கு ஒரு முறை எழுதும் கடிதத்தில்கூட வீட்டைப் பற்றிக் கடிந்து



ஜிப்பாக்காரர் :— என்ன ஓய்! போன வாரம் நான் எழுதின கதை எப்படி?

மற்றவர் :— அடாடா! என்ன ஹாஸ்யம், என்ன ஹாஸ்யம் அந்தக் கதையை எங்கள் வீட்டிலிருப்பவர்களெல்லாம் படித்துவிட்டுச் சிரிச்ச சிரிப்பிலே வயிறெல்லாம் புண்ணாய் விட்டது!

கதாசிரியர் :— நாசமாய்ப் போச்சு! நான் சோகக் கதையல்லவா எழுதினேன்!

எழுதினேன். என்ன சொல்லி என்ன, என்ன எழுதி என்ன? ஒன்றுக்கும் அவர் அசைந்து கொடுக்கவில்லை!

ஒருநாள் இரவு பெரிய மழை பிடித்துக் கொண்டது. எனக்கோ, எங்கே அந்தப் பழைய வீடு அப்படியே இடிந்து என் தலை மீது விழுந்து விடுமோ என்று நடுக்கம்!

இந்த நடுக்கத்தில் திடீரென்று அறையில் என்னவோ உறுமும் சத்தம் கேட்டு உதறி அடித்துக்கொண்டு எழுந்தேன். பயத்தினால் கை கால்கள் உதறல் எடுக்க விளக்கை ஏற்றினேன். ஒரு பெரிய பெருச்சாளி மூலையில் உறுமிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் எனக்குக் குலை நடுக்கம் எடுத்து விட்டது. நான் அதற்குப் பயந்துகொண்டு வெளியே ஓட யத்தனிக்க அது விளக்கு வெளிச்சத்தைக் கண்டு மிரண்டு குதிக்க, என்மீது அது உராய்ந்த வண்ணம் ஓடியது. நான் 'ஐயையோ!' என்று அலறிவிட்டேன். திண்ணையில் படுத்துக் கொண்டிருந்த அவர் எழுந்து வந்து, "என்ன, என்ன?" என்று கேட்டார். நான் "பெருச்சாளி, பெருச்சாளி!" என்று கத்தினேன். "அப்பாடி! இதற்கா இவ்வளவு அமர்க்களம்?" என்று அலட்சியமாகக் கேட்டுவிட்டு, மறுபடியும் அவர் திண்ணையை நோக்கித் திரும்பினார்.

எனக்குக் கோபம் கோபமாக வந்தது. "இந்தாருங்கள், இனிமேல் ஒரு நிமிஷம் கூட இந்தப் பாழடைந்த வீட்டில் என்னால் இருக்க முடியாது. நாளைக் காலையில் நான் திருச்சிக்குப் போகிறேன். உங்களுக்கு நான் வேண்டுமானால் என்னுடன் வந்து இருங்கள்!" என்றேன்.

"ரொம்ப நன்றாயிருக்கு; இந்த அற்ப விஷயத்துக்காக நீ கோபித்துக்கொண்டு போவதும், நான் உன் பின்னால் வருவதும் —பேஷ்!" என்றார்.

நான் சொன்னது அவருடைய காதில் விழுந்ததோ இல்லையோ, தெரியாது. ஐந்து நிமிஷத்தில் திண்ணையிலிருந்து அவர் விடும் குறட்டைச் சத்தம் கேட்டது!

அடுத்த நாள் காலையில் நான் மூட்டை கட்டிக்கொண்டு கிளம்பினேன். அவர் சிறிதும் பதட்டமடையாமல், "'மைதிலி' மழை கொட்டுகிறதே; வண்டி போகுமோ, போகாதோ! இரண்டு நாட்கள் தங்கி மழை நின்ற பிறகு உன் இஷ்டம் போலவே போயேன்!" என்றார்.

"அதெல்லாம் முடியாது; இந்த மழை அப்படியே என்னை அடித்துக்கொண்டு போய்விட்டாலும் சரிதான்!" என்று சொல்லி மூட்டையை எடுத்துக் கொண்டு நான் கிளம்பினேன்.

இன்று நினைத்துக் கொண்டாலும் ஆச்சரியமாக இருக்கிறது! எங்கிருந்துதான் எனக்கு அப்பொழுது அவ்வளவு தைரியமும் பிடிவாதமும் வந்ததோ, தெரியவில்லை!

4

திருச்சிக்கு வந்ததும் என் தாயாரிடம் நடந்த கதையைச் சொன்னேன். அதைக் கேட்டு அவள் அழுததற்கு ஓர் அளவு கிடையாது. சதா சர்வ காலமும் என்னைப் பற்றிய கவலைதான் அவளுக்கு. எனக்கும் வீட்டில் வேலை யொன்றும் இல்லாததால் வாழ்க்கை பயங்கரமாகத் தோன்றிற்று. கடைசியில் நாலாவது பாரத்தோடு கட்டிப் போட்ட புஸ்தக மூட்டையைத் தேடி எடுத்துக் கொண்டு, மீண்டும் பள்ளிக்கூடம் சென்றேன். ஒருவாறாக 'மெட்ரிக்குலேஷன்' பரீட்சையில் பாஸ் செய்து ஆசிரியைத் தொழிலிலும் பயிற்சி பெற்றேன். சில நாட்களுக்கெல்லாம் ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினியாகவும் அமர்ந்தேன்.

இந்த உபாத்தியாயினி தொழிலில், என் தனிமையையும் அதனால் ஏற்பட்ட மனப் புண்ணையும் ஒருவாறு ஆற்றிக்கொள்ளலாம் என்று நான் முதலில் நினைத்தேன். ஆனால் அது எவ்வளவு தவறு என்று வெகு சீக்கிரத்தில் தெரிய வந்தது. வகுப்பில் என்னைச் சுற்றிலும் நிர்மலமான இருதயம் படைத்த குழந்தைகள் கலகலவென்று ஓடி விளையாடின. 'டீச்சர், டீச்சர்' என்று என் மீது அவை உயிரையே வைத்திருந்தன. என் அருகில் அவை அடிக்கடி வந்து நின்று என்னுடன் பரிவோடு மழலைமொழி பேசின.

இந்த இன்பக் கனிகளான குழந்தைகளைக் காணக்காண, என் வறண்ட வாழ்க்கையின் பயங்கரம் ஒன்றுக்குப் பத்தாய் எனக்குத் தோன்றிற்று. இத்தகைய மனநிலையில் நான் அந்தத் தெய்வக் குழந்தைகளைச் சில சில சமயம் அகாரணமாகக் கோபித்துக் கொண்டு விடுவேன். அவர்களைக் காண வரும் பெற்றோர்களைக் கண்டாலும் எனக்குச் சில சமயம் பொறாமையாயிருக்கும். என்னுடைய இன்ப வாழ்க்கையை அவர்கள் தான் பிடுங்கிக் கொண்டு விட்டார்களோ என்றுகூடத் தோன்றும்.

இப்படியாக எங்கு பார்த்தாலும் கொடியும் கொம்புமாக இருந்த ஆண் பெண் பரிவைத்தான் நான் காண முடிந்தது. என்

ரிமையை அவை கண்டு பரிகசிப்பது ாலவும் இருந்தது.

•　　　•　　　•

ஆரம்பத்தில் சொன்னபடி சென்ற ருஷத்துக்கு முன் வருஷம் ஒரு வாரம் ரும் மழை பிடித்துக் கொண்டது. ட்டாவது நாள் இரவு மணி பதினொன்று ருக்கும். தாரை தாரையாகப் பொழியும் மழை; பேய்க் காற்றின் சீறல்; மின்னல், டி......!

இவ்வளவு பயங்கரமான பிரகிருதியின் ந்த வெறியிலும் உச்சிப் பிள்ளையார் ாயில் மலை அமைதியாகத்தான் இருந்தது. ந்த வேளையில்—அந்தச் சூழ்நிலையில்— ந்த மலையையும் அத்துடன் என் கற்பனை ுல் பிணைக்கப்பட்ட என் கணவரையும் ண்ணிப் பார்த்தேன்.

அடுத்த நிமிஷம் 'பட், படார்' என்று ரு பெரிய இடியின் சத்தம் கேட்டது. ன் மூடிக் கண் திறப்பதற்குள் அது ச்சிப் பிள்ளையாரின் மலை மீதே விழுந்து ட்டது போலிருந்தது. அவ்வளவுதான்; ன்னையும் மீறி நான் 'ஐயோ! அம்மா!" ன்று அலறி விட்டேன்.

"என்னடி, மைதிலி?" என்று கேட்டுக் ாண்டே அம்மா ஓடி வந்தாள்.

"என்ன, பயந்து விட்டாயா, மைதிலி! ட்ட கனவு ஏதாவது......"

"இல்லை; இடியா அம்மா விழுந்தது?"

"ஆமாம்; அதற்கா பயந்து விட்டாய்?"

"மலை மேலா விழுந்து விட்டது?"

"விழுந்திருக்கும்; அதனால் என்ன? பயப் ாதே, அம்மா!" என்றாள் அவள் ஒன்றும் யாமல்.

அதே சமயத்தில் வாசல் கதவைத் தடதட ன்று தட்டும் சத்தம் கேட்டு ஓடினேன்.

அவரேதான்!

மழையில் சொட்டச் சொட்ட நனைந் ந்தார்!

என்னைக் கண்டதும், "வீட்டை ரிப்பேர் ய்து விட்டேன், மைதிலி! உன்னை ழைத்துக்கொண்டு போகத்தான் வந்திருக் றேன்" என்றார் சிரித்துக்கொண்டே.

அவ்வளவுதான்; என் தாயார், அத்தை லானவர்கள் என் அருகில் இருந்ததைக் ட மறந்து, நான் அவருடைய காலில் படியே விழுந்து நமஸ்கரித்தேன்.



பிச்சைக்காரன்:— ஐயா, எனக்கு ஒரு பழைய கோட்டு இருந்தால் கொடுங்களேன், உங்களுக்குப் புண்ணியமாய்ப் போகட்டும்!

அவர்:— என் அப்பா, நீதான் இப்பொழுது ஒரு கோட்டு போட்டுக்கொண்டிருக்கிறாயே! அதுவும் கிழியாமல் இருக்கிறதே!

பிச்சைக்காரன்:—ஆமாம், இந்தக் கோட்டு தான் என் பிழைப்பையே கெடுக்கிறது!

★

"ஏன் ஸார்! உங்கள் பையன் அடிக்கடி காப்பி சாப்பிடுகிறான் என்று சொன்னீர்களே! அந்தக் கெட்ட பழக்கத்தைத் தடுப்பதற்கு என்ன செய்தீர்கள்?"

"டாக்டரிடம் போய் மருந்து வாங்கி வந்து ஒரு மாதம் கொடுத்தேன்."

"இப்பொழுது ஏதாவது குணம் தெரிகிறதா?"

"ஆகா? பேஷாய்த் தெரிகிறது. இப்பொழுது பையன் காப்பி சாப்பிடுவதை நிறுத்தி விட்டான். ஆனால் அந்த மருந்து வேண்டுமென்று அடிக்கடி கேட்கிறான்!"

★

புருஷன்:—நீ ஏன் இப்பொழுதெல்லாம் கிராமபோனுடன் சேர்ந்து பாடுவதில்லை?

மனைவி:—ஒருநாள் நான் பாடாமல் கிராமபோன் மட்டும் வைத்தேன். மறுநாள் அடுத்த வீட்டு அம்மாமி வந்து, 'எப்போ உங்காத்து கிராமபோனை ரிப்பேர் பண்ணினேள்?' என்று கேட்டாள்.

★

சாப்பிடுபவர்:—தம்பி ஒரு டம்ளர் ஜலம் கொண்டு வாயேன்! சீக்கிரம்!

பரிமாறுபவர்:—எதற்கு ஸார், அவ்வளவு சீக்கிரம் கேட்கிறீர்கள்? சாப்பிடத்தானே!

சாப்பிடுபவர் (கோபத்துடன்):—இல்லை, இல்லை! சாப்பிடுவதற்கு இல்லை; நீச்சல் அடிக்கிறதற்காகக் கேட்கிறேன்!

பயங்கர இயக்கம்

எஸ். வி. சௌந்தரராஜன்

இரவு பதினொரு மணி. நல்ல பனிக் காலம். திவான்பகதூர் அம்பலவாணரின் வீட்டைத் தவிர மற்ற வீடுகளிலுள்ள விளக்குகளெல்லாம் அணைக்கப்பட்டு எல்லோரும் சுகமாய்த் தூங்கிக் கொண்டிருந்தார்கள். தலைக்குப் பனிக் குல்லாயைப் போட்டுக்கொண்டு உடம்பை நல்ல சால்வையால் போர்த்திக்கொண்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார் திவான்பகதூர். முகத் தோற்றத்திலிருந்து அவர் யார் வரவையோ ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று தெரிந்தது. அடிக்கொருதரம் பெருமூச்சு விட்டுக் கொண்டே, அவர் தெருவுக்கும் வீட்டுக்குமாக நடந்து கொண்டிருந்தார். சிறிது நேரம் வாசலிலேயே நின்று, மூக்கு வாய்க் கட்டையைத் தடவிக் கொண்டிருந்தார். 'ஜில்' என்று காற்று அடிக்கவே குளிர் தாங்காமல் உள்ளே செல்லத் திரும்பினார். அப்பொழுது, தெருக் கோடியில் கார் வரும் சத்தம் கேட்டது. கேட்டை நன்றாய்த் திறந்து வைத்து விட்டு மறுபடியும் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டார்.



பூக்கடைக்காரன் (குள்ளனைப் பார்த்து) — இவங்களெல்லாம் பூ முழம் போட்டு வாங்கிக்கிட்டுப் போகணும்னு காத்துக்கிட்டிருக்காங்க. எங்கேடா தொலைஞ்சுபோனே? சீக்கிரமா வந்து முழம் போட்டுக் கொடுத்து அனுப்புடா!

மோட்டார்காரும் அம்பலவாணரின் வீட்டுவாசலில் வந்து நின்றது. நாலைந்து பிரமுகர்கள் காரிலிருந்து இறங்கி உள்ளே சென்றார்கள். உடனே வாசல் விளக்கும் அணைக்கப்பட்டது.

விளக்கு அணைக்கப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் திவான்பகதூரின் வீட்டு வாசலில் இரண்டு மூன்று போலீஸ் லாரிகள் வந்து நின்றன. லாரியிலிருந்த போலீஸ்காரர்களெல்லாம் கீழே இறங்கி, திவான்பகதூரின் வீட்டைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். இரண்டு ஸப் இன்ஸ்பெக்டர்களும், ஒரு ஸர்க்கிள் இன்ஸ்பெக்டருமாகச் சேர்ந்து அம்பலவாணரைக் கூப்பிட்டு, அவரையும் அவருடனிருந்த மற்ற பிரமுகர்களையும் கைது செய்து கொண்டு போனார்கள். அதோடு சில சாமான்களையும் அவர் வீட்டிலிருந்து எடுத்துக் கொண்டு சென்றார்கள்.

★

கொஞ்ச நாட்களாகவே ஊரில் திவான்பகதூரைப் பற்றிப் பலவிதமாய்ப் பேசிக் கொண்டார்கள். அரசாங்கத்துக்கு எதிராக அவர் ஏதோ சூழ்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறார் என்ற வதந்தி ஊரில் பலமாயிருந்தது. ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்டுவந்த காலத்தில் அம்பலவாணர் பெரிய உத்தியோகத்தில் இருந்தார். வெள்ளைக்கார உத்தியோகஸ்தர்களுக்குப் பல தேநீர் விருந்துகள் நடத்தி, திவான்பகதூர் பட்டம் வேறு பெற்றிருந்தார். யுத்தம் தீவிரமாய் நடந்து கொண்டிருந்த காலத்தில் நல்ல சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த உத்தியோகத்தை விட்டுவிட்டு 'மிலிடெரி காண்ட்ராக்ட்' எடுத்து லக்ஷக்கணக்காய்ச் சம்பாதித்தார். இவ்வளவு பணம் சம்பாதித்த போதிலும் அதை அநுபவிக்க அவரையும், அவர் மனைவியையும் தவிர அவர் வீட்டில் வேறு யாரும் இல்லை.

லட்சக்கணக்கான ரூபாய் நோட்டுகளை இரும்புப் பெட்டியில் வைத்துப் பத்திரப் படுத்தி, அவர் காவல் காத்துக் கொண்

ருந்த காலத்தில் சர்க்கார் ஆயிரம்
பாய் நோட்டுகளெல்லாம் செல்லாது
ன்று சொல்லிவிட்டார்கள். இதனால்
ம்பலவாணருக்கு லட்சக் கணக்கில்
ஷ்டம் ஏற்பட்டது. இவ்வளவு கஷ்ட
மற்படுத்திய சர்க்கார் மீது திவான்
கதூருக்கு ஆத்திரம் வராமல்
ருக்குமா? வருகிறவர்களிடமெல்லாம்
ர்க்காரைப் பற்றித் திட்டிக்கொண்டே
ருந்தார்.

பணம் போன அதிர்ச்சியை அம்பல
ாணரால் தாங்க முடியவில்லை.
க்கத்தை மறப்பதற்காகக் குடிக்கக்
ற்றுக் கொண்டார். கஷ்டத்திற்கு மேல்
ஷ்டமாகப் பணம் போன அதிர்ச்சியி
லயே அம்பலவாணரின் மனைவியும்
றந்துவிட்டாள். பணமும் போய்
னைவியும் இறந்துவிட்டதால் அம்பல
ாணர் நடைப்பிணம் போல் ஆகிவிட்
ார். போதாக் குறைக்குச் சென்னை
ர்க்கார் மதுவிலக்குச் சட்டத்தைத்
முலுக்குக் கொண்டுவந்து விட்டதால்
வான்பகதூரின் பாடு திண்டாட்டமாய்ப்
பாய்விட்டது. கொஞ்ச நாட்கள் வரை
ட்டோடு அடைபட்டுக் கிடந்தார். பிறகு
ரைவிட்டே மறைந்து விட்டார்.

★

திவான்பகதூரைச் சிலர் பம்பாயில்
ார்த்ததாகச் சொன்னார்கள். கல்கத்தா
ில் ஒரு சினிமா நட்சத்திரத்தைக் கலியா
ம் செய்துகொண்டு அவர் சௌகரிய
ாக இருப்பதாகச் சிலர் சொன்னார்கள்.
ன்னும் சிலர் அவர் சர்க்கார் விருந்
ாளியாகப் போய்விட்டார் என்றும்
சான்னார்கள். இப்படியாக அம்பல
ாணரைப் பற்றி ஊரார் வாய்க்கு
ந்தபடி யெல்லாம் பேசிக் கொண்
ருந்தார்கள்.

திடீரென்று ஒரு நாள் மாம்பலம்
்களாவிற்கு வந்து சேர்ந்தார் அம்பல
ாணர். எல்லோருக்கும் அவரைப் பார்க்க
ஆசை யிருந்தபோதிலும், அவர் வந்ததி
ருந்து தெருவில் ஸி. ஐ. டி.களின்
டமாட்டம் அதிகமாயிருந்ததால் யாரும்
வரைப் பார்க்க இஷ்டப்படவில்லை.
னால் இரவு நேரங்களில் பலர் கார்
ில் வந்து அவருடன் மணிக் கணக்
ாகத் தங்கிப் பேசிவிட்டுப் போனார்கள்.
வர்களை உறவினர்கள் என்றும் சொல்ல
டியவில்லை; நண்பர்கள் என்றும்
சால்ல முடியவில்லை. எது எப்படி
ருந்தாலும் அவர்கள் ஏதோ ஒரு விஷய
ாக அடிக்கடி கூடிப் பேசிக்கொண்டிருக்
ார்கள் என்று மட்டும் தெரிந்தது.




குடியிருப்பவள்:—சாமி! இந்தாங்கோ வீட்டு வாடகைப் பணம்.........!

வீட்டுக்காரி:—வெள்ளிக்கிழமை பார்த்து ஏன் கொடுக்கிறாய்? ஞாயிற்றுக்கிழமை கொடு! நாளைக்குச் சனிக்கிழமை,—எங்காத்துக்காரர் அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு போய் ரேஸ் ஆடித் தொலைத்து விடுவார்!

குடியிருப்பவள்:—நானும் அதற்குப் பயந்து கொண்டுதானே இன்றைக்கே கொடுத்து விடலாமென்று வந்தேன்!

வழக்கம் போல் ஒரு நாள் அம்பலவாணரின் வீட்டில் எல்லாப் பிரமுகர்களும் கூடி இருந்தபொழுதுதான் போலீஸ்காரர்கள் திவான் பகதூரையும் மற்ற பிரமுகர்களையும் கைது செய்தார்கள். ஜனங்கள் அம்பலவாணரைப் பற்றியும் அவருடைய பயங்கர இயக்கத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ள ஆவலாயிருந்தார்கள். அவரைக் கைது செய்த அடுத்த நாள் காலைப் பத்திரிகைகளில், "நேற்று இரவு திவான்பகதூர் அம்பலவாணரும், மற்றும் சில பிரமுகர்களும் இருட்டுத்தனமாகச் சாராயம் காய்ச்சிக் கொண்டிருக்கும்பொழுது கைது செய்யப்பட்டார்கள். அம்பலவாணரின் வீட்டிலிருந்து அநேக சாராய புட்டிகள் கைப்பற்றப் பட்டன" என்ற செய்தி வெளியாயிற்று.

பத்திரிகையைப் படித்த பிறகுதான் ஜனங்களுக்குத் திவான்பகதூர் நடத்தி வந்த பயங்கர இயக்கத்தைப் பற்றிய இரகசியங்கள் தெரிந்தன.



மாயக் கிணறு

பத்மநாபன்

மங்களபுரி அரசனுக்கும் அவன் தம்பி விஜயனுக்கும் சிறு வயது முதல் ஆகாது. ராஜ்யம் அவன் கைக்கு வந்ததும் விஜயன்மீது ஏதோ ஓர் அபாண்டப் பழியைச் சுமத்தி அவனைத் தன் தேசத்தை விட்டுத் துரத்தி விட்டான். அரசனது கட்டளைக்கு இணங்கி விஜயனும் ஒரு குதிரைமீது ஏறிக்கொண்டு அயல் நாட்டுக்குச் சென்றான். போகும்போது வழியில் ஒரு பெரிய பாலைவனம் குறுக்கிட்டது. அந்தப் பாலைவனத்தை மிகவும் கஷ்டத்துடன் தாண்டிப் போய்க் கொண்டிருந்தபோது, நல்ல வேளையாக விஜயன் ஒரு பாலைவனச் சோலையை அடைந்தான். அங்கே பத்துப் பன்னிரண்டு குடிசைகளும் சில பேரீச்சை மரங்களும் இருந்தன.

விஜயன் அந்த ஜீவ பூமியில் தங்கி இளைப்பாறிக் கொண்டிருந்தான். சமீபத்தில் ஒரு கிணறு இருந்தது. அந்தக் கிணற்றுக்குப் பக்கத்தில் இருந்த மரத்தில் ஒரு குடம் கட்டியிருந்தது; அது அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்து விஜயன் மிகவும் ஆச்சரியப் பட்டு, "இது என்ன?" என்று அங்கிருந்தவர்களைக் கேட்டான். அவர்கள், "இந்தக் கிணற்றில் ஒரு பூதம் வசித்து வருகிறது. அதில் யாரும் ஜலம் எடுக்க முடியாது. ஜலம் எடுக்கத் தோண்டியை விட்டுக் குடத்தில் ஜலம் நிறைந்து விட்டால், பிறகு எவ்வளவுதான் கயிற்றை இழுத்தாலும் குடம் தண்ணீரை விட்டு வெளியே வராது. இழுப்பவர்கள் கை சோர்ந்து கயிற்றை விட்டு விட்டால் உடனே ஒரு பெரிய பாம்பு கிணற்றிலிருந்து வெளியே வரும். அது ஜலம் இழுத்தவர்களைக் கடித்து விட்டுக் கிணற்றுக்குள் திரும்பிப் போய்விடும். பிறகு குடம் காலியாக மேலே வந்து தொங்கிக் கொண்டிருக்கும்" என்றார்கள்.




விஜயன் அவர்களை மேலும் விசாரித்ததிலிருந்து, கயிறைக் கைவிடும் வரை பாம்பு வருவதில்லை என்றும், வெளி வந்த பாம்பு இழுத்தவர்களைத் தவிர மற்றவர்களை ஒன்றும் செய்வதில்லை என்றும் தெரிந்து கொண்டான். உடனே "இந்தக் கிணற்றுக்குள் இருக்கும் பூதத்தை நான் வெல்ல விரும்புகிறேன். நீங்கள் எல்லோரும் அதற்கு ஒத்தாசை செய்வீர்களா?" என்று கேட்டான். வெகு உற்சாகத்துடன் அவர்களும் உதவி செய்வதாக வாக்களித்தார்கள். விஜயன் அவர்களுக்குச் சில யோசனைகளைக் கூறிவிட்டு, மறுபடியும் வருகிறேன் என்று சொல்லி விட்டுச் சென்றான்.

வாக்களித்தபடியே விஜயன்


ஒருநாள் திரும்பி வந்தான். கிணற்றைச் சுற்றி ஐந்நூறு பேரைத் தடிகளுடன் நிறுத்திவைத்தான். குடத்தைக் கிணற்றில் விட்டு நீர் முகந்து, ஒரே ஒரு அடி நீளக் கயிற்றை இழுத்துக் கையை எடுத்து விட்டான். உடனே கிணற்றிலிருந்து ஒரு அடி நீளமுள்ள பாம்பு ஒன்று விஜயனைத் தேடிவந்தது. கிணற்றைச் சுற்றி இருந்தவர்கள் அதைக் கொன்று விட்டார்கள். பாம்பு இறந்ததும், குடம் காலியாக மேலே வந்தது. மறுபடியும் விஜயன் குடத்தைக் கிணற்றில் விட்டு நீர் நிரம்பியதும் கயிற்றை இழுத்தான். இந்தத் தடவை ஒரு கஜ தூரம் இழுத்தபின்பு கையை எடுத்தான்; ஒரு கஜ நீளமுள்ள பாம்பு வந்தது. விஜயனின் ஆட்கள் அதையும் யமனுலகத்துக்கு அனுப்பினார்கள். இதேமாதிரி சின்னச் சின்னப் பாம்புகளாகவே கிணற்றிலிருந்து வரவழைத்து எல்லாவற்றையும் விஜயனின் ஆட்கள் கொன்று விட்டார்கள். கடைசியில், "விஜயா, உன்னுடைய புத்திக் கூர்மையை மெச்சினேன். நீ பாம்பைக் கொன்ற ஒவ்வொரு தடவையும், எனக்குப் பாம்பை உற்பத்தி செய்யும் சக்தி குறைந்து கொண்டே வந்தது. இப்போது என்னிடமிருந்த சக்தியெல்லாம் போய் விட்டதால் நான் இக் கிணற்றை விட்டு வெளியே போகிறேன். உனக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது!" என்று ஓர் அசரீரி வாக்கு கேட்டது. விஜயன் அதைக் கேட்டு ஆச்சரியமடைந்தான்.

கடைசியில் மாயக் கிணற்றின் ஜலம் எப்படி இருக்கிறது பார்க்கலாம் என்று நினைத்து விஜயன் ஒரு குடம் தண்ணீர் எடுத்து முகம், கைகால் இவற்றைக் கழுவிக் கொண்டான். அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. தண்ணீர் பாய்ந்த இடங்களிலெல்லாம் கட்டிடங்கள் தோன்றின! ஆச்சரியத்துடன், நிறையத் தண்ணீர் எடுத்துச் சுற்றுமுற்றும் தெளித்தான். அப்போது அங்கே ஓர் அரண்மனையும், ஓர் அரசன், அரசி, அரச குமாரி, முதலியவர்களும் தோன்றினார்கள். "விஜயா, உன் பெயருக்கேற்ற வெற்றியை நீ யடைந்தாய்! எங்கள் குல தேவதை ஏதோ கோபத்தால் இட்ட சாபம் எங்களையும் இந்த அழகிய நகரத்தையும், மண்ணில் புதைத்து விட்டது. நாங்கள் மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதின் பேரில், 'அனேக நாட்கள் கழித்து விஜயன் என்று ஒரு ராஜகுமாரன் இங்கே வருவான். அவன் பூதம் காக்கும் இக் கிணற்று ஜலத்தை எடுத்துத் தெளிக்கும்போது நீங்கள் எல்லோரும் சாப விமோசனம் அடைவீர்கள். அந்த விஜயனுக்கு உன் புத்திரியை மணம் செய்து கொடுத்து இந்த ராஜ்யத்தையும் அளி' என்று அது சொல்லிற்று. அதன்படியே, இதோ நிற்கும் என் குமாரியைக் கலியாணம் செய்து கொண்டு, நீ இந்த நாட்டையும் பரிபாலித்து வர வேண்டும்" என்று அரசன் கேட்டுக் கொண்டான்.



எஜமானர் :— இந்தமாதிரி சிக்கனம் எங்கேயடா தெரிஞ்சுக்கப்போனே? காரை நாலேயங்கலை ஓட்டிக்கொண்டு வரும்படியாக்க!

டிரைவர் :— என்ன இப்படிச் சொல்றீங்க, எஜமான்! நான்தானே இவ்வளவு தூரமும் காரை முழுக்க முழுக்கத் தள்ளிக்கிட்டு வந்தேன்!



வளரும் தமிழ்

ருநீர்மலை க்ஷேத்திர மகாத்மியம்

சென்னைக்கு அருகில் உள்ள திருநீர்
லை என்னும் க்ஷேத்திரத்தை அறியாத
ர்கள் இருக்க மாட்டார்கள். பாடல்
பற்ற வைஷ்ணவ க்ஷேத்திரங்களில் ஒன்று.
மாமலையாவது நீர்மலையே" என்று திரு
ங்கை யாழ்வார் இந்த க்ஷேத்திரத்தைப்
கழ்ந்து பாடியிருக்கிறார்.
ஒவ்வொரு க்ஷேத்திரத்திற்கும் ஒரு ஸ்தல
ராணம் இருப்பதுபோல, இந்தப் பழம்
பெரும் க்ஷேத்திரத்திற்கும் ஒரு ஸ்தல
ராணம் இருக்கிறதாம். அது பதினெண்
ராணங்களில் ஒன்றாகிய பிரம்மாண்ட
ராணத்திலே இடம் பெற்றிருக்கிற
ம். வடமொழியில் உள்ள அந்த ஸ்தல
ராணத்தை, பிரபல தேசபக்தரும் திருநீர்
லை தேவஸ்தான டிரஸ்டியுமான ஸ்ரீ
. என். முத்துரங்க முதலியார் அவர்கள்
வெளியிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு சுலோ
த்துக்கும் கீழே ஸ்ரீரங்கம் ஸ்ரீ சுந்தர
ராஜாச்சாரியார் எழுதிய தமிழ் மொழி
பெயர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. பக்தர்
ள் படித்து மகிழ்வதற்கு அருமையான நூல்.

ருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்

திருக்குறள் இரண்டாயிரம் வருஷத்
க்கு முன்னால் எழுதப்பட்டது. அந்தக்
ால வாழ்க்கைக்கும் இந்தக் கால வாழ்க்
கைக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்
றது. ஆனால் திருக்குறளைப் படிக்கும்
பாது அந்த வித்தியாசம் தோன்றவே
டையாது. இப்போதுதான் எழுதப்பட்ட
நூலைப்போல் நவயௌவனம் பெற்றுப்
பாலிகிறது. இதற்குக் காரணம் என்ன?
ள்ளுவர் பெருமான், வாழ்க்கைக்கு அடிப்
டையாக எப்போதும் விளங்கக் கூடிய பல
ண்மைகளைக் கண்டு பிடித்து அவற்றைத்
ம் குறட்பாக்களில் புகுத்தியிருப்பதுதான்.
தை பேராசிரியர் வரதராசனார் இந்த
வில் அருமையாக விளக்கியிருக்கிறார்.
பிரசுரம்: பொதிகைப் பதிப்பகம் லிமி
டட், கடலூர் (என். டி.) விலை: ரூ. 7.

நாட்டியம்

தமிழ் நாட்டில் நாட்டியக் கலை அதி வேகமாகப் பரவிக்கொண்டு வருகிறது. "நாட்டியமா? அது ஒரு கலையா?" என்று அலட்சியமாகக் கேட்டவர்கள் கூட இன்று அதைப் போற்றிப் புகழத் தயங்கவில்லை. இத்தகைய ஒரு அருமையான கலைக்கு ஒரு பத்திரிகை இருக்க வேண்டியது ரொம்ப அவசியந்தான். அதற்கு பிரபல நாட்டியக் காரரான ஸ்ரீ ரஞ்சன் ஆசிரியராக அமைந்திருப்பதும் பொருத்தந்தான்.

நாட்டியம் எப்படி உண்டாயிற்று என்பதைப் பற்றி ஸ்ரீ ரஞ்சன் இந்தப் பத்திரிகையில் எழுதியிருக்கும் கட்டுரை மிகவும் ரசமாக இருக்கிறது:

"சந்தோஷம் மிகுந்ததும் மனிதன் கூச்சலிட்டான்; குதித்துக் கூத்தாடினான்; கைகளைக் கூத்துக்குச் சரியாகக் கொட்டினான்; அவன் குதித்தது கூத்தாக மாறியது. அவன் கூச்சலிட்டது இசையாகவும் அவன் கைகளைக் கொட்டியது தாளமாகவும் மாறியது. கூத்து மனித நாகரிகத்துடன் போட்டி போட்டுப் பண்பட்டு நாளாக நாளாக நாட்டியமெனப் பெயர் பெற்றது."

ஸ்ரீ எஸ். வையாபுரிப் பிள்ளை, ஆசிரியர் சாம்பமூர்த்தி முதலிய பல பிரமுகர்கள் எழுதிய கட்டுரைகளும் "நாட்டியம்" முதல் இதழை அலங்கரிக்கின்றன.

தமிழிலா ஹிந்தி?

புதிதாக ஒரு பாஷையைக் கற்றுக் கொள்வதற்கு முன் அதன் எழுத்துக்களைக் கற்றுக்கொள்வதற்கு அளவு கடந்த பொறுமை வேண்டும். தேசிய பாஷையாகிய ஹிந்துஸ்தானி தென்னாட்டில் அதி வேகமாகப் பரவாததற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். வித்வான் ஆர். சேதுராம் தமிழ் பாஷை மூலமே ஹிந்தி பாஷையைக் கற்றுக் கொள்ளக்கூடிய விதத்தை ஆராய்ந்து அதை இப் புத்தகத்தில் எழுதியிருக்கிறார். "தமிழிலா ஹிந்தி?" என்று ஆச்சரியப்படுபவர்கள் இந்தப் புத்தகத்தைப் படித்து முடித்ததும் "அச்சா! பஹுத் அச்சா! சபாஷ்!" என்று சொல்லுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.


பிரசுரம்: பிரதாப் ஹிந்தி வித்யாலயம், 76, தெற்கு வீதி, திருவாரூர் கோயில் போஸ்ட். விலை: 1—4—0



மார்ச்சளி உபத்ரவத்துக்கும் ஓயாத இருமலுக்கும்

உங்களுக்கு பெப்ஸ் தேவை

ருசியுள்ள பெப்ஸ் மாத்திரைகள் முக்கியமாக மார்ச்சளி, சுவாசகோசத் தொல்லைகளுக்கு நிவாரணம் தருபவை. பெப்ஸ் மாத்திரை வாயிலே கரையும்போதே அதன் கிருமி நாசன மருந்து சத்துக்கள் சுவாசத்துடன் கலந்து புண்பட்ட எல்லா பாகங்களுக்கும் செல்கின்றன. பெப்ஸ் இருமலை நிறுத்துப், நெஞ்சுக்கு இதம் தந்து விஷக் கிமிருகளை ஒழித்து, கோழையை இளக்கி, வீக்கத்தை வாடச் செய்யும்.



பா. தநிற பெப்ஸ் மருந்துச் சத்துக்கள் எப்படி சுவாச மார்க்கத்தின் ஒவ்வொரு பாகத்தையும் அடைகிறது என்பதை விளக்குகிறது.

PEPS

சுவாச ஹிருதய கிருமி நாசன மாத்திரைகள்
தொண்டை, சுவாசாசயம், மார்பு நோய்களுக்கு நிவாரணமளிக்கும் சிறந்த ஔஷதம்



ஏஜண்டுகள்: மெஸர்ஸ். தாதா அன் கோ., பி. டி. மதராஸ்

No. 2

இடமாற்றம்

அறிவிப்பு

ஸ்ரீ நடராஜ விலாஸ்

ஜுவல்லரி ஹால் - சிதம்பரம்

மேற்படி கடை கட்டிடம் புதுப்பிப்பதை முன்னிட்டு வியாபாரங்களை சின்ன செட்டித் தெரு நம்பர் 16 எனது வீட்டில் 20-1-49 முதற்கொண்டு தற்காலிகமாக நான்கு மாதங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

செ. ரெத்தினசாமி செட்டியார்
தங்க நகை & வெள்ளிப் பாத்திர வியாபாரிகள்

சதிமேல் சதி

—கொழும்பு, ஜன. 23

இலங்கை இந்தியர்கள் இனித் தம்மை என்றுமே மறக்க முடியாதபடி செய்து கொண்டிருக்கிறார் மாஜி மந்திரி ஸ்ரீ ஸி. சுந்தரலிங்கம். இந்தியர் பிரஜா உரிமை மசோதா ஜனப் பிரதிநிதி சபையில் மூன்றாவது முறையாக நிறைவேற்றப் படுகையில், அவர் கொண்டுவந்த திருத்தங்களும் எழுப்பிய ஆட்சேபணைகளும் மந்திரிகளைத் திணற அடித்தன. முதலில் மசோதாவே அரசியல் திட்டத்துக்கு விரோதமானதென்று அவர் வாதாடினார். பிரஜா உரிமை பெறும் விஷயத்தில் கல்யாணமானவர், பிரம்மச்சாரி என்ற வேற்றுமை காட்டாமல் எல்லோருக்கும் ஐந்து வருட யோக்யதாம்சத்தை நிர்ணயிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். "இதெல்லாம் போகட்டும். நீங்கள் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளும் இந்தியர்களுக்காவது பூரண பிரஜா உரிமை அளிக்கக் கூடாதா?" என்று கேட்டுப் பார்த்தார். அவருடைய திருத்தங்களையும் இந்தியப் பிரதிநிதிகளின் திருத்தங்களையும் சர்க்கார் கட்சி மெம்பர்கள் கட்டுப்பாடாயிருந்து தோற்கடித்து விட்டனர். பிரதமர் சேனநாயகா மசோதாவை மூன்றாவது முறையாகப் பிரேரேபித்த பொழுது ஸ்ரீ சுந்தரலிங்கம் கடைசியாக இன்னொரு முயற்சி செய்து பார்த்தார். மசோதா சட்டமாக நிறைவேற்றப்படுவதை மூன்று மாத காலத்துக்காவது ஒத்தி வைக்க வேண்டுமென்று அவர் ஒரு திருத்தம் கொண்டுவந்தார். ஆனால் ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம், ஸ்ரீ கே. கனகரத்தினம் ஆகிய இரு தமிழ் மந்திரிகள் உள்பட சர்க்கார் கட்சி அங்கத்தினர்கள் எல்லோருமாகச் சேர்ந்து இந்தியர்களுக்குச் சரித்திரம் அறிந்திராத அநீதியை இழைக்கும் மசோதாவை மூன்றாம் முறையாகவும் நிறைவேற்றி விட்டனர்.

அடுத்த கைங்கரியம்!

இந்தியர்களை இந்த நாட்டின் அந்நியப் பிரஜைகளாக்கிய பிறகு அவர்களை நாடு கடத்த முயற்சிப்பதுதானே அடுத்த கடவடிக்கையாயிருக்க முடியும்! இவ் விஷயமாக இலங்கை மந்திரிகள் ஏற்கெனவே தங்கள் கைங்கரியத்தை ஆரம்பித்து விட்டனர். பார்லிமெண்டிலுள்ள சர்க்கார் கட்சி ஸ்ரீ குணசிங்கா தலைமையில் ஒரு உப கமிட்டியை நியமித்திருக்கிறது. அந்தக் கமிட்டியினர் கீழ்க் கண்ட மூன்று விஷயங்களைப் பற்றி இப்பொழுது பரிசீலனை நடத்தி வருகிறார்கள் :—

(1) இலங்கையிலிருக்கும் இந்திய,ஐரோப்பியத் தொழில் ஸ்தாபனங்களி லெல்லாம் 100-க்கு 75 சிப்பந்திகள் இலங்கையர்களாயிருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த சட்டம் செய்வது.


(2) தேயிலை . ரப்பர் தோட்டங்களில் உதவி நிர்வாக அதிகாரி பதவிக்கு இலங்கையர்களை மட்டுமே நியமிப்பது.

(3) இந்திய, ஐரோப்பிய முதலாளிமார் தங்களுடைய தொழில்களில் கிடைக்கும் லாபத்தில் 100-க்கு 25 வீதத்துக்கு மேல் இலங்கைக்கு வெளியே கொண்டுபோகக் கூடாதென்று தடை செய்வது.

மேலே குறிப்பிட்ட மூன்று விஷயங்களைப் பற்றியும் சட்டம் இயற்ற சர்க்கார் கட்சி தீர்மானித்திருக்கிறது. இதற்காகப் பொது ஜன அபிப்பிராயத்தை உப கமிட்டியினர் விசாரித்து வருகிறார்கள். இந்திய வர்த்தகச் சங்கத் தூதுகோஷ்டி யொன்று சென்ற வாரம் உப கமிட்டியைச் சந்தித்து, யார் யார் இலங்கையர் என்பதை யொட்டி முடிவான தீர்மானம் ஏற்படும் வரையில் மேற்படி யோசனைகளை ஒத்திப் போட வேண்டுமென்று வற்புறுத்தியது. இந்தியர்களில் எத்தனைபேர் இலங்கைப் பிரஜைகளாகிறார்கள் என்பது தெரிந்த பிறகுதான் ஏற்கெனவே வேலையிலுள்ளவர்களில் இலங்கையர்கள் எவ்வளவுபேர் என்பதைத் தீர்மானிக்க முடியும். இந்தியர் பிரஜா உரிமை மசோதாவின்படி இலங்கைப் பிரஜையாவதற்கு மனுச் செய்ய இரண்டு வருடகாலம் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தவணை முடிந்த பிறகுதான் இலங்கையர்களுக்கு 75 சதவிகித வேலை கொடுப்பதைப் பற்றி முடிவு செய்ய வேண்டும் என்று இந்திய வர்த்தகச் சங்கம் எடுத்துக் காட்டியுள்ளது.

அக்கிரமமான உத்தரவு

கொழும்புத் துறைமுகக் கமிஷனர் சமீபத்தில் பிறப்பித்திருக்கும் ஒரு அவசர உத்தரவு அமுலுக்கு வருமானால், ஒன்றிரண்டு வருடங்களுக்குள் துறைமுகத்திலுள்ள சகல இந்தியத் தொழிலாளரும் வேலையிலிருந்து நீக்கப்பட்டு அவர்களுடைய இடத்தில் சிங்களத் தொழிலாளர் நியமிக்கப்பட்டு விடுவர். சென்ற செப்டம்பர் மாதம் போக்குவரத்து மந்திரி ஸர் ஜான் கொத்தலாவலையும் இலாகா இல்லாத மந்திரி ஸ்ரீ குணசிங்காவும் ஒரு விசித்திர உத்தரவைப் பிறப்பித்தார்கள். அதாவது துறைமுகக் கண்டிராக்டர்கள் 50 இந்தியத் தொழிலாளரை வேலைக்கு அமர்த்திக் கொண்டால் 50 சிங்களத் தொழிலாளரையும் அமர்த்திக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். கடுமையான எதிர்ப்பின் காரணமாக இந்த உத்தரவு பிறகு திருத்தம் செய்யப்பட்டது. வேலையிலிருக்கும் இந்தியர் தாமாக வேலையிலிருந்து விலகினால் அவருக்குப் பதிலாக சிங்களவர்களையே நியமிக்க வேண்டுமென்றும், இவ்வாறு சுமார் பத்துப் பதினைந்து வருடங்களுக்குள் தொழிலாளர் படையைச் சிங்கள மயமாக்க வேண்டுமென்றும் மந்திரிகள் தங்களுடைய உத்தரவை மாற்றிக் கொண்டனர்.



ஜனவரி மாதம் 6-ந் திருச்சி ஜில்லா ஜெயங்கொண்ட சோழபுரத்தில் இந்த அசோக சின்னமும் காந்தி மகான் உருவமும் கலெக்டர் ஸ்ரீ வி. என். ராஜன் ஐ. சி. எஸ். அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த வைபவத்துக்கு ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் தலைமை வகித்தார். சிலை நாட்டும் முயற்சியை மேற்கொண்டு வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்த ஸ்ரீ கே. குஞ்சிதபாதம் பிள்ளையும், சிலைத் திருப்பணி செய்த ஸ்ரீ ராமஸ்வாமி ஸ்தபதியார், ஸ்ரீ ரத்தினக் கொத்தனார் ஆகியவர்களும் பொதுமக்களின் பாராட்டுதலைப் பெற்றார்கள்.

"இந்தியத் தொழிலாளரில் எவரும் சேர்ந்தாற்போல ஒரு மாத காலத்துக்குமேல் அனுமதிபெற்றோ அல்லது அனுமதி பெறாமலோ ரஜாவில் இருப்பார்களானால் அவர்களை வேலையிலிருந்து நீக்கி அந்த இடங்களில் சிங்களவர்களை நியமிக்க வேண்டும்" என்று துறைமுகக் கமிஷனர் சமீபத்தில் உத்தரவிட்டிருக்கிறார்.

துறைமுகத் தொழிலாளர் சேர்ந்தாற்போல நாலு, ஐந்து வருடகாலம் வேலை செய்துவிட்டு இரண்டு மூன்று மாத ரஜாவில் இந்தியாவுக்குச் சென்று வருவது வழக்கம். நாலு, ஐந்து வருடங்கள் வேலை செய்தால்தான் ஒரு முறை இந்தியா போய் வரும் செலவுக்கு அவர்களால் பணம் சேமிக்க முடியும். இரண்டாவதாகத் தொழிலாளர் இங்கிருந்து இந்தியா போகும் போது பிரயாணத்தில் நாலு நாட்களையும் திரும்பும்பொழுது சட்டப்படி மண்டபம் குவாரன்டைன் முகாமில் பதினைந்து தினங்களையும் வீணாக்க வேண்டியிருக்கிறது. இவ்விதம் சுமார் இருபது நாள் போய்விடுவதால் அவர்கள் ஒருமாத லீவு எடுத்துப் பிரயோசனமில்லை. இதை உத்தேசித்தே சேர்ந்தாற்போல சில வருடங்கள் வேலைசெய்துவிட்டு வருடத்துக்கு ஒரு மாதம் வீதம் லீவு எடுத்துக் கொண்டுபோவது வழக்கம். புதிய உத்தரவின்படி துறைமுகத் தொழிலாளர் ரஜாவில் இந்தியா போகவே முடியாது. போனால் அவர்களுக்குத் திரும்ப வேலை கிடைக்கவும் மாட்டாது. இந்த உத்தரவு அநியாயமென்றும் அதை அமுல் நடத்துவது அசாத்தியமென்றும், பலாத்காரமாக அமுல் நடத்தினால் துறைமுக வேலைகள் சீர்குலைந்து போய்விடுமென்றும் கண்டிராக்டர்கள் கமிஷனருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.



பட்டதாரி

ரா. விழிநாதன்

"ராமு, இன்றைக்குச் சினிமாவுக்குப் போய் வருவோமா? நல்ல படம் வந்திருக்கிறதாம். எங்கு பார்த்தாலும் அந்தப் படத்தைப் பற்றிய பேச்சாகத்தானிருக்கிறது" என்று என்னை வந்து அழைத்தான் நண்பன் பிச்சமணி.

பகல் முழுதும் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக்கிடந்த எனக்கும் எங்கேயாவது வெளியே போனால் நல்லது என்று தோன்றிற்று. ஆகவே அவனுடன் சினிமா பார்ப்பதற்குப் புறப்பட்டேன். தியேட்டர் வாசலில் கூடியிருந்த கும்பலைக் கணக்கிட்டு முடியாது. அவ்வளவு கூட்டம். கடவுளை ஆதியந்தம் அற்றவர் என்று சொல்லக் கேள்வி. அது உண்மையோ என்னவோ, எனக்குத் தெரியாது. ஆனால் அங்கே நின்று கொண்டிருந்த 'கியூ' வரிசைக்கு ஆதி எது, அந்தம் எது என்று எனக்குச் சரியாக விளங்கவேயில்லை. இந்தக் கலி காலத்தில் கண் கண்ட தெய்வம்—ஆதியந்தம் அற்ற தெய்வம்—இந்தக் 'கியூ' வரிசைதானோ என்று எனக்குத் தோன்றிற்று. நாங்களும் அந்தக் 'கியூ'வில் கால் கடுக்க நின்று டிக்கெட் வாங்கிக்கொண்டு சினிமா ஹாலுக்குள் நுழைந்தோம்.

எல்லாப் படத்தையும் போலவேதான் அந்தப் படமும் ஆரம்பமாகியது. எல்லா சினிமாக் கதைகளையும் போலவேதான் அந்தக் கதையும் 'சப்'பென்றிருந்தது. ஆடம்பர விளம்பரத்துக் கேற்ற அழகு அந்தப் படத்திலில்லை. படம் சில அடிகள் நகருவதற்குள்ளேயே எனக்குப் படம் பார்த்தது போதும் போதும் என்றாகிவிட்டது. ஆகவே, நண்பன் பிச்சமணியைக் கூப்பிட்டு, "நீ படம் பார்ப்பதாயிருந்தால் பார்த்து விட்டு வா. நான் வீட்டுக்குப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு அவன் பதிலை எதிர்பாராமலே வெளியேறினேன்.

தியேட்டர் காம்பவுண்டைத் தாண்டும் பொழுது கையைத் தட்டி 'ராமு, ராமு' என்று யாரோ கூப்பிடவே திரும்பிப் பார்த்தேன். எனது பழைய பள்ளித் தோழன் பஞ்சாமி வெற்றிலைப் பாக்குக் கடையில் உட்கார்ந்திருந்தான். அவனைப் பார்த்துக் கிட்டத்தட்ட நான்கு வருஷங்கள் ஆகிவிட்டன. அவன் என்னுடன் திருச்சி ஜோஸப் காலேஜில் இண்டர் மீடியட் படித்துக் கொண்டிருந்தான். அதற்கப்புறம் அவனைப் பற்றிய சமாசாரம் ஒன்றும் எனக்குத் தெரியாது.

"என்ன அப்பா, இங்கே உட்கார்ந்திருக்கிறாய்? இந்த ஊரில் தானா இருக்கிறாய்? என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று அவனருகில் சென்று கேள்விகளுக்கு மேல் கேள்விகளை அடுக்கினேன்.

"வா, அப்பா! நான் கூப்பிடக் கூப்பிடக் காதில் வாங்கிக் கொள்ளாமலே போகிறாயே! உட்காரு; என்ன சேதி? நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று அவன் என்னைத் திருப்பிக் கேள்விகளுக்கு மேல் கேள்விகள் கேட்கலானான். ஆனால் நல்லவேளையாக அவன் அந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில்சொல்லும் சிரமத்தை எனக்கு வைக்கவில்லை.

"பெஞ்சில் உட்காரு, அப்பா. வெற்றிலை போட்டுக் கொள்ளுகிறாயா? வெற்றிலை அப்புறம் போட்டுக் கொள்ளலாம். முதலில் இந்தப் பழங்களைச் சாப்பிடு" என்று சொல்லி இரண்டு மலை வாழைப்பழத்தைச் சீப்பிலிருந்து பறித்து என் முன்னே வைத்தான்.

"என்ன, இங்கே உட்கார்ந்திருக்கிறாய்? இது உன் கடையா, என்ன?" என்று நான் ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"இல்லையப்பா! என் கடையில்லை. அடுத்த வீட்டுக்காரர் கடை. ...கிரஷ் விம்டோ ஏதாவது சாப்பிடேன்" என்று சொல்லியவாறே ஒரு விம்டோ பாட்டிலை எடுத்தான் பஞ்சாமி.

"வேண்டாம் அப்பா!" என்றேன்.

"காசு-இசை கொடுக்க வேண்டுமே என்று யோசிக்கிறாயா, என்ன? கவலைப்படாதே. நான் கொடுத்துக் கொள்கிறேன்" என்று சொல்லியவாறே அவன் பாட்டிலைத் திறந்து விட்டான்.

"கடைக்குச் சரியான ஆள்தான் அப்பா நீ! நன்றாக வியாபாரம் செய்வாய்போலிருக்கிறதே!" என்று சொல்லிக்கொண்டே லிம்டோவை வாங்கிக் குடிக்கலானேன்.

"கடையிலே போய் உட்கார்ந்து வியாபாரம் செய்ய வரவில்லை என்றால் உருப்பட்டாற் போலத்தான்! உனக்கு விக்கிரமாதித்ய மகா ராஜன் கதை தெரியுமோ இல்லையோ? அவனுடைய சிம்மாசனம் இருந்த இடத்திலே ஒரு ஆட்டிடையன் போய் நின்றானாம். அவனுக்கு அழகழகாக நியாயம் வழங்கத் தெரிந்து விட்டதாம். அது போலத்தான் கடையிலே வந்து உட்கார்ந்து விட்டால் வியாபாரம் செய்யத் தானாக வந்து விடும். இதென்ன பிரமாதமான செப்பிடு வித்தையா?" என்றான் பஞ்சாமி.

"சரி, அதிருக்கட்டும். இப்பொழுது நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? இண்டர்மீடியட்டுக் கப்புறம் மேலே படித்தாயா, அல்லது விட்டு விட்டாயா?" என்று கேட்டேன் நான்.

"விட்டு விடுவதா? பி. ஏ. ஆனர்ஸ் பட்டம் வாங்கி வைத்திருக்கிறேன், அப்பா! சும்மா இல்லை. இங்கே பிரஸிடென்ஸி காலேஜில்தான் சேர்ந்து படித்தேன்."

"இப்பொழுது ஏதாவது வேலையில் கீலையில் இருக்கிறாயா, என்ன?"

"நான் அப்ளிகேஷன் போடாத இடமே இல்லை. என்றால் தபாலாபீஸுக்கு இது வரை கிட்டத்தட்ட ஐந்நூறு ரூபாய் வரை வரும்படி இருக்கும். ஆனால் வேலைதான் கிடைத்தபாடில்லை."

"என்ன அப்பா, இது? நீ சொல்வது ஆச்சரியமாக இருக்கிறதே! இரண்டு மாதத்துக்கு முன்னால் 'இன்கம்டாக்ஸ் ஆபீ'ஸில் ஆள் எடுத்தார்களே! அதற்காவது 'மனு'ப் பண்ணிப் பார்க்கக் கூடாதோ?"

"அந்தக் கதையை ஏன் கேட்கிறாய்? இந்தா, இந்த வெற்றிலையைப் போட்டுக்கொள். இது அசல் கும்பகோணம் வெற்றிலை! தளிர் வெற்றிலை! என்ன இருந்தாலும் கும்பகோணம் வெற்றிலைக்கு ஈடு கும்பகோணம் வெற்றிலைதான்! அதன் மதிப்பே தனிதான். என்ன, நான் சொல்லுவது! கும்பகோணம் சீவலே தாட்டுமா? அல்லது ஏதாவது வாசனைப் பாக்குத்தான் தாட்டுமா?" என்று வெற்றிலைப் பாக்கைக் கொடுத்துப் பேச்சை மாற்றினான் பஞ்சாமி.

அவனைப் பற்றிய முழு விவரத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் என் உள்ளத்தில் இன்னும் அதிகரித்தது.

"வெற்றிலைக் கென்ன? போட்டுக் கொள்கிறேன். முதலில் உன் வேலை விஷயம் என்னவாயிற்று, சொல்லு!" என்று கேட்டேன் நான்.

"உன்னிடம் சொல்வதற்கென்ன? அந்த விளம்பரத்தை நீ பார்த்தாயல்லவா?"

"பார்த்தேன். பார்க்காமல் இருந்தால் உன்னிடம் அதைப் பற்றிப் பிரஸ்தாபித்திருப்பேனா?"

"எஸ். எஸ். எல். ஸி. அல்லது மெட்ரிகுலேஷன் பாஸ் செய்திருந்தாலே போதுமானது என்று அந்த விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்தார்கள்."

"தெரியும், சொல்லு."

"நாம்தான் பி. ஏ. ஆனர்ஸ் பட்டம் வாங்கியிருக்கிறோமே? நமக்குக் கிடைக்காமல் போய்விடுமா?" என்று எண்ணினேன். ஆகவே, அப்பாவிடம் அந்த விளம்பரத்தைக் காட்டி அபிப்பிராயம் கேட்டேன். அவரும் கட்டாயம் கிடைத்துவிடும் என்று நம்பி, என் கையில் ஐம்பது ரூபாய் பணத்தைக் கொடுத்து நல்ல ஸூட்டும் கோட்டும் தைத்துப் போட்டுக்கொண்டு 'இண்டர்வியூ'வுக்குப் போய்வரும்படி சொன்னார்..."

"ஆனால் நீ போகவில்லையாக்கும்!"

"போனேன், அப்பா! சொல்வதற்குள் இப்படி அவசரப்படுகிறாயே! பட்டதாரியான நமக்குக் கட்டாயம் வேலை கிடைத்துவிடும் என்ற திட நம்பிக்கையின் அஸ்திவாரத்தின் பலத்தைக் கொண்டு நான் என்னவெல்லாமோ மனக் கோட்டைகள் கட்ட ஆரம்பித்துவிட்டேன். ஆனால் அந்த மனக்கோட்டைகள் எல்லாம் மாலை நாலு மணி ஆவதற்குள் தகர்ந்து மண்ணோடு மண்ணாகிவிட்டன."

"விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லு, அப்பா! இந்த வீண் வர்ணனையெல்லாம் அப்புறம் ஆகட்டும்!" என்றேன் நான்.

"நான் அவ்வளவு திட நம்பிக்கையுடன் இன்கம்டாக்ஸ் ஆபீஸுக்குப் போனேனா? அங்கே போய்ப் பார்த்தால் சென்னை மாநகரமே திரண்டு வந்துவிட்டதோ என்று சொல்லும்படி 'கியூ' வரிசை நின்று கொண்டிருந்தது. அவர்கள் வேலைக்கு

எடுத்துக் கொள்ளப் போவது முப்பது பேரோ நாற்பது பேரோதான். அதற்காக கியூவில் காத்துக் கொண்டு நின்றவர்கள் எத்தனைபேர் தெரியுமா? மூவாயிரத்துக்குக் குறைவில்லை. அதில் எத்தனை எஸ்.எஸ்.எல்.ஸி.க்கள், எத்தனை பட்டதாரிகள் என்று யார் கண்டார்கள்?

"கடும் வெய்யில். இமயமலையில் பனிப்பாறை நகருவதுபோலக் 'கியூ' மெதுவாக நகர்ந்தது. கடும் வெய்யிலில் நின்றதனால் ஏற்பட்ட தலைவலியோ தாளமுடியவில்லை. இருந்தாலும் வேலை கிடைக்கப் போகிறது என்ற நம்பிக்கை எனக்குப் பலத்தை அளித்தது. கடைசியில் ஒருவாறாக அதிகாரிக்கு எதிரே போய் நின்றேன்.

"அதிகாரி ஒருதடவை என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ஊர், பெயர், படிப்பு முதலியவற்றை விசாரித்தார். நான் பாக்கட்டில் வைத்திருந்த சர்டிபிகேட்டை எடுத்து அவரிடம் கொடுத்தவண்ணம், 'பி. ஏ. ஆனர்ஸ் முதல் வகுப்பில் பாஸ் செய்திருக்கிறேன், ஸார்' என்றேன்.

"அவ்வளவுதான். அதிகாரி சர்டிபிகேட்டைப் பிரித்துக்கூட பார்க்கவில்லை. அதை என் கையில் திருப்பிக் கொடுத்த வண்ணம், 'எத்தனை பேருக்குத்தான் சொல்கிறது? எங்களுக்கு எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்கள்தான் வேண்டும். பட்டதாரிகள் தேவையே இல்லை' என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார்.

"நான் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு வெளியே வந்தேன். என்னைப் போலவே எத்தனையோ வேலை தேடிவந்த பட்டதாரிகளெல்லாம் சோபை விழுந்து நின்றார்கள். நான் அந்தக் கண்ணறாவியைப் பார்த்துக் கொண்டு அதிக நேரம் நிற்கவில்லை.

"வீட்டுக்கு வந்து அப்பாவிடம் விஷயத்தைச் சொன்னேன். அவர் வந்த ஆத்திரத்தில், 'உன் உருப்படாத பட்டத்தைக் கொண்டு உடைப்பில் போடு' என்றார்.

"உடனே மின் வேகத்தில் எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று. 'அப்பா, எனக்காக நீங்கள் எத்தனையோ ஆயிரம் ரூபாய் செலவழித்தீர்கள். எனக்காக இன்னும் இருநூறு ரூபாயைத் தண்டம் அழுது விடுங்கள். நான் எப்படியாவது பிழைக்க வழி தேடிக்கொள்கிறேன்' என்றேன்.

"அவரும் இருநூறு ரூபாய் கொடுத்தார். அதைக்கொண்டு........" என்று அவன்

சிரிப்பானேன் ?



உபாத்தியாயர்:—அடே ராஜு, என்னைப் பார்த்து ஏன்டா நீ சிரித்தாய் இப்போது?

ராஜு:—நான் உங்களைப் பார்த்துச் சிரிக்கவில்லை, ஸார்!

உபாத்தியாயர் (கோபத்துடன்):—என்னைப் பார்த்துச் சிரிக்கவில்லையென்றால் இங்கே சிரிப்பதற்கு வேறு என்னடா இருக்கிறது?

சொல்லி முடிப்பதற்குள் தியேட்டரில் இடைவேளை மணி அடித்துவிட்டது.

"அதைக்கொண்டு......என்ன அப்பா?" என்று கேட்டவாறே நான் எட்டணாவை எடுத்து நீட்டினேன். அவன் அதை வாங்கிக்கொள்ள மறுத்தான்.

"சேச்சே! எனக்கு எதற்கப்பா இன்னொருத்தன் காசு? உன் கடையாக இருந்தாலும் போனால் போகிறது என்று போய்விடுவேன்" என்று சொல்லி எட்டணாவை அவன் கையில் திணித்தேன்.

"சரி, நீ இவ்வளவு நிர்ப்பந்தப்படுத்திக் கொடுக்கும்பொழுது நான் வாங்கிக் கொள்ளாமல் இருக்கக்கூடாது. இந்தா, பாக்கிச் சில்லறை. உன்னிடம் உண்மையை மறைப்பானேன்? அப்பா கொடுத்த அந்த இருநூறு ரூபாயைக் கொண்டு ஆரம்பித்த கடைதான் இது. ஏதோ வியாபாரம் நன்றாக நடந்துவருகிறது. கூட்டம் வரும் நேரமாகிவிட்டது. கொஞ்சம் வியாபாரத்தைக் கவனிக்கட்டுமா?" என்றான் பஞ்சாமி.

நானும் "ஆகட்டும் அப்பா!" என்று சொல்லி அவனிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியேறினேன்.

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

240. யாராவது மிஞ்சினார்களா!

பிரஹஸ்தன் என்பவன் ராவணனது சேனைத் தலைவன். ராவணனைப் போலவே அவனையும் அவமானமும் கோபமும் மனசைப் பிடுங்கித் தின்கின்றன. அவன் பேசுகிறான்:

"அந்த மனிதர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள். கரன் முதலியவர்களை எப்படியோ கள்ளத்தனமாகக் கொன்று விட்டார்கள். இப்போதே போய் அவர்களைத் தீர்த்து விட வேண்டாமா?"

'கரன்முதல் வீரரைக்
கொன்ற கள்வரை,
விரிகுழல் உங்கைமூக்(கு)
அரிந்த வீரரை,
பரிபவம் செய்தாரைப்
படுக்க லாதுநீ
அரசியல் அழிந்ததென்(று)
அயர்தி போலுமால்.'

[விரிகுழல் உங்கை: விரிந்த கூந்தலோடு ஓடிவந்த உன் தங்கை, சூர்ப்பனகையின்; மூக்கு அரிந்த வீரரை: மூக்கை அரிந்த அந்தப் பொல்லாத வீரரை;—வீரரை: ஏளன வார்த்தை, கோழைகள் என்பது பொருள்; பரிபவம் செய்தாரை: துயரத்தை யெல்லாம் உண்டாக்கின வரை; படுக்கலாது நீ: கொன்று விடாமல் ஏக சக்ராதிபதியாகிய நீ: அரசியல் அழிந்தது என்று: ஏதோ அரசாட்சியே பிடுங்கிக் கொண்டார்கள் என்பதாக: அயர்தி போலுமால்: வேண்டாதபடி திகைப்புக்கு உள்ளாகிறாயே!]

∴

"யுத்தம் செய்து அதனால் உண்டான வெற்றி காரணமாக அல்லவா மூன்று உலகுக்கும் அதிபதியாக இருக்கிறாய் நீ."

'செற்றனர் எதிரெழுந்
தேவர் தானவர்
கொற்றமும் வீரமும்
வலியும் கூட்டற
முற்றிமூன் றுலகின்நீ
முதல்வன் ஆயது,—
வெற்றியோ பொறைகொலோ
விளம்பல் வேண்டுமால்.'

[செற்றனர் எதிரெழும்: எதிர்ப்பவர்களாய் ஒன்று சேர்ந்து போர்முனையில் எழும்; தேவர் தானவர்: மிகப் பலசாலிகளான தேவர்கள் தானவர்கள்; இவர்களது கொற்றமும் வீரமும் வலியும்: வெற்றிகளென்ன, வீரம் என்ன பலம்தான் என்ன; கூட்டற முற்றி: எல்லாவற்றையும் ஒன்றும் இல்லாமல் தீர்த்து விட்டு; மூன்று உலகின் முதல்வன் ஆயது: வானலோகம், பூலோகம், பாதாள லோகம் ஆகிய மூன்று உலகங்களுக்குமே அதிபதி ஆனாய் அல்லவா, அப்படி ஆனது; வெற்றியோ: போர் செய்து வெற்றியால் ஆனதோ; பொறை கொலோ: பொறுமையாய் இருந்து இருந்துதான் ஆயதோ; விளம்பல் வேண்டுமால்: கொஞ்சம் தயவு செய்து சொல்லேன் பார்க்கலாம்!]

∴

"நாம் என்ன செய்திருக்க வேண்டும். ஓடிப்போன குரங்கைத் தொடர்ந்து போய் இருக்க வேண்டும். குரங்கை ஏவிய அந்த மனிதர்களையும் கொன்றிருக்க வேண்டும். அப்படிச் செய்து நம்முடைய துன்பத்தைத் தீர்த்திருக்க வேண்டும். அப்படி ஒன்றும் செய்யவில்லை நாம்."

'போயின குரங்கினைத்
தொடர்ந்து போய்,அதை
ஏயினர் உயிர்குடித்(து),
எவ்வந் தீர்கலம்,—
வாயினும் மனத்தினும்
வெறுத்து வாழ்துமேல்
ஓயும்நம் வலி'என
உரைக் கூறினான்.

[ஏயினர்: ஏவினவர்களுடைய; உயிர் குடித்து: உயிரை நீக்கி; எவ்வம் தீர்கலம்: துன்பத்தை நீக்கிக்கொள்ள முயலவில்லை: வாயினும் மனத்தினும் வெறுத்து வாழ்து

மல் : அந்த மனிதர்களை வாயினுல் வைது
னத்தினுல் வெறுத்துச் செயல் ஒன்றும் செய்யாமல் பொழுது போக்கிக் கொண் ருப்போமானுல் ; ஓயும் நம் வலிமை : மது சக்தி எல்லாம் இல்லாமலே போய் விடும் என்று : உணரக் கூறினுன் : ராவணன் னதில் நன்ருய்ப் படும்படி பேசினுன்.

குறிப்பு: அரக்கர்களுக்குச் சேனைத் தலைவன் பிரஹஸ்தன். ராவணனுக்கு வந்த அவமா னத்தைத் தாங்க முடியவில்லை அவனுக்கு. யுத்தத்துக்கான வேலை செய்யாது சும்மா இருப்பது பெருங் கேட்டை விளைவிக்கும் என்று பயப்படுகிருன். அந்த பயத்தினுல் ராவணன் மேல் கோபமே வருகிறது.]

பிரஹஸ்தன் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்தான். அவனுக்குப் பின் மகோதரன் பேச ஆரம்பித்தான். பிரஹஸ்தனை ஆமோதித்த முறையில்தான் அவனும் பேசுகிருன்.

மற்றவன் பின்னுற
மகோத ரப்பெயர்,
கற்றடந் தோளினன்
எரியுங் கண்ணினன்
முற்றுற நோக்கினன்
முடிவும் அன்னதால்
கொற்றவ கேள்'என
இனைய கூறினுன்.


[மற்றவன் பின்னுற : பேசிய பின் பிரஹஸ்தனைத் தொடர்ந்த மாதிரியே ; மகோதரப் பெயர் : மகோதரன் என்னும் பெயரைக் கொண்டவன் ; கற்றடந் தோளினன் : மலைபோன்ற தோளை உடையவன் ; எரியுங் கண்ணினன் : வீர வேசத்தோடு சிவந்த கண்ணினனும் ; முற்றுற நோக்கினன் : நடந்த காரியம் வரும் காரியம் எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தவனும் ; முடிவும் அன்னதால் : பிரஹஸ்தன் சொன்னது சரிதான் அப்படித்தான் நடக்க வேண்டும் ; கொற்றவ கேள் என : வீர பராக்கிரமம் கொண்ட ராவணனே நான் சொல்லப் போவதைக் கேட்க வேண்டும் என்று : இனைய கூறினுன் : பின் வருபவற்றைக் கூறினுன்.]

“ராவணேசுவரனே! உன்னுடைய பராக்கிரமத்தை எளிதில் மதித்துவிட முடியுமா? தேவர்கள் என்றும், யக்ஷர் என்றும் தானவர் என்றும் மிக்க வலிமை பெற்றவர்கள் இருக்கிருர்கள். அவர்கள் எல்லாரும் உனக்குத் தோற்றுப் போனவர்கள் தானே?”

தேவரு மடங்கினர்,
இயக்கர் சிந்தினர்,
தாவருந் தானவர்
தருக்குத் தாழ்ந்தனர்,
யாவரும் இறைவரென்(று)
இறைஞ்சு மேன்மையர்
மூவரும் ஒதுங்கினர்
உனக்கு மொய்ம்பினேய்.

[தேவரும் மடங்கினர் : மகா பலசாலிகளான தேவர்கள் என்று சொல்லப் பட்டவர்கள் எதிர் நிற்கமுடியாமல் புறங்காட்டி ஓடினுர்கள் ; இயக்கர் சிந்தினர் : யக்ஷர் என்பவர் சிதறுண்டு போனுர்கள் ; தாவருந் தானவர் : வெல்ல முடியாத தானவர்களும் ; தருக்குத் தாழ்ந்தனர் : வீரத்தால் ஆகிய மேம்பாடு இழந்தவர்கள் ஆனுர்கள் ; யாவரும் இறைவரென்று இறைஞ்சும் மேன்மையர் மூவரும் : எல்லாரும் கடவுள் என்று வழிபடும் உயர்ந்தோரான பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளுமே ; ஒதுங்கினர் உனக்கு : உன்முன் நிற்கமுடியாது ஓடிப் போய் விட்டார்கள் என்று சொல்ல வேண்டும் ; மொய்ம்பினேய் : யாராலும் அசைக்க முடியாத வலிமை உடைய ராவணனே !]

மூவரும் ஒதுங்கினர் என்றல்லவா வார்த்தை வருகிறது. அப்படி வரும் போதுதான் வீர வெறியின் உண்மையான தொனி கேட்கிறது.



தோட்டம் முதலாளி :—நீ உடைக்கிற கண்ணுடி டம்ளர்களை யெல்லாம் கணக்கெண்ணிச் சம்பளத்திலே பிடிக்கிறது என்று ஆரம்பித்தால் டம்ளர்களின் கிரயம் உன் சம்பளத்துக்கு மேலேயே போய்விடுகிறது !

தோட்டப் பையன் :—அதனுலேதான், ஸார், சம்பளத்தை உயர்த்தி விடுங்கள் என்று கேட்டுக்கொண்டு வருகிறேன்.

வட்ட மேஜை

★ கல்வி ஒலிபரப்பு

ஜனவரி 9ந் தேதி 'கல்கி'யில் 'வீட்டில் உள்ளவர்களுக்கு வேண்டாமா?' என்ற தலைப்பில் வளவனூர் பி. பார்வதி எழுதியதை நான் ரொம்பவும் ஆதரிக்கிறேன். மாதர்களுக்கு மத்தியான வேளை நிகழ்ச்சி எத்தனையோ மனச் சாந்தியைக் கொடுக்கிறது. முக்கியமாக வட நாட்டில் இருப்பவர்களுக்கு மத்தியான நிகழ்ச்சி ரொம்பவும் அவசியம். கேட்கும்பொழுது மனநிறைந்து ஒரு சந்தோஷம் ஏற்படுகின்றது. தமிழ்நாட்டில் இருப்பது போலவும் தோன்றுகிறது. இந்நிகழ்ச்சிகளை இன்னும் கொஞ்சம் நன்றாகக் கேட்கும்படியும் ரேடியோ நிலையத்தார் செய்யவேண்டும். மாதர் நிகழ்ச்சியில் பழைய காலத்து, கலாசாரங்கள் மறக்காமல் இருக்க சில விசேஷ நிகழ்ச்சியும், தையல், பூவேலை, இன்னும் வீட்டுக்கு வேண்டிய முக்கிய விஷயங்களையும் ஒலிபரப்ப வேண்டும். இந்நிகழ்ச்சியை அரை மணியிலிருந்து முக்கால் மணியாவது வைத்தால் நன்றாக இருக்கும்.

'கல்வி ஒலி பரப்பு' என்று சென்னை நிலையத்தில் பன்னிரண்டரை மணிக்கு ஒலி பரப்புகிறார்களே. அதை யாருக்காக ஒலி பரப்புகிறார்கள்? கல்வி ஒலி பரப்பு குழந்தைகளுக்காக என்றால், அந்த வேளையில் எந்தக் குழந்தை வீட்டில் இருக்கும்? படிக்கும் வயதிலுள்ள சிறுவர்கள் பள்ளிக்கூடம் சென்றிருக்க மாட்டார்களா? மேலும் எல்லா ஸ்கூல்களிலும் ரேடியோ வைத்திருக்கிறார்களா? ஆகையால் அந்தப் பன்னிரண்டரை மணி ஒலி பரப்பை எடுத்து விட்டுக் காலையிலோ அல்லது மாலையிலோ வைக்கலாம். ரேடியோ நிலையத்தார் கவனிப்பார்களா?

கல்கத்தா
21—1—49 என். ஜெயலக்ஷ்மி

○●○

★ கட்டுப்பாடு தேவை

தமிழ்ப் படம் பார்க்கப் போக வேண்டும் என்றால் கூடவே ஒர் சோற்று மூட்டையையும் கட்டிக்கொண்டு போகவேண்டும்.

ஆற்றில் விழப்போகும் அருந்ததி பாடிக்கொண்டே விழுவாள். விஷம் குடிக்கும் பிரகலாதன் விஷத்தைக் குடித்து விட்டுப் பிறகு ஒரு பாட்டுப் பாடிய பின்தான் மயங்கி விழுவான். சோக ரசம் சொட்ட வேண்டிய இடத்திலே கதாநாயகன் சொகுசாக ஒரு பாட்டைப் பாடிக் காண்பிப்பான்.

சில படங்களின் கதைப் போக்கு மிக அருமையாகச் சென்று கொண்டிருக்கும். இக்கதை எப்படி முடியப்போகிறதோ என்று நினைத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் (பிலிம் கிடைக்காத காரணத்தால்) திடீரென்று மகாவிஷ்ணு தோன்றுவார். கூடவே மணமேடையும் தோன்றும். படமும் மங்களமாக முடிந்து விடும். இம்மாதிரிப் படங்களை நீண்டதாக எடுத்துவிட்டு, பட ரசிகர்களின் குரல்வளையைப் பிடிப்பது போல் முடித்தால் யாருக்குத்தான் கோபம் வராது?

திருச்சியிலிருந்து சென்னை செல்லும் கதாநாயகனது பாகத்தைப் படம் எடுக்க வேண்டும் என்றால் திருச்சிக்கும் சென்னைக்கும் இடையில் உள்ள இருப்புப் பாதை அவ்வளவையும் படமாகப் பிடித்துத் தள்ளினால் கூட நாம் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. படமும் "டெம்போ" குறையாமல் மணிக்கு 30 மைல் வேகத்தில் ஓடும்!

ஆகவே தமிழ்ப் பட முதலாளிகளுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன்:—

நல்ல படம் தயாரிக்க முன் வாருங்கள். இல்லை என்றால் கடையில் நல்ல பூட்டுகள் இருக்கின்றன; உங்கள் "ஸ்டுடியோ"விற்கு நாதாங்கிகள் இருக்கும் என்று நம்புகிறேன்; இறுக்கிப் பூட்டுங்கள். சாவியைப் பசிபிக் பெருங்கடலில் எறிந்து விடவும். கலைக்கு நல்ல தொண்டு. சினிமாவும் சிறப்புறும்.

உறையூர்
25—1—49 மு. அரங்கராஜன்

○●○

கைத்தொழிலும் இயந்திரமும்

கதர் இயக்கத்தின் காரணமாக 1923-ம் வருஷம் சில பிரமுகர்களால் தீப்பெட்டி செய்யும் கைத்தொழில், சிவகாசி சாத்தூர் பிராந்தியங்களில் ஒரு குடிசைத் தொழிலாக ஆரம்பிக்கப்பட்டது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் எத்தனையோ இன்னல்களை எதிர்த்துப் போராடி, இப்பொழுது இந்தக் கைத்தொழில் ஓரளவு சிறப்பாக முன்னேறியிருக்கிறதெனலாம். சென்ற மகாயுத்தத்தின் போது, ஏனைய தொழில்களைப் போல், இக்கைத்தொழிலும், எதிர்பாராத முன்னேற்றமடைந்தது. அது சமயம் இயந்திரசாலைகளும் பெருகின.

யுத்தம் முடிவுற்றதும் ஏற்பட்ட வியாபார மந்தத்தின் காரணமாகவும் ஏற்கெனவே பன்மடங்கு பெருக்கப்பட்ட இயந்திர சாதனத்தைக் கொண்டு, கம்பெனியார் இரவு பகலாக வேலை செய்து நாடெங்கும் பரவியிருக்கும் தங்கள் விற்பனை ஸ்தாபனங்கள் மூலம், தங்கள் தீப்பெட்டிகளை ஏராளமாக விற்க முற்பட்டார்கள். மேலும் யுத்தத்தின் போது 50 குச்சிகள் கொண்ட தீப்பெட்டிகள் குரோஸ் ஒன்றுக்கு ரூ 1—12—0 ஆகவிருந்த வரியை இந்திய அரசாங்கத்தார் மீண்டும் யுத்தத்திற்கு முன்னிருந்த விகிதப்படி ரூ. 2—8—0 ஆகச் செய்துவிட்டார்கள்.

இவையெல்லாம் சேர்ந்து தீப்பெட்டிக் கைத்தொழிலைப் பாதித்தன. பல கைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையற்றுப் போனார்கள். பல அவசரச் செய்திகள் அனுப்பியும் அரசாங்கத்தார் இந்தக் கைத்தொழிலுக்குச் சலுகைகாட்ட முன்வரவில்லை. நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வரு

...இந்நிலை இன்னும் சில நாட்கள் ...டித்தால் இத்தொழிலே நசித்து விடும். ...சர்க்கார் இதை உடனே கவனித்துக் ...ளும் செய்யப் பட்ட தீப்பெட்டிகளுக்கு இயந்திரம் செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு விதிக்கும் ...ப விடக் குறைவாக விதித்துச் சலுகை காட்ட வேண்... அவ்வாறு செய்தால் தான் பலத்த போட்டியிடையே இத் தீப்பெட்டிகளை விற்பனை ...வது சாத்தியமாகும். முடிவிருக்கும் ...ழிலாளர்களைத் திறக்க முடியும். வேலை ...லாமல் திண்டாடும் தொழிலாளருக்கு ...ம் கிடைக்கும்.

...காசி
...1—49 ரங்கநாதன்

○●○

கடவுளே செய்தால்...?

...படங்களில் கடவுளின் பாகத்தை மிக ஆபாசமாகவும், கடவுளின் புனிதத் தன்மைக்குத் தீங்கு ஏற்படும்படியும், நடித்திருக்கிறார்கள். இதனால் மக்களுள் கருத்து வேற்றுமை ஏற்பட ஏதுவாகிறது. சில சினிமாப் படங்களில் கடவுளின் பாகங்கள் மிகவும் ...சமாக நடித்திருப்பதைக் கண்டு 'கடவுளே அப்படிச் செய்யும்போது நாம் செய்தால் என்ன?' என்கிறார்கள். இதனால் கடவுளின் புனிதத் தன்மை கெடுகிறது. சிலர் கடவுளை வெறுக்கும்படியாகவும் ஆகிறது.

...ழுத்தூர்
—1—49 கி. சண்முகம்

○●○

ரயிலடியில் ரேஷன்

...பம்பாய் சென்று வந்த நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். "என் சார், பம்பாய் எப்படி இருக்கிறது?" என்று விசாரித்தேன். ...னே அவருடைய முழு அனுபவங்களைப் ...றி ஒரு உபன்யாசம் செய்தார்.

"...ஆனால் ஒரு சௌகரியம். நாம் சென்னை...பார்க்காத சௌகரியம்!" என்றார்.

"...என்ன சற்று நிமிர்ந்து ஆவலுடன் ...என்ன?" என்று விசாரித்தேன்.

"பம்பாயில் ரயில்வே ஸ்டேஷனை விட்டு ...ங்கியதும் கொஞ்ச தூரத்திலுள்ள ஒரு ஆபீஸில் நம் பெயரைப் பதிவு செய்து ...ண்டால் உடனே அவர்கள் பதிவு செய்து ...ண்டவருக்கு இரண்டு தினங்களுக்கான ...ம்பரரி ரேஷன் கார்டைக் கொடுத்து ...விடுகிறார்கள். இரண்டு நாட்களுக்குள்ளாக ...ர்கள் வேண்டிய 'என்குயரி' முதலியவற்றை முடித்துக் கொண்டு புதிதாக வந்தவர்கள் எவ்வளவு நாள் தங்க வேண்டுமோ, ...வளவு தினங்களுக்கோ மாதங்களுக்கோ ...ளது நிரந்தரமாகவோ வேண்டிய ரேஷன் ...டைக் கொடுக்கிறார்கள். அப்படி அந்த ...ண்டு நாட்களில் அவர்கள் விசாரிக்க ...யவில்லையென்றால், இன்னும் இரண்டு ...ங்களுக்கு டெம்பரரி கார்டு கொடுக்...கள். புதிதாகப் போகிறவர்களுக்கு எவ்...வு சௌகரியம் பாருங்கள்!" என்றார்.

...து புதிதாகப் போகிறவர்களுக்கு மட்...ம் சௌகரியம்? புதிதாகப் போகிறவர்கள் ...த உறவினர் வீட்டில் தங்குகிறார்களோ ...ர்களுக்கும் சௌகரியந்தான்!

...தைக் கேட்டதிலிருந்து நம் சென்னை ...ம் ஏன் இவ்வாறு செய்யக்கூடாது என்று தோன்றுகிறது. இதை நம் சென்னை உணவுப் பகுதி அதிகாரிகள் கவனிப்பார்களா?

சென்னை
11—1—49 எம். என். சங்கரன்

○●○

இளம் வித்வான்கள்

ரேடியோவுக்கு வரும் எல்லா இளம் பாடகர் பாடகிகளும் பெயருக்காகவோ புகழுக்காகவோ வரவில்லை. மூக்காலே மூன்று வீசமும் தங்கள் படிப்புக்குச் சம்பளம் கட்டவும், விலைவாசி ஏறிப் போயிருக்கும் இந்தக் காலத்தில் ஓரளவு குடும்பத்துக்குப் பண உதவி புரியவும்தான் வருகிறார்கள்.

ஆனால், இதற்காக இளம் பாடக, பாடகிகள் பாடக் கூடாதென்பதை நான் ஆதரிக்க முடியாது. இப்பொழுது முன்னுக்கு வந்திருக்கும் பல பாடக பாடகர்கள் ரேடியோ ஸ்டேஷனிலேயே உலகத்திற்கு அறிமுகப்படுத்தப் பட்டவர்கள் என்பதை மறுக்கமுடியாது.

ஆகவே, இளம் வித்வான்கள் பாடுவது இன்னும் அதிகரிக்கப் படவேண்டும். சேற்றில் ஒரு செந்தாமரை முளைக்கக் கூடும். யார் கண்டது? சபைகளில் இளம் வித்வான்களை ஆதரிப்பது அவரவர்களை பொறுத்திருக்கும், அந்தஸ்துக்கும் தக்கபடி தான் இருக்கிறது. ரேடியோவிலும் இளம் வித்வான்களுக்குச் 'சான்ஸ்' கொடாவிட்டால் அவர்கள் முன்னுக்கு வருவது எப்படி?

கர்நாடக சங்கீதம் இதனால் தரம் குறைந்து விடுமென்று பயப்படக் காரணமில்லை. எந்த

லைபோ நூற்றாண்டுகளாக வளர்ந்து வரும் ஒரு கலையை அவ்வளவு சுலபத்தில் யாராலுமே அழித்துவிட முடியாது.

பொது ஜனங்களின் பணம் வீணாகிறதே என்றால், அதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால், இத்தனை வருடமாக அன்னியன் சுரண்டுவதைச் சகித்துக் கொண்டிருந்த நாம், இந்தப் பணம் நம் நாட்டு ஏழை சகோதர, சகோதரர்களுக்குப் பயன்படுகிறது என்று கொஞ்சம் ஆறுதலடையலாம்.

தியாகராய நகர்.
23—1—49 ரா. கிருஷ்ணவேணி

○●○

படத் தொழில் வண்டி

சென்ற இருபது வருட காலத்தில் படத் தொழில் வண்டி தமிழ்நாட்டில் பின்னோக்கித்தான் ஓடியிருக்கிறது. உலகத்தில் படத் துறை மகோன்னதம் அடைந்ததுடன் நில்லாமல் நுட்ப சாஸ்திரம் மூலமாக இன்னும் என்னென்ன அற்புதங்கள் சாதிக்கலாம் என்று போட்டி போடும் காலத்தில் தமிழ்நாட்டில் போட்டி ஒரே கதையைப் பல படம் பிடிப்பதிலேயே இருக்கிறது.

தமிழ்ப் படங்கள் இதுவரை புராணக் கதைகளையும் நாடோடிக் கதைகளையும் அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டிருக்கின்றன. சில சமூகப் படங்கள் நம்மை "கடவுளே, இந்தப் படமுதலாளிகள் உன்னையே வதை செய்யட்டுமே!" என்று நம்மைக் கூவும்படி செய்திருக்கின்றன. பழைய கலைக்களஞ்சியங்களிலிருந்து எடுக்கப்பட்ட Romeo and Juliet. Tale of Two Cities. Henry VIII. David Copperfield முதலிய இங்கிலீஷ் படங்களில் எவை சோடை போனவை? இந்த புகழ்ச்சி மாலையை நம் புராணப் படங்களுக்குச் சூட்ட முடியவில்லையே? நடிகர் விரும்பாததற்காக ராமர் ஜடாமகுடத்துக்குப் பதில் ஜில்பாக் குடுமியும், கிருஷ்ணன் முழுக்கைச் சட்டையும் போட்டு வரும்பொழுது நாம் எப்படி நம் படங்களைப் பார்த்து சந்தோஷப்பட முடியும்? ஒரு சார்லி சாப்ளினோ, ஒரு ரோனல்டு கால்மனோ ஒரு ஸ்பென்ஸர் டிரேஸியோ அல்லது ஒரு சார்ல்ஸ் லாப்டனோ தமிழ்ப்பட உலகில் எப்பொழுது உதயமாகப் போகிறார்கள்?

சினிமாப் படக் கட்டுப்பாட்டைப் பற்றி பலத்த சர்ச்சைகள் நடக்கின்றன. வட இந்திய ஹிந்திப் படங்களின் மணிப் படங்களான தேவதாஸ், டாகு மன்ஸூர், பிரஸிடெண்ட், அசூத் கன்யா, தான்சேன் போன்றவை பதினோராயிரம் அடிக்கு உட்பட்டவை. அந்தப் படங்களுக்கு இணையாகத் தமிழ்ப் படங்கள் பிடிக்கப் பட்டால் தமிழ்ப்பட ரசிகர்கள் தலையால் நடந்து சினிமாக் கொட்டகைகளுக்குச் சென்று காலணாச் டிக்கெட் வாங்கத் தயார்!

"Gone with the wind", "For whom the Bell Tolls" போன்ற படங்களை இந்தப் படக் கட்டுப்பாட்டினால் தமிழ்ப்பட உலகுக்குக் கொடுக்க முடியாதென்று சிலர் புலம்புகிறார்கள். நான் சொல்கிறேன்: மேற்கூறிய ஆங்கிலப் படங்கள் போன்ற நடிப்பு, கதை, டைரக்ஷன், மற்ற விசேஷ அம்சங்கள் இருக்கின்ற தமிழ்ப்படங்கள் பிடிக்க பல ஆண்டுகள் ஆகலாம். அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம் நம் பரம்பரை உயிரோடிருந்தால்.

மொத்தத்தில் சென்னை சர்க்கார் அடிக்கடி கட்டுப்பாடு செய்ததும் திருப்திகரமான விஷயம். புராணப் படங்களை எடுப்பதைத் தடை செய்வதும் விரும்பக் கூடியதுதான். நம் சர்க்கார் விரும்பினால் கூட ஒரு புராண படம் எடுப்பதற்கு ஒரு கதை இல்லை. அவ்வளவையும் பட முதலாளிகள் தீர்த்து விட்டார்கள். ஆனால் தணிக்கை போர்டு என்று ஒரு கும்பல் இருக்கிறதே அதில் கலை, சங்கீதம், நடிப்பு, ஒழுக்கம் முதலியவைகளில் உண்மை அக்கரை உள்ளவர்களை போடுவது நல்லதே ஒழிய சர்க்கார் உத்தியோகஸ்தர்களையும் மற்ற சில நான்தோன்றிகளையும் போட்டு வைப்பது மகா தவறு. இவர்களுக்கு அக்கரை படத்தை இலவசமாகப் பார்ப்பதில்தானே ஒழிய மற்றப்படி படங்களை முன்னேற யோசனைகள் கூறுவதில் அல்ல.

தியாகராய நகர்
16—1—49 கே. ஸ்ரீனிவாஸன்

○●○

மலையாளிகளின் மதிமயக்கம்

சென்னையில், தமிழகத்தின் தலைநகரில் 16-ல் நடந்த மலையாளிகள் மகாநாட்டிலும் 17-ல் கூடிய நிருபர்கள் கூட்டமொன்றிலும் "திருவிதாங்கூர்த் தமிழகம் தாய்த் தமிழகத்துடன் சேரவும் முடியாது, சேரவும் கூடாது" என்ற பழைய பல்லவியைப் பகிரங்கமாக ஸ்ரீ நாராயணப் பிள்ளை பாடியிருக்கிறார்.

திருவிதாங்கூர் மந்திரி, திருவிதாங்கூர் அரசாங்கம் தமிழர் வாழும்பகுதிக்கு அதிக ரூபாய் செலவிட்டிருப்பதாகவும் தமிழர்களை அவர்கள் நன்றாகக் கவனித்து வருவதாகவும் கூறினார். மலையாள அரசாங்கம் தமிழர்களுக்குச் செய்த நன்மை ஒன்று உண்டாயின் அது பேச்சிப்பாறை கட்டி உதவியதுதான். அதைக் கட்டி உதவியதற்காக உலகிலேயே எந்த இடத்திலும் இல்லாத தண்ணீர் வரியைத் தமிழர்கள் மீது சுமத்தி ஏராளமான பணம் பறித்து வருகின்றனர். தமிழர்களைக் கவனிப்பதெல்லாம் முதுகெலும்பை முறிப்பதில் தானே ஒழிய வேறு எதிலுமில்லை.

திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ், கேரள காங்கிரஸின் ஒரு பகுதி என்றும் தமிழர்களும், மலையாளிகளும் கலாச்சாரத்திலும், நாகரிகத்திலும் ஒன்றுபட்டவர்கள் என்றும் ஸ்ரீ நாராயணப் பிள்ளை பேசியிருக்கிறார். என்றைக்குச் சமஸ்தான காங்கிரஸ் கேரள காங்கிரஸோடு இணைந்து மலையாள காங்கிரஸாக மாறியதோ அன்று சமஸ்தான காங்கிரஸ் தமிழர்களுக்கும் பிரதிநிதித்வம் வகிக்கிறது என்ற மாயவாதத்தைத் தொலைக்கத் தோன்றியது திருவிதாங்கூரின் தமிழ்நாட்டுக் காங்கிரஸ். திருவிதாங்கூர் தமிழர்களின் நாகரிகம் கலை எல்லாம் மாறுபட்டது என்பது அங்கே வந்திருப்பவர்களுக்கு நன்கு தெரியும். தமிழகத் தலைவர் ஒருவர் நாகர்கோவிலில் செய்த சொற்பொழிவில் "குமரிமுனையில் கோயில் கொண்டுள்ள குமரிக் கடவுள் அணிந்திருக்கும் ஆடைகூடத் தமிழ் உடையே தவிர நாலரை முழமுள்ள மலையாள முண்டு அல்ல" என்று கூறினார்.

மயிலாப்பூர்
21—1—49 சி. எஸ். மணியம்

★ வட்ட மேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ 'கல்வி ஒலிபரப்பு' என்ற கடிதம் எழுதிய கல்கத்தா என். ஜெயலக்ஷ்மிக்கும், 'கட்டுப்பாடு தேவை' என்ற கடிதம் எழுதிய உறையூர் மு. அரங்கராஜனுக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press.
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras

கல்கி



ALKI பிப்ரவரி 6, 1949

4 அணா

REGD. NO. M. 4392

